விலை ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 | கதிர் 231 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆனி 30, வியாழக்கிழமை 14.07.2016

மஹஜன சம்பத
இன்றைய சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 14,065,454/-
தேசிய லொத்தர் சபை

## இலங்கைக்குப் பாராட்டு அமெரிக்கா வழங்கியது

கொழும்பு, ஜூலை 14

நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்புச் செயற்பாடுகளில் இலங்கை அரசு உறுதியான நடவடிக்கை எடுத்துள்ளது என்று பாராட்டியுள்ளது அமெரிக்கா. கொழும்பு வந்துள்ள அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலர் ரொம் மாலினோவ்ஸ்கி, அயலுறவுத்துறை அமைச்சர் மங்களவை நேற்றுச் சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தார். நல்லிணக்கச் செயல்முறைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் இலங்கைக்குப் பொருளாதார ஆதரவை அமெரிக்கா வழங் கும் என்றும் அப்போது தெரிவித்தார். (விரிவு பக்கம் 10)

## ஐ.நா. தனது பொறுப்புக்களை இலங்கை விடயத்தில் கைவிடாது

*பொதுச் செயலர் பான் கீ மூன் வலியுறுத்து*

கொழும்பு, ஜூன் 14

"பொறுப்புக்கூறும் விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்தும் உறுதியாக இருக்கின்றது. இலங்கை அரசுக்குரிய கடப்பாடுகளை முழுமையாக நிறைவேற்றி வைப்பதற்கான நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபை கைவிடாது."

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலாளர் பான் கீ மூன். இலங்கையின் போர்க்குற்ற விசாரணையில் பன்னாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற ஐ.நா. தீர்மானத்தில் இலங்கை அரசு உறுதியாக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (விரிவு 11 ஆம் பக்கம்)

## வித்தியா கொலை வழக்கு மரபணுப் பரிசோதனை விவரம் உரிய தருணத்தில் வெளிவரும்

யாழ்ப்பாணம், ஜூலை 14

வித்தியா கூட்டு வன்புணர்வுக் கொலை தொடர்பான குற்றப்புலனாய்வு அறிக்கைகள் சட்ட மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டன. ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று வழக்கு விசாரணைக்கு வந்தபோது இந்த விவரம் தெரிவிக்கப்பட்டது. கொலை தொடர்பில் நீதிமன்றுக்கு வழங்கப்பட்ட இரகசியச் சாட்சியங்களும் சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்படும் என்று நீதிவான் தெரிவித்தார். மரபணுப் பரிசோதனை அறிக்கைகள் உரிய நேரத்தில் வெளிப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். வித்தியா வாழ்ந்த கிராமத்தில் அவர் கொல்லப்பட முன்னரும் கொல்லப்பட்ட பின்னரும் இருந்த குடும்பங்களில் மாற்றம் இல்லை என்றும் மன்றில் தெரிவிக்கப்பட்டது. (விரிவு பக்கம் 2இல்)

## உணவு ராஜதந்திரம்



கொழும்பு, ஜூலை 14
அரசியல் சந்திப்புக்களுக்காகக் கொழும்புக்கு வந்துள்ள அமெரிக்காவின் இராஜாங்க உதவி செயலர் நிசா பிஸ்வால், அரச தொலைக் பக்.06

## யாழ். – வெள்ளவத்தை இடையே நாளை முதல் புதிய பேருந்து சேவை

யாழ்ப்பாணம், ஜூலை,14

யாழ்ப்பாணம் – வெள்ளவத்தை இடையே புதிய பேருந்து சேவை ஒன்றை இலங்கைப் போக்கு வரத்துச் சபை ஆரம்பிக்கின்றது. சபையின் யாழ்.சாலையும், ஹோமாகம சாலையும் இணைந்து நாளை வெள்ளிக்கிழமைமுதல் இந்தச் சேவையை இயக்கப்போகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தினமும் வெள்ளவத்தையில் இருந்து இரவு 7 மணிக்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து தினமும் இரவு 10 மணிக்கும் பேருந்து சேவைகள் ஆரம்ப மாகும். யாழ்ப்பாணம், வவுனியா, அனுராதபுரம், புத்தளம் ஊடாக இந்தப் பேருந்துகள் சேவையில் பக்.25

**பொருளாதார வலய அமைவிடச் சர்ச்சை**

# வவுனியா மாவட்டமே முடிவு செய்யவேண்டும்

*கொழும்பு அமைச்சரவை தீர்மானம் ஓயாமல் தொடர்கிறது சர்ச்சை*

யாழ்ப்பாணம், ஜூலை 14

பெரும் சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் வவுனியா பொருளாதார வலயம் எங்கே அமைய வேண்டும் என்பதை வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவே முடிவு செய்ய வேண்டும் என்று கொழும்பு அரசு தெரிவித்திருக்கிறது. இந்த முடிவு அமைச்சரவையால் எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கும் கடிதம் வவுனியா மாவட்டச் பக்.24



தாண்டிக்குளம் தான் வேண்டும் என்று நேற்றும் பேரணி (விரிவு: பக்கம் 2)

## சிறுப்பிட்டியில் கில்லாடிப் பெண் கைது

*கடன் பெற்றுத்தருவதாக 64 பேரை ஏமாற்றிய குற்றச்சாட்டில்*

யாழ்ப்பாணம், ஜூலை 14

வங்கியில் கடன் பெற்றுத்தரலாம் என்று 64 பேரை ஏமாற்றினார் என்று குற்றஞ்சாட்டப்படும் 'கில்லாடிப் பெண்' நேற்றுக் கைதுசெய்யப்பட்டார் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். ஆளுக்கு 5 ஆயிரம் ரூபாப்படி 3 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவை அந்தப் பெண் ஏமாற்றினார் என்றும் பொலிஸார் கூறினர்.

அரச வங்கி ஒன்றில் 5 லட்சம் ரூபா கடன் பெற்றுத் தரலாம் என்று ஆசைவார்த்தை கூறியே அனைவரையும் ஏமாற்றியிருக்கிறார். அவருக்கு உடந்தை பக்.23

## எம்பிக்கள்– எம்பிசிக்கள் சந்திப்பு வரும் சனியன்று

யாழ்., ஜூலை 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் (எம்பி) மாகாண சபை உறுப்பினர்கள் (எம்பிசி) இடையில் நாளை மறுதினம் சனிக்கிழமை வவுனியாவில் சந்தித்துப் பேசவுள்ளனர். இரு தரப்பினருக்கும் இடையில் ஒரு சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் இந்தக் கூட்டம் நடக்க உள்ளது. ஆனால் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கமாட்டார். உடல் நலக் குறைவு காரணமாக அவர் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். இதனால் கூட்டத்தில் பங்கேற்க முடியாதிருப்பதாக தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராசாவுக்கு அறிவித்திருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்ட பக்.06

## மைத்திரிக்காக வருத்தப்பட்ட மகிந்த

கொழும்பு, ஜூலை 14

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவின் கருத்தையே அவரது தனிப்பட்ட கருத்து என்று கூறித் தட்டிக்கழிக்கும் மோசமான நிலை இன்று நாட்டில் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வருத்தப்பட்டுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. மைத்திரி ரணில் அரசுக்கு எதிராகக் கண்டியிலிருந்து கொழும்புவரை பாதயாத்திரை நடத்தத் தீர்மானித்துள்ளது கூட்டு எதிர்க்கட்சி. இது குறித்து நேற்று அவர்கள் கொழும்பில் கூடிக் கலந்துரையாடினர்.

முன்னாள் ஜனாதி பக்.25

# சாம்பல்தீவுப் புத்தரால் ஆபத்தில் நல்லிணக்கம்

*நல்லாட்சி அரசு என்ன செய்கிறது எனச் சீறுகிறது மூதூர் இந்துக் குருமார் சங்கம்*

யாழ்ப்பாணம், ஜூலை 14

பௌத்தர்களின்வாடையே வீசாத சாம்பல் தீவில் புத்தர் சிலையை நிறுவி பௌத்த விகாரையை அமைத்தால் நல்லிணக்கம் எப்படிச் சாத்தியமாகும். மதரீதியாகக் கலவரங்களைத் தூண்டி விடும் பிக்குகள் அன்று தொடக்கம் இன்று வரையில் இருந்து கொண்டுதான் இருக்கின்றனர். இவர்களுக்குப் பாதுகாப்புத் தரப்பினர் முழுப் பாதுகாப்பையும் வழங்கி வருகின்றனர். நல்லாட்சி அரசு இவற்றை தெரிந்தும் பேசாமல் இருக்கின்றதா?

இவ்வாறு கேள்வி எழுப்பியது மூதூர் இந்துக் குருமார் சங்கம். சங்கத்தின் தலைவர் சிவசிறி பக்.24

## ஆலய மடத்தில் வல்லுறவு 21 வயதுப் பெண் முறையீடு

பருத்தித்துறை, ஜூலை 14

ஆலய மடத்தில் வைத்துத் தான் வன்புணரப்பட்டார் என்று 21 வயதுப் பெண் ஒருவர் பருத்தித்துறைப் பொலிஸில் நேற்று முறையிட்டார். குற்றஞ்சாட்டப்பட்டவர் நேற்றிரவு கைது செய்யப்பட்டார்.

சாவகச்சேரியில் உள்ள ஆலய மடம் ஒன்றிற்குத் பக்.23

## முள்வேலியை அகற்ற இராணுவம் மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

வட்டுவாகல் பாலத்திலிருந்து கடற்கரைக்குச் செல்லும் வீதியையும் ஏரிக்கரையில் இராணுவத்தினரால் அமைத்துள்ள முள் வேலியையும் அகற்றி மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு உதவுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வவுனியாவில் பொருளாதார வலயம் அமைய

# தாண்டிக்குளம்தான் பொருத்தம் விவசாயிகள் நேற்றுப் பேரணி



வவுனியா, ஜூலை 14
வவுனியா பொருளாதார வலயம் தாண்டிக்குளத்திலேயே அமைய வேண்டும் என்று வலியுறுத்தி வவுனியா மாவட்ட விவசாயிகள் நேற்றுக் கவனவீர்ப்புப் பேரணி நடத்தினர்.

பேரணி வவுனியா தினச் சந்தையடியில் ஆரம்பித்தது. மாவட்ட விவசாயிகள் அங்கு ஒன்றுகூடி பேரணியாக கண்டி வீதியில் பயணித்தனர். மாவட்டச்செயலகத்தை அடைந்த அவர்கள் மாவட்டச் செயலர் எம்.பி.புஸ்பகுமாரவை சந்தித்து தமது கோரிக்கை மனு வைக் கையளித்தனர். அது சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்தது.

வவுனியா பொருளாதார வலயத்தை தாண்டிக்குளத்தில் தான் அமைக்க வேண்டும் என்று அந்த மனுவில் விவசாயிகள் வலியுறுத்தினர். விவசாயிகளின் போக்குவரத்தைக் கருத்திற்கொண்டு இங்கேதான் பொருளா தார வலயம் அமையப் பெறவேண்டும் என்றும் குறிப்பிட்டனர்.

இந்தப் பேரணியில் வடமாகாண சபை உறுப்பினர் ஜெயதிலக, ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் மற்றும் விவசாயிகள் என்று பலரும் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களிடம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் பொருளாதார மத்திய நிலையம் ஓமந்தையில் அமையவேண்டும் என்று பெரும்பான்மையோர் விரும்பினர். இது தொடர்பான முடிவை வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தார். இதற்காக உழைத்தவர்களுக்கும் நன்றி பாராட்டியிருந்தார். இதைத் தொடர்ந்து இந்தப் பேரணி நடத்தப்பட்டது. (உ-5)

## கோப்பாய் பிரதேச செயலர் திடீர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 14
கோப்பாய் பிரதேச செயலராக இதுவரை கடமையாற்றிய ம.பிரதீபன் நேற்று முதல் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

வெற்றிடமாகியுள்ள கோப்பாய் பிரதேச செயலர் பதவிக்கு, நல்லூர் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலராக இதுவரை கடமையாற்றியவரான திருமதி சுபாசினி மதியழகன் நியமிக்கப்பட்டார்.

இந்த நியமனங்கள் நேற்று முதல் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக, யாழ். மாவட்டச் செயலகம் தெரிவித்தது. (உ-5)

## சடலம் மீட்பு

முரசுமோட்டை ஐயன்கோயில் ஆற்றில் குளிக்கச் சென்றவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார் என்றுபொலிஸார் தெரிவித்தனர். அதே இடத்தைச் சேர்ந்த மகாலிங்கம் சுமன் (வயது - 33) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். (உ 4)

## வித்தியா கொலை விசாரணை சட்டமா அதிபரிடம் அறிக்கை

**மரபணுப் பரிசோதனை விவரம் உரிய தருணத்தில் வெளிப்படுத்தப்படும் என்றது மன்று**

யாழ்ப்பாணம், ஜூலை 14
வித்தியா கூட்டு வன்புணர்வுக் கொலை வழக்கில் தம்மால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அறிக்கைகள் சட்ட மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்தனர். இதே வேளை, நீதிமன்றில் வழங்கப்பட்ட இரகசிய சாட் சியங்களும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்படும் என்று நீதிவான் தெரி வித்தார். மரபணுப் பரிசோதனை அறிக்கைகள் உரிய நேரத்தில் காண்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

> ❝ நீதிமன்றில் அந்த சாட்சியங்கள் இரகசியமானவை என்பதனால் சீல் வைக்கப்பட்டுள்ளன. ❞

புங்குடுதீவு மாணவியின் கோரக் கொலை தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் எம்.எம்.றியால் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. மன்றில் முன்னிலையாகியிருந்த குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரி, விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டன என்று நீதிமன்றில் தெரிவித்தார். அதற்கான சான்றாதாரமாக பதிவு இலக்கம் ஒன்றையும் மன்றிடம் வழங்கினார்.

இந்தக் கொலை தொடர்பில் நீதிமன்றில் இரகசியமாக வழங்கப்பட்ட வாக்குமூலங்களின் பிரதிகளைத் தம்மிடம் ஒப்படைக்கும்படியும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரி கோரிக்கை முன்வைத்தார்.

"அவை இரகசியமானவை என்பதனால் சீல் வைக்கப்பட்டுள்ளன, அவற்றைத் தரமுடியாது, அது நேரடியாகச் சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும்" என்று நீதிவான் தெரிவித்தார். கொலைச் சந்தேகநபர்களின் மரபணுப் பரிசோதனை அறிக்கைகள் பொருத்தமான இடத்தில் பொருத்தமான நேரத்தில் வெளிப்படுத்தப்படும் என்றும் நீதிவான் தெரிவித்தார்.

கடந்த தவணை வழக்கு விசாரணைக்கு வந்திருந்தபோது, வித்தியா வாழ்ந்த கிராமத்தில் அவர் கொல்லப்பட முன்னரும் கொல்லப்பட்ட பின்னரும் இருந்த குடும்பங்களின் எண்ணிக்கை, யாராவது வெளியேறியிருந்தால் அது பற்றிய விவரம் என்பவற்றை முன்வைக்குமாறு கிராம அலுவருக்கு நீதிமன்றம் பணித்திருந்தது. அந்த விவரங்கள் நேற்று மன்றில் தாக்கல் செய்யப்பட்டன. வித்தியா கொல்லப்பட முன்னர் கிராமத்தில் 30 குடும்பங்கள் இருந்தன. அவை தற்போதும் உள்ளன. ஒருவர் திருமணம் செய்து தனிக்குடியாகியதால் தற்போது 31 குடும்பங்கள் உள்ளன என்று மன்றுக்குத் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து வழக்கு விசாரணை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (உ 4)

## அரசுக்குள் உள்ள கருத்து மோதலை கூர்ந்து அவதானிக்கிறது அமெரிக்கா

**கூட்டமைப்பிடம் அதன் உதவிச் செயலர்கள் தெரிவிப்பு**



யாழ்ப்பாணம், ஜூலை 14
பொறுப்புக் கூறும் பொறிமுறை தொடர்பில் இலங்கை அரசுக்குள்ளே உள்ள கருத்து வேறுபாடுகளை அமெரிக்கா அவதானித்துக் கொண்டிருக்கின்றது. பொறுப்புக் கூறும் பொறிமுறை உருவாக்கப்படும் போதே அமெரிக்கா தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர் நிசா பிஸ்வால். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிசா பிஸ்வாலும் ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ரொம் மாலினோவ்ஸ்கியும் கொழும்பு வந்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அவர்கள் நேற்றுக் காலை சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

சந்திப்புத் தொடர்பில் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தாவது:

ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் இடம்பெறும் சீர்திருத்தங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் பேசப்பட்டது. அரசமைப்புத் திருத்த விவகாரம், ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல், பொறுப்புக்கூறல் என்பன குறித்து நீண்ட விவாதம் நடத்தினோம். இலங்கை அரசு முன்னெடுக்கும் முயற்சிகள் வெற்றிபெறுவதற்கு பன்னாட்டுப் பங்களிப்பு குறிப்பாக அமெரிக்காவின் உதவிகள் தொடரும் என்று அவர்கள் உறுதியளித்தனர்.

பொறுப்புக்கூறலில் பன்னாட்டுப் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக, அரசுக்குள் வேறுபட்ட கருத்துக்கள் வெளியாவதை அவதானித்திருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். இதுபற்றி, அந்தப் பொறிமுறை உருவாக்கப்படும் போதே பேசமுடியும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அரசியல் கைதிகள் விடுதலை, காணிகள் விடுவிப்புக் குறித்தும் பேசினோம். ஜெனிவா தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள பல விடயங்கள், மிகவும் தாமதமாகவே நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டினோம். இது தமக்கும் தெரியும், இதுபற்றி ஏற்கனவே அரசுடன் தாம் பேசியிருக்கிறோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில், ஏதேனும் சிக்கல்கள் இருந்தால், அதனை எதிர்கொள்வதற்கு அமெரிக்கா உதவத் தயாராக இருக்கிறது என்று அரசுக்குத் தாம் உறுதியளித்திருக்கிறோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர் - என்றார் சுமந்திரன். (உ-5,101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாமலிடம் நலம் விசாரிக்க மகிந்த அணி படையெடுப்பு

## அரசியல் பழிவாங்கலின் உச்சக்கட்டம் என்றும் சாடல்

கொழும்பு, ஜூலை 14
நிதி மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாமல் ராஜபக்சவைப் பார்வையிடுவதற்கு அவரது உறவினர்களும், மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் நேற்றுச் சென்றனர்.
நாமலிடம் சுகம் விசாரித்த அவர்கள், நல்லாட்சி அரசின் செயற்பாடுகளையும் கடுமையாக விமர்சித்துள்ளனர். 18 ஆம் திகதிக்குப் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்றும் ஆறுதல் கூறியுள்ளனர்.
சிறைச்சாலைக்குள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் யோகாப் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். ஏனைய கைதிகளுக்கும் யோகாப் பயிற்சியளித்து வருகின்றார். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தகவல் வெளியிட்டார்.
நாடாளுமன்ற உறுப்பினர். நாமல் ராஜபக்ச கைதானது அரசியல் பழிவாங்கலின் உச்சக்கட்டம் என்று தினேஷ் குணவர்தன சாடியுள்ளார்.
நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பவித்ரா தேவி வன்னியாராச்சி, பந்துல குணவர்தன, ரோகித அபேகுணவர்தன, ரஞ்சித் டி சொய்சா, கீதா குமாரசிங்க உட்பட மேலும் சில மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறைக்குச் சென்றிருந்தனர். நாமலின் தாயார் ஷிரந்தி ராஜபக்ச மற்றும் நாமலின் சகோதரர்கள் இருவரும் அங்கு சென்றனர். (ற-5)

## ஏகாதசி விரதம்

யாழ்ப்பாணம், ஜூலை 14
அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாக வரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை வெள்ளிக்கிழமை ஏகாதசித் தீர்த்தம் நடைபெறும்.
காலை 7 மணிக்கு விசேட அபிசேக ஆராதனைகளுடன் பூசைகள் வழமை போல் ஆரம்பமாகும். 9 மணிக்கு சமய நிகழ்ச்சிகள் இடம்பெற இருக்கின்றன.
முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து ஸ்ரீநாகவரத நாராயணர், பூமாதேவி, ஸ்ரீதேவி சமேதரராக அலங்காரத் தண்டிகையில் வீதியுலா எழுந்தருள்வார். (ற-160)

## ஏழாலையில் நாளை கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 14
ஏழாலை தெற்கு செரண்டிப் சிறுவர் இல்லம் நடத்தும் 4 ஆவது தையல் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.45 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
ஏழாலை தெற்கு தமிழ்ப் பொதுப்பணி மன்றத்தில் இந்த நிகழ்வுகள் இடம்பெறும்.
நிறுவனத் தலைவர் அரியகுட்டி கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், நா.லட்சுமி காந்தனும் கலந்து கொள்வர்.(4)

**கார் விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், கோப்பாயில்
Nission Sunny 13-XXXX
கார் விற்பனைக்குண்டு.
விலை 425,000/=
077 726 7817

**மேசன் வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் கட்டட நிர்மாண நிறுவனத்திற்கு மேசன், சட்டறிங் லேபர் வேலை தெரிந்தவர்கள் தேவை (நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாக வேலை வழங்கப்படும்).
தொடர்பு.0766222402

**புகைப்படப்பிரதியாக்கம்**
4R-8/=
பாஸ்போட், விசா.N.I.C
அளவிலான
புகைப்படப்பிரதிகளையும்
கலர்பிறிண்ட் மற்றும்
டியுறோ,கிளாஸ் பிறேம்களையும்
உடனுக்குடன் பெற்றுக்
கொள்ளலாம்.
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
யாழ் வீதி. மானிப்பாய்.
T.P: 077 949 5065

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**
வெற்றி வாரம்: 2782 திகதி 13.07.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
22 37 47 51 V
போனஸ் இல. 18
சனிக்கிழமை ஜக்பொட் ரூ. 14,928,125/-

**Galaxy Star**
வெற்றி வாரம் 074 திகதி 13.07.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
03 08 38 40 55
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 7,515,160/=

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**
டோமன் x ஜேர்மன் சப்பேட் குறஸ் நாய்க் குட்டிகள் தடுப்பூசி, பூச்சி மருந்து கொடுக்கப்பட்டு புத்தகத்துடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 1000 376

**ES Printers**
**Giftz**
Poster / Notice
Lable / Wedding
Card / Bag Print /
Award / Frame Item /
Batch / Vehicle Brand /
T-Shirt / Cap
ID Card / Key Tag
Book Mark /
Pen Print /
Book Printing /
Woodent Print
உங்கள் உறவினர்களுக்கு
அன்பளிப்பு பொருள்களை
எம் இணையத்தளம் ஊடாக
அனுப்பி மகிழுங்கள்
www.esgiftz.com
info@esgiftz.com



சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book)
காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும்
கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில்
குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.



#357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

**10% தொடக்கம் 50% வரையான விலைக்கழிவு**
வெளிநாட்டு உறவுகளே!
என்றும் நம்ப முடியாத விலைகளில்
- கல்வி சம்பந்தமான பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரையான புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள்.
- முன்னணி எழுத்தாளர்களின் எல்லா வகையான அரிய படைப்புக்களும் மலிவு விலையில்.
- ஆய்வுகூட உபகரணங்கள், பேப்பர் வகைகள், பிளாஸ்ரிக் பொருள்கள், எழுதுகருவிகள், அலுவலக உபகரணங்கள், பிளானல் போட்கள், வைற்போட்கள், பிலிப்சாட் போட்கள்.
- புறொயெக்டர்கள், இசைக்கருவிகள் ...

எந்த வகையான அன்பளிப்புபொருள்கள்,நன்கொடை வழங்கும் பொருள்கள் எதுவானாலும் நாட வேண்டிய இடம்....
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
இல. 212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல:021 222 5542 acdil@ymail.com

**திருமண வாழ்த்து**



காண்டீபன்
சரண்ஜா
இடம்: லண்டன்
இன்று
(14.07.2016)
வியாழக்கிழமை

வாழ்த்துவோர்:-
தர்மலிங்கம் (பெரியப்பா)
குலமணி (அத்தை)
ஆரணிக்கா (மைத்துனி)
விஜயமோகன் குடும்பம் (சுவிஸ்)
விஜய சங்கர் குடும்பம், அல்லாரை
பாஞ்சாலன் குடும்பம் (சுவிஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிப்பட்ட வீதிகளை பிரதேச சபைக்கு மாற்ற விரும்புபவர்கள் அறிவிக்கலாம்

## வலி. தெற்குப் பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

வலி. தெற்குப் பிரதேசத்தில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாத தனிப்பட்டவர்களின் வீதிகளைப் பிரதேச சபைக்குரிய வீதிகளாக மாற்றம் செய்ய விரும்புபவர்கள் வீதிகள் பற்றிய விவரங்களை ஒரு மாத காலத்துக்குள் பிரதேச சபைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று செயலாளர் அறிவித்தார்.

வலி. தெற்குப் பிரதேசத்தில் பிரதேச சபைக்குச் சொந்தமில்லாத தனிப்பட்டவர்களின் வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாமல் பல வருடங்களாக கைவிடப்பட்ட நிலையிலுள்ளன. அவற்றை பிரதேச சபைக்கு உரித்தான வீதிகளாக மாற்றுவதன் மூலம் அபிவிருத்தி செய்ய முடியும்.

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் அதிகார எல்லையினுள் அமைந்துள்ள 434 வீதிகள் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு வலி. தெற்குப் பிரதேச சபைக்கு உரித்தான வீதிகளாக ஜூன் மாதம் 17 ஆம் திகதிய வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டன.

வர்த்தமானியின் பிரதிகளை வலிகாமம் தெற்குப் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்திலும் உடுவில், சுன்னாகம், ஏழாலை உப அலுவலகங்களிலும் பிரதேச, கிராமசேவகர் அலுவலகங்கள் மற்றும் சனசமூக நிலையங்களிலும் பொதுமக் கள் பார்வையிட முடியும்.

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையால் இனங் காணப்பட்டுள்ள வீதிகளின் காணிகளில் உரிமையாளர்கள் எவராவது இருப்பின் தமது உரிமையை நிரூபிக்கக்கூடிய ஆவணங்களுடன் உரிய ஆட்சேபனைகளை, வர்த்தமானியில் அறிவித்த திகதியிலிருந்து ஒருமாத காலத்தினுள் சபைக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கலாம்.

> வலி. தெற்குப் பிரதேசத்தில் பிரதேச சபைக்குச் சொந்தமில்லாத தனிப்பட்டவர்களின் வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாமல் பல வருடங்களாக கைவிடப்பட்ட நிலையிலுள்ளன.

வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாத வீதிகள் இருப்பின் அந்த வீதிகளின் பெயர்களை வர்த்தமானியில் பிர சுரித்து சபைக்கு உரித்தான வீதிகளாகப் பதிவு செய் வதற்கான கோரிக்கைகளைப் பொது மக்கள் வலி காமம் தெற்குப் பிரதேசசபைக்கு சமர்ப்பிக்க முடியும் என்று சபைச் செயலாளர் தெரிவித்தார்.
(ற-5,115)

## அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு இடமாற்றங்கள்!

கொழும்பு, ஜூலை 14

அடுத்து வரும் வாரங்களில் அமைச்சுக்கள் சில வற்றின் செயலாளர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரசுக்கு சங்கடங்கள் ஏற்படுத்தும் வகையில்நடவடிக்கைகளை முன்னெடுத்தவர்களும், அமைச்சுக்குள் முன்வைக்கப்படும் வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு நல்காமல் இருக்கும் அமைச்சின் செயலாளர்களே பதவியிலிருந்து மாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று அரசின் உயர்மட்ட அதிகாரி தெரிவித்தார்.

அமைச்சுகளால் முன்னெடுத்த திட்டங்கள் தொடர்பாக ஒன்று கூடும் கூட்டங்களில் கலந்துக் கொள்ளாமை, அரச நாடக விழாவை சிறந்த முறையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யாமை போன்ற காரணங் களால் இந்த முடிவு எடுக் கப்பட்டுள் ளது என்று கூறப்படுகின்றது. (ற-5)

**பணியாளர் தேவை**

- கணக்கியல் தெரிந்த கணினி அனுபவம் உள்ளவர்கள்
- பொருள்கள் இறக்கி ஏற்றுபவர்கள்
- வாகன சாரதிகள்

Coca Cola Distributor
Siva Brothers
4th Lane, Brown Road , Jaffna
077 772 2215

# கேள்வி அறிவித்தல்

## மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

உள்ளூராட்சி மன்றங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்தல் மூலதன வேலைத்திட்டம் - 2016

| வேலை விவரம் | ஒப்பந்த இல. |
|---|---|
| 1. பஸ்தரிப்பிடம் அமைத்தல் - கோமரசங்குளம் | NP/14/43(5) 5.5/18/01/16 |
| 2. மகாறம்பைக்குளம் பி.எஸ்.சி.வீதி கொங்கிறீட் இடல் | NP/14/43(5) 5.5/18/02/16 |
| 3. வாகனத்தரிப்பிடம் அமைத்தல் - பிரதேசசபை அலுவலகம் - நெளுக்குளம் | NP/14/43(5) 5.5/18/03/16 |
| 4. சிறுவர்பூங்கா அமைத்தல் - ஓமந்தை | NP/14/43(5) 5.5/18/04/16 |

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசினது மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினுடைய உள்ளூராட்சி மன்றங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்தல் மூலதன வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு பகுதி மேற்படி திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், பெறுகைக்குழு, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வீதிபுனரமைப்பு, கட்டுமான வேலைக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, சித்திபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் அட்டவணையிற் காட்டப்பட்ட படி பொருத்தமான தரத்தில் வீதி, கட்டட அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா** (தொலைபேசி: 024 222 5737, மின்னஞ்சல் npvstps@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் 02.08.2016 ஆம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை கேள்விப்படிவத்தினை பார்வையிடல்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி படிவத்தை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா** எனும் இடத்திலிருந்து 12.07.2016 ஆம் திகதியிலிருந்து 02.08.2016 வரை காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/= (வரிகள் நீங்கலாக ) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர்/செயலாளர் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா** எனும் முகவரிக்கு 02.08.2016 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது) (20.09.2016) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை(ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்வி பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளளிக்கப் படும் பிணை வைப்பு | செல்லு படியாகும் காலம் |
| NP/14/43(5) 5.5/18/01/16 | பஸ்தரிப்பிடம் அமைத்தல் - கோமரசங்குளம் | 0.431Mn | 03 மாதம் | C 9 அல்லது அதற்கு மேல் | 4,500.00 | 18.10.2016 |
| NP/14/43(5) 5.5/18/02/16 | மகாறம்பைக்குளம் பி.எஸ்.சி.வீதி, கொங்கிறீட்இடல் | 0.853Mn | 03 மாதம் | C 9 அல்லது அதற்கு மேல் | 9,000.00 | 18.10.2016 |
| NP/14/43(5) 5.5/18/03/16 | வாகனத்தரிப்பிடம் அமைத்தல் - பிரதேசசபை அலுவலகம் நெளுக்குளம் | 0.889 Mn | 03 மாதம் | C 9 அல்லது அதற்கு மேல் | 9,000.00 | 18.10.2016 |
| NP/14/43(5) 5.5/18/04/16 | சிறுவர்பூங்கா அமைத்தல் ஓமந்தை | 1.323 Mn | 03 மாதம் | C 9 அல்லது அதற்கு மேல் | 13,500.00 | 18.10.2016 |

11. கேள்வி கோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 28.07.2016 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபைக் கட்டடத்தில் நடைபெறும் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்துகொள்ளமுடியும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நெளுக்குளம், வவுனியா.**
**12.07.2016**

(சி.24306) (13.18)

**தேவை**

2 பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு சிறிய வீடு ஒன்று வாடகைக்குத் தேவை. யாழ்ப்பாணம் திருநெல்வேலி பிரதேச எல்லைக்குள் விரும்பத்தக்கது.

076 560 7624

**JCB சாரதி தேவை.**

077 480 1734

**தவறிவிட்டது**

பெரிய அரசடி சாவகச்சேரியைச் சேர்ந்த தில்லைநடேசன் முருகதாஸன் என்பவரது தேசிய அடையாள அட்டை மதுவரி திணைக்கள கைக்குறிப்பேடு ஆகியவை கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் பேரூந்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 717 8069

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கியிருந்து வயதான பெண்ணைப் பராமரிக்கக் கூடிய பெண்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசப்படும்

077 627 7332

**லொறி விற்பனைக்கு உண்டு**

HF -xxxx இலக்கமுடைய ISuzu கூலர் லொறி வாகனம் விற்பனைக்கு உண்டு.

077 328 6519

**பெண் உதவியாளர் தேவை**

வயோதிபப் பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை.

077 628 4655

**வாடகைக்கு விடப்படும்**

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் 3 கடைகள் உள்ள கட்டடத் தொகுதி, 8அறைகள் கொண்ட விருந்தினர் விடுதி, மற்றும் வீடு என்பன வாடகைக்கு உள்ளன.

076 668 8206


**வேலையாள்கள் தேவை**

முத்துமாரி மெசினறீஸ் ஒப்பந்த நிறுவனத்திற்கு வெல்டர்ஸ் மற்றும் உதவியாளர்கள் தேவை.

071 346 6811 /
077 992 5960

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கியது 4½ கிலோ கஞ்சா சந்தேகநபர் ஒருவரும் கைது



யாழ்ப்பாணம், ஜூலை 14
நான்கரைக் கிலோ கிராம் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார்தெரிவித்தனர்.
"யாழ். செம்மணி வீதியில் கஞ்சாவுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது சந்தேகநபரைக் கைது செய்தோம்'' என்றனர் பொலிஸார்.
யாழ். குடாநாட்டின் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலையடுத்து நேற்றுக் காலை மேற்கொண்ட தேடுதலில் கஞ்சாவுடன் சந்தேகநபர் கைதானார். கச்சாய் வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த 34 வயதுடைய குடும்பத் தலைவர் ஒருவரே கைதுசெய்யப்பட்டவர். பொதி செய்யப்பட்ட கஞ்சாவை மாதகலிலிருந்து தென்மராட்சிக்கு எடுத்துச் சென்று மறைத்து வைத்துவிட்டுப் பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒருவருக்குக் கொடுப்பதற்காகப் பயணித்துக் கொண்டிருந்தபோதே சந்தேகநபரைத் தாம் கைது செய்தனர் என்று பொலிஸார் கூறினர். யாழ்ப்பாண நீதிவானிடம் முற்படுத்தப்பட்ட சந்தேகநபர் எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
கடந்த வாரமும் பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவர் 40 கிலோ கஞ்சா போதைப் பொருளுடன் பயணித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார்.
(உ 4,9,106,101)

# தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனா? இல்லை சுமந்திரனா?

## அரசுக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்கின்றார் அமைச்சர் மகிந்த சமரசிங்க

கொழும்பு, ஜூலை 14
"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனா? அல்லது சுமந்திரனா? என்பதில் அரசுக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது".
இவ்வாறு அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
போர்க் குற்ற விசாரணைகள் தொடர்பில் பன்னாட்டு நீதிபதிகளை நியமிக்க இலங்கை அரசு இடமளிக்கும். அரசமைப்பில் அதற்கான சிக்கல்கள் இல்லை. இவ்வாறு சுமந்திரன் வொசிங்டனில் தெரிவித்துள்ளார். அரசு என்ன நிலைப்பாட்டில் உள்ளது? என்று ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியிருந்தார்.
அமைச்சர் சமரசிங்க தெரிவித்ததாவது:
இலங்கை அரசு சரியான வகையில் செயற்படுகின்றது. பன்னாட்டு நீதிபதிகள் தேவையில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்தார் என்ற செய்தி ஒன்றைப் பத்திரிகையின் முன்பக்கத்தில் நான் அவதானித்தேன். அவர் தமிழ் மக்களின் தலைவர். அத்தோடு எதிர்க்கட்சித் தலைவர். அவ்வாறு இருக்கும் ஒருவர் சரியான வகையில் கருத்து ஒன்றை முன்வைக்கும் நிலையில், சுமந்திரன் பன்னாட்டு அரங்கில் தெரிவிக்கும் கருத்துக்கள் எந்தளவு முக்கியம் பெறும்?. உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனா? அல்லது சுமந்திரனா? என்பதில் அரசுக்குச் சந்தேகம் ஏற்பட்டது.
சம்பந்தன் பொறுப்புமிக்க கருத்து ஒன்றை முன்வைத்துள்ள நிலையில், அதையும் மீறிய வகையில் சுமந்திரன் கூறுவது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகுமா? என்று நாம் கேள்வி எழுப்புகின்றோம் – என்றார். (ற-5)

# கோத்தாவின் பாதுகாப்புக் குறைப்பு பாதுகாப்புப் பேரவையின் தீர்மானம்

## இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 14
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டிருந்த இராணுவப் பாதுகாப்பு நீக்கப்பட்டுப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நியமிக்கப்பட்டுள்ளமை பாதுகாப்புப் பேரவையின் தீர்மானமேயாகும். அதனைத் தடுக்க முடியாது.
இவ்வாறு இராணுவ ஊடகப் பேச்சாளர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்தார்.
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டிருந்த 50 இராணுவ வீரர்களில் 25 இராணுவத்தினரை நீக்கி, அதற்குப் பதிலாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நியமிக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் காலையில் இருந்து இது நடைமுறைக்கு வரும் வ்கையில் தீமானம் எடுக்கப்பட்டது.
இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்ததாவது;
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு 50 இராணுவத்தினர் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டது. அதில் 25 பேரை குறைத்து அதற்குப் பதிலாக பொலிஸ் விசேட அதிரடிப் படையை நியமிப்பதென்று தீர்மானம் எடுக்கப்பட்டது. முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜ பக்சவுக்கு வழங்கப்பட்டிருந்த இராணுவ பாதுகாப்பை முற்று முழுதாக நீக்குவதா இல்லையா என்பது தொடர்பில் பாதுகாப்புச் சபையில் ஆராயப்பட்டது.
இப்போதுவரையில் வழங்கப்பட்டிருக்கும் இராணுவப் பாதுகாப்பில் பாதியளவு குறைத்து அதற்குப் பதிலாக பொலிஸ் விசேட அதிரடிப்படையை வழங்க பாதுகாப்புச் சபை தீர்மானம் எடுத்தது.
நாட்டில் நிலவும் அமைதியான சூழல் மற்றும் அச்சுறுத்தல் எவையும் இல்லாத நிலைமைகளை கவனத்தில் கொண்டு, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. பாதுகாப்புச் சபையின் தீர்மானமாகும். அதனைத் தடுக்க முடியாது. இதேபோல் இப்போது வழங்கப்பட்டுள்ள பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் நன்று பயிற்றுவிக்கப்பட்டவர்கள். அவர்களாலும் சரியான பாதுகாப்பை அவருக்கு வழங்க முடியும் – என்றார். (ற-9)

# வீரமக்கள் தின நிகழ்வு கோயில்குளத்தில் நேற்று



வவுனியா, ஜூலை 14
புளொட் அமைப்பின் 27ஆவது வீரமக்கள் தின நிகழ்வுகள் நேற்றுக் காலை வவுனியா–கோவில் குளத்தில் அமைந்துள்ள உமா மகேஸ்வரன் இல்லத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் உப தலைவர்களில் ஒருவரும் முன்னாள் உப நகர பிதாவுமாகிய க.சந்திரகுலசிங்கம் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.
தமிழர் விடுதலைக் கூட்டணியின் மறைந்த செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கத்தினதும், கழகத்தின் மறைந்த செயலதிபர் க.உமாமகேஸ்வரனினதும் உருவப்படங்களுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.
நிகழ்வில் செ.வை.தேவராசா, சுத்தானந்த இந்து இளைஞர் மன்றத் தலைவர் நா.சேனாதிராசா, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கு.ரவீந்திரநாதன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் செயற்குழு உறுப்பினரும் வட மாகாண சபை உறுப்பினருமான ஜி.ரி.லிங்கநாதன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் உப தலைவர்களில் ஒருவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான வை.பாலச்சந்திரன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.யோகராஜா மற்றும் செயற்குழு உறுப்பினர்களான குகதாசன், சு.காண்டீபன், மாவட்ட செயற்குழு நிதிப் பொறுப்பாளர் நிசாந்தன், மாவட்ட குழு உறுப்பினர்களான ஆட்டோ சங்கத் தலைவர் ரவி, மூர்த்தி ஆகியோருடன் கழக உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ற)

மணிவிழாவும் சேவைநலன் பாராட்டும்




திருமதி தனரஞ்சுகமணி இலட்சுமிகாந்தன்
(உப அதிபர்) (B.Ed 2nd Class)

ஆசிரியப் பணியில் 34 ஆண்டுகள் அரும்பணியாற்றி எமது பாடசாலையில் ஆசிரியராக, உப அதிபராகச் சமயச் சொற்பொழிவுகளால் ஆன்மீகத்தை வளர்த்த உப அதிபர் அவர்கள் நேற்று (13.07.2016)புதன்கிழமை ஓய்வுபெற்று இன்று (14.07.2016) வியாழக்கிழமை மணிவிழாக்காணும் வேளையில் அவரது ஓய்வுகாலம் இனிதே அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சேவை விவரம்
கிளி/கனகபுரம் அ.மி.த.க.வித்தியாலயம் - 17.05.1982 - 31.03.1989
யா / இளவாலை மெய்கண்டான் ம.வி - 01.04.1989 - 26.06.1994
யா/ ஆனைக்கோட்டை றோ.க.த.க.வித். - 27.06.1994 - 31.12.1998
யா/ இளையதம்பி இந்து வித்தியாலயம் - 01.01.1999 - 13.07.2016

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்,
யா/ இளையதம்பி இந்து வித்தியாலயம்.

வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(C/24806) (11,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னங்கன்றுகள் வழங்கல்

கொழும்புத்துறை, ஜூலை 14
யாழ். கொட்டடி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் அனுசரணையில் தென்னங் கன்றுகள் வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.
நிலையத்தலைவர் நா. தனேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சர்வோதய அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளர், தெங்குப் பயிர்ச்செய்கை சபை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொள்வர்.
(ற-135)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்
10 . 01 . 1927

விண்ணுலகில்
26 . 06 . 2015

## திருமதி சோதி பொன்னுத்துரை

திதி: 14.07.2016 (வளர்பிறை தசமி)

அன்பின் திருவுருவமாய் எமக்கு
வழிகாட்டியாய் இருந்து
எம்மை வளர்த்தெடுத்து வாழ்வித்த
எங்கள் அன்புத் தெய்வமே! அம்மா.
பாசம் நிறைந்த உங்கள் நினைவுகள்
ஓராண்டு கடந்திட்ட போதிலும்
எம் மனங்களை விட்டு அகலாது - உங்கள் பிரிவை
மறப்பதற்கு முயற்சித்தோம்
எம்மால் அது முடியவில்லைத் தாயே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(சி.24305) (13.18.17)

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்.


# மகிந்தவை அடைத்த சிறைக்குள் நாமல்!

கொழும்பு, ஜூலை 14
மகிந்த ராஜபக்ச 30 ஆண்டுகளுக்கு முன்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்ட சிறைக்கூடத்திலேயே நாமல் ராஜபக்ச சிறை வைக்கப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. புதிய மகசின் சிறைச்சாலையில் 'ஈ' பிரிவில் அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.
நாமல் ராஜபக்சவுக்கு ஏனைய சந்தேகநபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகளே வழங்கப்பட்டுள்ளன. அவருக்கு தூங்குவதற்காக துணி மட்டும் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது.
நாமல் ராஜபக்ச சிறைச்சாலை உணவு வேண்டாம் என்று தெரிவித்து வீட்டிலிருந்தே உணவைப் பெற்றுச் சாப்பிட்டு வருகின்றார்.
நாமல் ராஜபக்ச சிறை வைக்கப்பட்டுள்ள சிறைக்கூடத்திலேயே, 30 ஆண்டுகளுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதியும் நாமலின் தந்தையுமான மகிந்த ராஜபக்ச சிறை வைக்கப்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
(ற-5)

## எம்பிக்கள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு இடையிலான கூட்டம் கடந்த ஜுன் மாதம் 25ஆம் திகதி கொழும்பில் நடந்தது. அந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு இடையில் விரைவில் கலந்துரையாடல் நடத்தப்படவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.
(உ -5-101)

## உணவு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காட்சி யின் சமையல் நிகழ்ச் சியில் நேற்று பங்கேற்றார். ரூபவாஹினி தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகும் சமையல் நிகழ்ச்சியில் பிரபல சமையற்கலை நிபுணரான பப்ளிஸ் சில்வாவின் வழிகாட்டலில், பிஸ்வால் உள்ளூர் உணவைச் சமைத்துச் சுவைக்கக் கொடுத்தார். எனினும் இந்த உணவு இராஜதந்திரம் குறித்து அவரது பயணக் குறிப்பில் முன்னதாக எதுவும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.
(உ-5)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் மிருதங்க ஆசிரியர்
திரு. சின்னையா துரைராசா
அவர்களின் அன்புத் தாயார்

*மகேஸ்வரி சின்னையா*

அவர்கள் அமரரான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைந்துள்ளோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கலைத்தூது அழகியல் கல்லூரி,
திருமறைக் கலா மன்றம்
128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.





# மரண அறிவித்தல்

## திருமதி இராஜேஸ்வரி இரத்தினம்



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி இரத்தினம் 12.07.2016 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கார்த்திகேசு இரத்தினம்(ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் தங்கம்மா(மலேசியா), காலஞ்சென்றவர்களான நல்லம்மா, இராசையா, வீரசிங்கம், முத்தம்மா, தேவராசா, திலகராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான கமலாதேவி, இராஜகோபால் மற்றும் கனகசிங்கம்(கனடா), சிவராஜா(கொழும்பு) காலஞ்சென்ற ரதிதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் சந்திரகுமாரி, சிறிதரன்(கனடா), விசாகேஷ்வரன்(கனடா), கங்காதரன்(ஜேர்மனி), இந்திரகுமாரி, தயாநிதி(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவகுமாரன்(ஓய்வுபெற்ற ஆசிரியர் - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்), வதனி(கனடா), சுனித்ரா(கனடா), லக்சுமி (ஜேர்மனி), துளசிதரன் (ஆசிரியர் - உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை), விஜிஜேந்திரன்(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பிரகாஷ், பிரசாந், சகிலா, தனுஜா, கௌதமன், அபிராமி, அஷ்ஷன், அபிநா, ஆருணியா, பிருந்தா, அச்சுதன், மாநிலா, வைஷ்ணவி, சபிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (15.07.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு இருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கற்பகப் பிள்ளையார் வீதி,**
**உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயர்ப் பலகைகளில் மும்மொழியும் சம அளவில் எழுதப்பட வேண்டும்

## அமைச்சர் மனோ கணேசன் பணிப்பு

கொழும்பு, ஜூலை 14
அரச நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் மூன்று மொழியிலும் சம அளவில் எழுதப்பட வேண்டும். தமிழில் குறுக்கி சிறிதாக எழுதுவது, பிழையாக எழுதுவது போன்றவற்றை நிறுத்த வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சால், அரச கரும மொழிக்கொள்கை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடத்தப்பட்டது. சகல அமைச்சுக்களின் செயலாளர்களும் அழைக்கப்பட்டனர். இங்கு அமைச்சர் மனோ கணேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:
அரசியல்வாதிகள் திட்டங்களைத் தீட்டலாம். சட்டங்களை ஆக்கலாம். அவை நடைமுறையாவது அமைச்சரவை அமைச்சுச் செயலாளர்களின், மாவட்டச் செயலாளர்களின், பிரதேச செயலாளர்களின் மூலமாகத்தான் என்பதை மிக குறுகிய காலத்துக்குள் நன்கு அறிந்து கொண்டுள்ளேன்.

நாட்டின் அனைத்து இனங்களின், மதங்களின், மொழிகளின் மத்தியிலான தேசிய சகவாழ்வுக்கான சாவி உங்கள் கரங்களில்தான் இருக்கின்றது. தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதன் ஆரம்பம், அரசகருமமொழிகள் கொள்கையை நடைமுறைப் படுத்துவதிலும், குறிப்பாகத் தமிழ் மொழிக்கு வரலாற்று ரீதியாக மறுக்கப் பட்டுள்ள உரிமை வழங்கப்படுவதிலும்தான் தங்கியுள்ளது.

தமிழ் மக்களின் கோரிக்கைகள் அனைத்தையும் எப்போதும் எதிர்த் துக் கொண்டே இருப்பவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதுதான் மொழியுரிமை. நாட்டில் மொழிச் சட்டம் இருக்கிறது. நான் எந்தவித விட்டுக் கொடுப் புக்கும் இடம் கொடுக்கப் போவதில்லை. நாடு முழுக்க பொதுவாக சிங்களம், தமிழ் இரண்டும் ஆட்சி மொழிகள். ஆங்கிலம் இணைப்பு மொழி. வடக்கு, கிழக்கில் தமிழிலும், ஏனைய மாகாணங்களில் சிங்களத்திலும் அரச ஆவண பதிவுகள் இருக்கும். இரு மொழி பிரதேச செயலக பிரிவுகளில், இரண்டு மொழிகளும் பயன்படுத்தப்பட வேண்டும். அரச நிறுவனங்களில் உள்ளக, வெளியக அறிவிப்பு பெயர்ப் பலகைகள் மூன்று மொழிகளிலும் இடம் பெற வேண்டும். வடக்கு, கிழக்கில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்ற வரிசையிலும், ஏனைய மாகாணங்களில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்ற வரிசையிலும் எழுதப்பட வேண்டும். மூன்று மொழிகளிலும் ஒரே அளவில் எழுத வேண்டும். பெயர்ப் பலகைகளில் தமிழில் குறுக்கி சிறிதாக எழுதுவதை நிறுத்துங்கள். பிழையாக எழுதுவதை நிறுத்துங்கள்.

**" வடக்கு, கிழக்கில் தமிழ், சிங்களம், ஆங் கிலம் என்ற வரிசையிலும், ஏனைய மாகாணங்களில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்ற வரிசையிலும் எழுதப்பட வேண்டும். மூன்று மொழிகளிலும் ஒரே அளவில் எழுத வேண்டும். "**

அடுத்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில், ஒவ்வொரு அமைச்சுகளுக்கும், மொழிச் சட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கு மட்டும் விசேட நிதி ஒதுக்கீடு வழங்கப்படும். எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த பணம் இல்லை என்ற பதிலை எனக்குத் தர முடியாது. எல்லாப் பெயர் பலகைகள், எல்லா அமைச்சுப் படிவங்கள் ஆகியவற்றில் தமிழ் மொழியும் இருந்தே ஆகவேண்டும். அதற்கு நிதி தேவையானால், அதை இப்போது எனது அமைச்சு உங்களுக்கு வழங்கும்.

சகவாழ்வு, மொழியுரிமை தொடர்பில் பற்பல அமைச்சரவைப் பத்திரங்களை எதிர்வரும் நாள்களில் நான் சமர்ப்பிக்க உள்ளேன். இவை கடந்த காலங்களில் ஒருபோதும் நடைபெறாதவை. எனது பொறுப்பை நான் அலட்டிக்கொள்ளாமல், அவசரப்படாமல், ஆனால் காத்திரமாக செய்து வருவதாக நம்புகிறேன். உங்கள் ஒத்துழைப்பு எனக்கு வேண்டும் - என்றார். (ந-5)

### சுற்றுச் சூழல் சட்டங்களை மீறியோருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 14
சுற்றுச்சூழல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 395 வழக்குகளுக்கு 4 லட்சத்து 14 ஆயிரத்து 500 ரூபா தண்டம் கடந்த ஆண்டு விதிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய சுற்றுச் சூழல் பிரிவு புள்ளி விவரத் தகவல்களில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்பு பரவக்கூடிய வகையில் தேங்காய் கோம்பைகள், ஐஸ்கிறீம் கிண்ணங்கள் மற்றும் அவற்றுக்கு ஏதுவான சூழலை வைத்திருந்த குற்றச்சாட்டு தொடர்பில் 373 வழக்குகள் யாழ்ப்பாண நீதிவான்மன்றில் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றுக்குத் தண்டமாக 3 லட்சத்து 96 ஆயிரத்து 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அவற்றில் பொது இடத்தில் குப்பை போட்டமை தொடர்பில் 6 வழக்குகளுக்கு 5 ஆயிரம் ரூபாவும், போக்குவரத்துக்கு இடையூறாகவீதியின்கல், மணலை குவித்து நிர்மாண வேலைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 3 வழக்குகளுக்கு 2 ஆயிரம் ரூபா தண்டமாக அறவிடப் பட்டுள்ளது.

பாதசாரிகள் கடவையைப் பொருட்படுத்தாது அந்தப் பகுதியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டமை தொடர்பில் 3 வழக்குகளுக்கு 1,500 ரூபாவும், நடைபாதை வியாபார நட வடிக்கையில் ஈடுபட்டமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட 10 வழக்குகளுக்கும் தலா 1,000 ரூபா வீதம் 10,000 ரூபாவும் தண்டம்விதிக்கப்பட்டுள்ளது. (ந-5-107)



மன்னார் மாவட்டத்தில் 10 குடும்பங்களுக்கு குழாய்க் கிணறு அமைத்துக் கொடுப்பதற்காக 6 லட்சம் ரூபா நிதி மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாவால் நேற்று வழங்கப்பட்டது. அடம்பன், பள்ளிவாசல்பிட்டி போன்ற பகுதிகளில் வாழும் 10 குடும்பங்கள் பயனடையவுள்ளனர்.
மௌலவி எஸ்.எச்.எம்.முபாரக் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே 6 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ந-5)

### காலாவதியான பொருள்கள் விற்றோருக்கு தண்டம்

காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த 15 வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்று நேற்று தலா 9 ஆயிரம்ரூபாவீதம்தண்டம்விதித்தது. யாழ்.மாவட்ட பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை அலுவலர்கள் தென்மராட்சி பிரதேசத்தில் மேற்கொண்ட திடீர் பரிசோதனைகளின் வர்த்தகர்கள் சிக்கினர். சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்குகளை தனித்தனியாக விசாரித்த நீதிவான் வர்த்த கர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தண்டம் விதித்தார். (ந-9)

# கப்பம் பெற்ற போலி சிப்பாயை மறியலில் வைக்குமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 14
இராணுவச் சீருடையுடன் யாழ்.நகர வர்த்தகர்களிடம் கப்பம்பெற்ற இராணுவப் பொலிஸார் ஒருவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத்தளை - ரத்தோட்ட பகுதியைச் சேர்ந்த பியந்த தமன்த கேவகே (வயது-34) என்ற இராணுவ பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்.நகர வர்த்தகர்களிடம் 2 லட்சத்து 63 ஆயிரம் ரூபாவைக் கப்பமாகப்பெற்றகுற்றச்சாட்டில்கைதுசெய்யப்பட்டார். 4 ஆவது இராணுவ பொலிஸ் பிரிவில் 2014 ஆம் ஆண்டு வரை பியந்த பணியாற்றினார். 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி இராணுவப் பொலிஸிலிருந்து கட்டாய ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. இராணுவப் பொலிஸ் கடமையில் இருக்கும் போதும் நிதிமோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டிலேயே அவருக்குக் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வாரம் இராணுவத்தினர் அணியும் சீருடையுடன் யாழ்.நகர வர்த்தகர்களிடம் பியந்த கப்பம் கேட்டார் என்று குற்றம் சுமத்தப்படுகின்றது. வர்த்தகர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். தகவல்களைப் பெற்றுக் கொண்ட பொலிஸார், வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமராக்களின் உதவியுடன் விசாரணை மேற்கொண்டனர்.

கடந்த திங்கட் கிழமை பியந்த கப்பம் பெற்ற வேளையில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் அவரைக் கைது செய்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர். 2 லட்சத்து 63 ஆயிரம் ரூபாவை நகர்ப்புற வர்த்தகர்களிடமிருந்து அவர் கப்பமாகப் பெற்றுக் கொண்டுள்ளமை தெரியவந்தது.

யாழ்ப்பாணம் நீதிவான் மன்று முன்பாக நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை பொலிஸார் முற்படுத்தினர். (ந-5-101-106)

### பொலிஸ்க்கு அரச சாராயம் விற்றவருக்கு தண்டம்

சாவகச்சேரி, ஜூலை 13
சிவில் உடையில் சென்ற பொலிஸ் உத்தியோகத்தருக்கு அரச சாராயம் விற்றவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது சாவகச்சேரி நீதிமன்று.

சாவகச்சேரிப் பொலிஸார் மட்டுவில் தெற்குக்கு சிவில் உடையில் சென்றனர். உத்தியோத்தர் ஒருவர் சாராயம் வாங்கச் செல்வது போன்று சென்று குறித்த நபரைக் கைது செய்தார்.

இது தொடர்பான வழக்கு நீதிமன்றில் தாக்கல் செய்யப் பட்டது. சந்தேகநகர் குற்றச் சாட்டை ஏற்றுக் கொண்டார். நீதிமன்று தண்டம் விதித்தது. (ந-9)

### ஆனிப் பொங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 14
நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலய வருடாந்த ஆனிப் பொங்கல் விழா நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

காலையில் விசேட பூசைகள், அபிசேகங்கள் இடம்பெற்று மாலையில் பொங்கல் வைபவம் நடைபெறும். (ந-17)

### குறும்படம் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 14
பெற்றோர்களை பிள்ளைகளே பராமரிக்க வேண்டும் என்ற தொனிப்பொருளிலான காலச்சக்கரம் என்ற குறுந்திரைப் படம் கைதடி அரச முதியோர் இல்லத்தில் குளிரூட்டப்பட்ட திரையரங்கில் வெளியிடப்படவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்தத் திரைப்படம் திரையிடப்படும் என்று இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

வேலணையைச் சேர்ந்த என்.கண்ணதாஸ் இந்தத் திரைப்படத்தை தயாரித்து வழங் கியுள்ளார்.

காலச்சக்கரம் என்ற பெயரில் தயாரித்து வழங்கப்படவுள்ள இந்த குறுந்திரைப்படத்தில் கைதடி முதியோர் இல்ல முதியோர்களுடன் குழந்தை நட்சத்திரங்களான ஜே.சரண்யா, எஸ்.தனுசா ஆகியோர் நடித்துள்ளனர்.

பிள்ளைகள் தான் தமது பெற்றோர்களை வைத்து பராமரிக்க வேண்டும் என்ற பொருளில் இந்த திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குறுந் திரைப்படத்தைச் சகலரும் வருகை தந்து பார்வையிடுமாறு அத்தியட்சகர் கேட்டுள்ளார். (ந-17)

### மயான சுற்று மதிலுக்கு அடிக்கல்

அச்சுவேலி, ஜூலை 14
அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயான சுற்று மதில் அமைப்பு வேலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடை பெறும். மயான அபிவிருத்திச் சபையின் தலைவர் ம. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வலி.கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன் வலி.கிழக்கு பிரதேச சபை செயலாளர் ஜெ.ஜெலீபன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டு அடிக்கல் நடுவர். (ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிபந்தனையை மீறி மணல் ஏற்றிய டிப்பர் வாகனம் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனையை மீறி மணல் ஏற்றிவந்த டிப்பர் வாகனம் தடுத்துவைக்கப்பட்டது என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை மாலை புத்தூர் சந்திப் பகுதியில் வீதி ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் புத்தூர் - மீசாலை வீதியூடாக வந்த மேற்படி டிப்பர் வாகனத்தை மறித்துச் சோதனையிட்டனர்.

வழங்கப்பட்ட நிபந்தனைகளை மீறி நேரம் தாழ்த்தி மணல் ஏற்றி வந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. வாகனத்தைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ள பொலிஸார், சாரதிக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ற-5-107)

# மரக்கறி இரசாயன ஆய்வு நிலையம் வடக்கில் அமைக்கப்பட வேண்டும்

## சுகாதாரப் பகுதியினர் கோரிக்கை

தென்மராட்சி, ஜூலை 14

யாழ்.மாவட்டத்தில் மரக்கறி வகைகள் மற்றும் பழ வகைகளால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்க்க வடமாகாணத்தில் அவற்றை உடனுக்குடன் பகுப்பாய்வு செய்யக்கூடிய இரசாயன ஆய்வு மையம் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு சுகாதாரப் பகுதியினர் கோரிக்கை விடுத்தனர்.

நேற்றுச் சாவகச்சேரிச் சந்தைக்குக் கொண்டுவரப்பட்ட கீரை வகைகளைப் பரிசோதனை செய்தநகர்ப் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர், இரசாயனப் பொருள்கள் விசிறப்பட்டதா என அறிய கீரை வகைகளை முகர்ந்ததில் ஒருவிதப் பாதிப்புக்கு உள்ளானார். பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்தே அவர் சோதனை நடத்தினார்.

கீரை வகைகளைப் பரிசோதனைக்காகக் கொழும்பு பத்தரமுல்லையில் உள்ள பகுப்பாய்வு இரசாயன ஆய்வு மையத்துக்கு அனுப்பி அங்கிருந்து அறிக்கை வர 15 தினங்களாகும் என்பதால் குறித்த கீரை வகைகளை விற்பனை செய்ய அனுமதி வழங்காமல் திருப்பி அனுப்பினார்.

தினமும் சந்தைகளுக்கு கொண்டு வரப்படும் மரக்கறி வகைகள், பழ வகைகள் மருந்து விசிறப்பட்ட நிலையில் கொண்டு வரப்படுகின்றன.

அவற்றைப் பரிசோதனை செய்யக் கொழும்புக்கு அனுப்ப குறைந்தது பத்து நாள்களாவது செல்கின்றன. பரிசோதனைக்காகப் பெருமளவு பொருள்கள் சேர்ந்த பின்னரே வாகனத்தில் அவை கொண்டு செல்லப்படுகின்றன.

அங்கு கொண்டு செல்வதற்கு முன்னர் பரிசோதனைக்காக அனுப்பப்படும் மரக்கறி வகைகள், பழவகைகள் போன்றவை அழுகியும் பழுதடைந்தும் போய் விடும்.

அதனால் மருந்து விசிறப்பட்ட பொருள்கள் எனத் தெரிந்தும் தடை செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

இரசாயனப் பகுப்பாய்வு மையம் வடபகுதியில் செயற்பட்டால் நிச்சயம் தரமான மரக்கறி மற்றும் பழவகைகளை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## மயான அபிவிருத்தி சங்கங்களை பதிய அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 14

வலி. கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட இந்து மயானங்களின் அபிவிருத்திகளை மேற்கொள்வதாயின், மயான அபிவிருத்திச் சங்கங்கள் கட்டாயம் சபையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று சபைச் செயலாளர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்துள்ளதாவது-

"சபைக்கு உட்பட்ட அநேகமான மயானங்களின் அபிவிருத்திச் சங்கங்கள் சபையில் பதிவு செய்யப்படவில்லை. மயான அபிவிருத்திச் சங்கங்களைப் பதிவு செய்யாத காரணத்தால் சபையில் அபிவிருத்தி மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மயான அபிவிருத்திக் குழுக்களை தெரிவு செய்து அதன் நிர்வாகங்கள் சபையில் பதிவு செய்யப்பட வேண்டும். இந்து மயானங்களின் அபிவிருத்திச் சங்கங்கள் பதிவை மேற்கொள்வதன் மூலமே மயான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியும்" - என்றார். (ற-17)






அமைச்சர் டெனீஸ்வரன் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா ஆகியோர் ஒரு ஜாலி சவாரி.

## வரணி திராலி இணைப்பு வீதியில் 1.5 கிலோமீற்றர் வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

வடமராட்சியையும் - தென்மராட்சியையும் இணைக்கும் 4.5 கிலோ மீற்றர் நீளமான வரணி திராலி இணைப்பு வீதியில் சுமார் 1.5 கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்படுகின்றது. 8 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

புனரமைப்புப் பணிகளை வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்தார்.

வடக்கு மாகாண சபையின் நடப்பு ஆண்டுக்குரிய பாதீட்டில், வடமாகாண சபையின் உறுப்பினர்கள் 38 பேருக்கும் தலா 6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. மேற்படி வீதித் திருத்தத்தை வட மாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ் முன்னுரிமைப் படுத்தியிருந்தார். இந்த வீதியில் அமைந்துள்ள தில்லையம்பலப் பிள்ளையார் கோவிலின் தர்மகர்தாக்கள் மற்றும் அந்தப் பகுதி மக்கள் கோவில் வரை வீதியைப் புனரமைத்துத் தருமாறு கேட்டுக்கொண்டனர். மேலும் 2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு மொத்தமாக 8 மில்லியன் ரூபாவில் 1.5 கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்படவுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் வட மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, வீதிக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள வட மாகாண சபை உறுப்பினர் சிவயோகன், வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் பெலிசியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இணைப்பு வீதியின் எஞ்சியுள்ள 3 கிலோ மீற்றர் வீதியைப் புனரமைப்பதற்கான நடவடிக்கை அடுத்த வருடம் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகரசபை மோசடிகளை மறைக்க முயல்கிறாரா எதிர்க்கட்சித் தலைவர்?

## சந்தேகம் கிளப்புகிறார் வட மாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின்

யாழ்ப்பாணம், ஜுலை 14

யாழ்.மாநகர சபையின் கடந்த ஆட்சிக் காலத்தின் ஊழல் மோசடிகள் வெளிவந்துவிடும் என்பதால் காப்பாற்றுவதற்கு வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித்தலைவர்சி.தவராசா முனைகின்றாரா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 56 ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கேள்வி நேரத்தில், ஆளும் கட்சி உறுப்பினர் பரஞ்சோதி முன்வைத்த கேள்விகள் தொடர்பில் சபையில் சர்ச்சை உருவாகியது.

முதலமைச்சரிடம் கேட்பதற்கு 15 வினாக்களை ஆளும்கட்சி உறுப்பினர் பரஞ்சோதி முன்வைத்திருந்தார். யாழ்.மாநகர சபையை ஈ.பி.டி.பி.யினர் நிர்வாகம் செய்தபோது இடம்பெற்றவை என்று சொல் லப்படும் முறைகேடுகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய விடயங்களாகவே கேள்விகள் இருந்தன.

> முதலமைச்சரிடம் கேட்பதற்கு 15 வினாக்களை ஆளும் கட்சி உறுப்பினர் பரஞ்சோதி முன்வைத்திருந்தார். யாழ்.மாநகரசபையை ஈ.பி.டி.பி.யினர் நிர்வாகம் செய்தபோது இடம்பெற்றது என்று சொல்லப்படும் முறைகேடுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் சம்பந்தமாகவே கேள்விகள் இருந்தன.

"ஒழுங்குப் பிரச்சினையை நான் முன்வைக்கின்றேன். ஒரு உறுப்பினர் 3 கேள்விகள் மாத்திரமே அமர்வில் கேட்கலாம் என்று சபை ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியிருக்கையில் எவ்வாறு 15 கேள்விகளுக்கு அனுமதிவழங்கினீர்கள்?" என்று எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கேள்வி எழுப்பினார்.

இவை அனைத்தும் ஒரே தடவையில் நிகழ்ச்சிநிரலில் இணைக்கப்படவில்லை. ஒவ்வொரு தடவைகளும் கேள்விகள் இணைக்கப்பட்டுப் பதில் வழங்கப்படாததால் அவை தொடர்ந்து நிகழ்ச்சி நிரலில் இணைக்கப்பட்டு வருகின்றன - என்று அவைத் தலைவர் பதில் வழங்கினார்.

இந்தக் கேள்விகளுக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஏற்கனவே பதில் வழங்கிவிட்டார் - என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

பதில் வழங்கப்படவில்லை- என்று கேள்வியைச் சமர்ப்பித்த உறுப்பினர் அ.பரஞ்சோதி தெரிவித்தார். 'உங்களுடைய ஆதங்கம் எனக்குப் புரிகின்றது. யாழ்.மாநகரசபை விவகாரத்தில் உங்களுக்குள் உள்ள டீல் விளங்கும்- என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் குறிப்பிட்டார்.

ஆளும் கட்சி உறுப்பினர் அஸ் மின்-

சபை ஒழுங்கு விதிகளில் ஒரு உறுப்பினர் 3 கேள்விகள் கேட்கலாம். அந்த நடைமுறையை நாங்கள் பின்பற்ற வேண்டும். கேள்விக்குப் பதில் வழங்க வேண்டிய அமைச்சர் இல்லாத சந்தர்ப்பத்தில் அந்தக் கேள்வியை எழுப்ப முடியாது. ஒரு உறுப்பினர் எழுப்பிய கேள்வி மீது இன்னொரு உறுப்பினர் கேள்வி கேட்கலாமா? அதற்குச் சபை ஒழுங்கு விதிகளில் இட முண்டா?

எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா எழுப்பப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவுக்குள்ளும் சென்று அதில் இருக்கின்ற ஒவ்வொன்றுக்கும் விடையளிக்க முற்படுகின்றார். எனக்கு இது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. எதிர்க்கட்சித் தலைவர் தங்களுடைய பழைய யாழ். மாநகரசபையைக் காப்பாற்ற இவ்வாறு செய்கின்றாரோ தெரியவில்லை. அவர்களிடத்திலிருக்கின்ற ஊழல் மோசடிகள் வெளியே வந்து விடும். தங்களுடைய கட்சியைக் காப்பாற்றப் பேசுகின்றாரா என்ற என்னுடைய சந்தேகத்தை எழுப்புகின்றேன் - என்றார். (ந-5)

## தங்கம்மா அப்பாக்குட்டியின் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜுலை 14

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி அமரர் தங்கம்மா அப்பாக்குட்டியின் எட்டாவது ஆண்டு குருபூசை நிகழ்வு நடைபெறவுள்ளது. இன்று காலை 9 மணிக்கு, தெல்லிப்பழையில் அமைந்துள்ள ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமை வகிப்பார். (ந-ரி4)

## ரயிலில் மோதி உயிரிழக்கும் கால்நடைகள்

சாவகச்சேரி, ஜுலை 14

ரயில் மோதிக் கால்நடைகள் இறக்கும் சம்பவங்கள் தென்மராட்சிப் பகுதியில் அதிகரித்துள்ளன. மறவன்புலவு, தச்சன்தோப்பு போன்ற பகுதிகளில் கடந்த மாதத்தில் மட்டும் 10க்கும் மேற்பட்ட கால்நடைகள் இவ்வாறு உயிரிழந்தன என்று மக்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவை பெரும்பாலும் கறவை மாடுகளாகும். அவற்றின் பெறுமதி சுமார் 80 ஆயிரம் ரூபாவுக்கு மேல் என்று கூறப்படுகின்றது. மேய்ச்சலுக்காகக் கட்டாக்காலிகளாக விடப்படும் கால் நடைகளே இவ்வாறு இறக்கின்றன.

ரயில் பாதைகளில் விபத்தால் இறக்கும் கால்நடைகளின் உரிமையாளர்களிடம் குற்றப் பணம் அறவிடப்படும் என்று ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது. அதனால் இறக்கும் கால்நடைகளை உரிமை கோருவதற்கு உரிமையாளர்கள் முன்வருவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-131)

## ஐயன்கன்குளம் மகா வித்தியாலய மைதானம் சீரமைப்பு

துணுக்காய், ஜுலை 14

துணுக்காய், ஐயன்கன்குளம் மகா வித்தியாலய விளையாட்டு மைதானம் ஒரு லட்சம் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டது.

மாகாணசபை உறுப்பினர் க.கமலேஸ்வரனின் நிதி ஒதுக்கீட்டில் மைதானம் சீரமைக்கப்பட்டது. (ந-415)

## விதிகள் மீறிய சாரதிகளுக்கு தண்டம்

சாவகச்சேரி, ஜுலை 14

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய மூன்று சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்று நேற்று முன்தினம் தண்டம் விதித்தது.

ஆவணங்கள் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டமும், காப்புறுதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா தண்டமும், வாகன வரிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. (ந-9)




சிவன் அறக்கட்டளை நிலையத்தால் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் மாற்றுத் திறனாளிகளுக்குப் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு பேராதனைப் பல்லைக்கழக செனட் கட்டடத் தொகுதியிலுள்ள கேட்போர் கூடத்தில் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் உபுல் திசாநாயக தலைமையில் அண்மையில் நடைபெற்றது. பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் உபுல் திசாநாயக, நிகழ்வில் தலைமை அதிதியாக கலந்து கொண்ட சிவன் அறக்கட்டளை நிலையத்தின் பணிப்பாளர் கணேஸ்வரன் வேலாயுதத்துக்கு நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவித்தார். மாற்றுத் திறனாளிகளுக்கு உபவேந்தர், பிரதி உப வேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் விஜயவீர, பௌத்த சமய சிரேஷ்ட விரிவுரையாளர் ஆகியோர் புலமைப் பிரிசில்களை வழங்கி வைத்தனர். சிவன் அறக்கட்டளை நிலையத்தின் பணிப்பாளர் கணேஸ்வரன் வேலாயுதத்தின் மகனின் ஓராண்டு நினைவு அஞ்சலி நிகழ்வும் கடைப்பிடிக்கப்பட்டது. (ந-5)

## அச்சுவேலி நகரத்தில் தீ விபத்து; மூன்று கடைகள் முற்றாக நாசம்

யாழ்ப்பாணம், ஜுலை 14

அச்சுவேலி நகரத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தொலைத்தொடர்பு நிலையம் உள்ளிட்ட மூன்று கடைகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.



தொலைத்தொடர்பு நிலையத்தின் பின்பக்கமாக முதலில் தீப் பிடிக்கத் தொடங்கியது. தீ வீரியமாக எரியத் தொடங்கியது. கடையின் கூரையில் இருந்த ஓடுகள் வெடித்து விழத் தொடங்கின. இந்தச் சத்தத்தைக் கேட்ட அருகிலிருந்த தனியார் வங்கியின் காவலாளி எமக்குத் தகவல் வழங்கினார் -என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். தீயைக் கட்டுப்படுத்துவதற்கு முழு முயற்சிகள் மேற்கொண்டனர். தொலைத்தொடர்பு நிலையத்தில் பரவிய தீ விரைந்து அருகிலிருந்த கடைகள் மீதும் பரவியது. பொலிஸாரின் தீயணைப்பு முயற்சிக்கு இராணுவத்தினரும் உதவி புரிந்தனர். ஆனாலும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை.

அதிகாலை 1.45 மணியளவில் யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. தீயணைப்பு பிரிவினர் அதிகாலை 3 மணிக்குள் தீயை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்தால் தொலைத் தொடர்பு நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த கைத்தொலைபேசிகள் உள்ளிட்ட இலத்திரனியல் உபகரணங்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. அருகிலிருந்த கடைகளுக்கும் பொருள் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.



தீ விபத்துக்கான காரணம் உடனடியாகக் கண்டறியப் படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று குறிப்பிட்டனர். (ந-5-107-109-422)

## நள்ளிரவு கடற்கரையில் நடமாடிய இருவர் கைது


யாழ்ப்பாணம், ஜுலை 14

பருத்தித்துறை, கொட்டடிக் கடற்கரையில் நள்ளிரவில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கஞ்சா கடத்தப்படுகின்றது என்று கிடைத்த தகவலை அடுத்து ரோந்து, தேடுதல் நடத்தப்பட்டது. அதன்பேரில் 25 வயதுடைய இளைஞர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் - என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் தாம் மீன் பிடிக்க வந்தோம் என்று குறித்த இளைஞர்கள் தெரிவித்தனர். அவர்களிடம் விசாரணை நடத்தப்படுகின்றது என்றும் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ந-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியத்துவத்தை புனிதப்படுத்துங்கள்

உடுவிலூர் கலா

ஆணாதிக்கத்தின் கோரப்பிடியில் சிக்கி மூச்சு விட முடியாமல் பெண்ணினம் திணறுகிறது. காலில் சக்கரம் பூட்டப்பட்டவளாய் இருபத்து நான்கு மணி நேரமும் சிந்தையும் செயலும் அடுத்தவர்களுக்காய் பாடுபட ஓடாய் தேய்கிறாள் பெண். சமூக அநீதிகளாலும், ஆணாதிக்கக் கொடுமைகளாலும், நசுக்கப்பட்ட பெண் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்.......என வலியுறுத்த கல்வியில் முன்னேறிப் பால்நிலை சமத்துவத்துக்காகப் போராடுகிறாள்.

பெண்ணினத்தின் முன்னேற்றத்தைப் பொறுக்க முடியாத ஆணினம் வதை செய்கிறது. வன்முறைகளால் வாழ்வைச் சூறையாடுகிறது. பாலியல் வன்முறை, வன்புணர்வு, வன்கொடுமை என பெண்மையைப் பலவீனப்படுத்துகிறது. ஒதுக்கிடங்கள், மறைவிடங்களில் சல்லாபம் கொண்ட பாலியல் வன்முறை அறிவை அள்ளி வீசும் பாடசாலைகளில் வலம் வருகின்றது. எவரை நம்பிப் பாடசாலைக்குப் பிள்ளைகளைப் பெற்றோர் அனுப்புகிறார்களோ அதே ஆசிரியர்களால் பாடசாலைகளில் பாலியல் வன்முறை நெறியாள்கை செய்யப்படுகிறது. பாடசாலையில் கல்வி மட்டும் போதிக்கப்படுவது அல்ல. ஒழுக்கம், எதிர்கால வாழ்க்கைத் திறன்கள் யாவும் போதிக்கப்படுகின்றன. ஆசிரியர்களே ஒழுக்கக்கேடான செயல்களைப் புரிந்தால் மாணவச் செல்வங்களை எப்படி வழி நடத்துவது? ஆளுமை செய்வது? மாதா, பிதா, குரு, தெய்வம் எனப் பெற்றோருக்கு அடுத்த படியாகவும், தெய்வத்துக்கு முதலாகவும் ஆசிரியர்களை முன்னிறுத்தினர் பெரியோர். மனக்கட்டுப்பாடின்றி, உணர்வுகளை அலையவிடும் ஆசிரியர்கள் சிலரால் கல்விச் சமூகமே களங்கமடைகிறது.

பெண்ணின் கற்புக்கு அக்கினிப் பரீட்சை செய்கின்ற ஆண்கள் தம்மால் ஒரு பெண்ணின் கற்பு இழக்கப்படுகிறது என்பதை உணர மறுக்கிறார்களா? இல்லை வேண்டுமென்றே பெண்களை வதை செய்கிறார்களா? சமுதாய வழிகாட்டியாக அடையாளப்படுத்தப்படும் ஆண்கள் (ஆசிரியர்கள்) சபல புத்தியால் தமது பதவி, குடும்பம், கௌரவம், சமூகம், என அனைத்தையும் மறந்து அசிங்கமாக நடந்து கொள்கிறார்கள். பெண்ணினம் சூழ்நிலைக் கைதியாகவே தினம்தினம் வாழும் நிலை. தற்போது இடம்பெறும் பாலியல் வன்முறைகளுக்குப் பக்கத்துணைகளும் உள்ளன. தப்புச் செய்தவருக்குத் தண்டனை வழங்குவதிலும் பார்க்க, அவரைப் பாதுகாக்கவே நட்புறவுகள் உள்ளன. பாலியல் வன்முறைகளில் ஒரு மாணவி, ஒரு சிறுமி பாதிக்கப்படுகிறாள் என்பதை மறந்து வன்முறையாளனைப் பாதுகாக்கத் துடிப்பவர்களுக்கு முதலில் தண்டனை வழங்க வேண்டும்.

பெண்களை வன்முறை செய்வதால் வீரர்கள் ஆகிறோம் என நினைக்கும் எந்த ஒரு ஆணும், சமூகத்தின் விரோதியாவதை, அக்கணமே தன் குடும்பத்து உறவுகளின் சந்தோசம் தொலைக்கப்படுகிறது என்கிற உண்மையை மறந்து விடுகின்றனர். அத்தோடு சமுதாயத்தின் அருவருப்பான செயல்களுக்குத் தானும் ஒரு பிரதான காரணி என்பதை உணர்வதில்லை. சமுகத்தின் அருவருப்பான பார்வைக்கு ஆளாவதையும், பாலியல் வன்முறையாளன் எனத் தன்னைத் தானே அடையாளப்படுத்துவதையும் கூட சிந்திப்பதில்லை.

ஆண்களே! இனிமேலாவது எந்தப் பெண்களையும், எந்தச் சிறுமியையும் மனதால்கூட இச்சை கொண்டு பார்க்காதீர்கள். பெண்களைப் பலவீனப்படுத்தாதீர்கள். பெண்கள் அச்சத்தோடு வாழும் நிலையை உருவாக்காதீர்கள். ஆசிரியர்களே! மாணவிகளை உங்கள் பிள்ளைகள்போல் அன்பாக நினையுங்கள். உங்களால் அறிவைத்தேடும் ஒரு மாணவியின் வாழ்க்கை அழிந்து போவதை நீங்களே விரும்புகிறீர்களா? எதிர்காலக் கல்விச் சமூகத்தைச் செதுக்கும் சிற்பிகள் என்பதை மறந்து காமலீலைகளில் கண்ணாயிருக்காதீர்கள். உங்கள் அறிவுச்சுடரால் பற்பல கல்வியாளர்களை ஒளியாக ஏற்றி வையுங்கள். பாடசாலைக்காலம் முடிந்தாலும், வாழ்நாள் முழுக்க உங்களைச் சிரம் தாழ்த்தி வணங்கும் மாணவ சமுதாயத்தை உருவாக்குங்கள். எச்சில் பார்வைக்கும், சபல புத்திக்கும் இடமளிக்காதீர்கள். இவற்றுக்கும் மேலாக ஆசிரியத்துவத்தை அசிங்கப்படுத்தாதீகள். அன்பான ஆசிரியர்களே! உங்கள் பாதம் பணிந்து மாணவ சமுதாயம் ஒளி பெற வேண்டும் என்கிற உண்மையை மறந்து மனிதத்துக்கு அப்பாற்பட்ட வேலையைச்செய்தால் மாணவர்களாலேயே தண்டனை பெறுவீர்கள் என்கிற கசப்பான உண்மையை உங்கள் இதயத்தில் இருத்தி வையுங்கள்.

# நீதியில் சோதனைகள் வேண்டாமே!

கடந்து போன மூன்று தசாப்த காலமாகத் தமிழர்கள் தங்களது அபிப்பிராயங்களையும் அபிலாசைகளையும் ஆத்மார்த்தமாக அரசிடம் எடுத்துக் கூறினார்கள். பல சந்தர்ப்பங்களில் பலம் கொண்டு அடித்தும் எடுத்துரைத்தார்கள். இதன்வழி முதலில் பணிந்தவர்கள் பின்னர் இனவாதத்தின் முகத்தினை அணிந்து கொண்டு பிதற்றத் தொடங்கினர். இன்றும் தொடர்கின்றனர்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தீர்வின் மொழிவை முன்வைக்கவுமில்லை அதன் நிஜ உருவம் தாண்டிய நிழலுருவங்களைக் கூட வெளிக் காட்டவில்லை. மாறாக அராஜகங்களை அவ்வப்போது தமிழர் தாயகமெங்கும் திட்டமிட்டு விதைத்தார்கள். அதிலிருந்து தமிழர்கள் பெற்றுக்கொண்ட அழிவுகளை அறுவடையாகக் கண்டு இரசித்துக் கொண்டனர். வெற்றி விழாக்களையும் கொண்டாடி மகிழ்ந்தனர். தற்போதும் மகிழ்வின் திழைப்பினுள் மிதந்து கொண்டுதான் இருக்கின்றனர்.

அந்தவகையிலே 2009 களில் பன்னாட்டுப் படைகளுடன் கூட்டிணைந்த அரசு தமிழர்களின் குலச் சின்னங்களை அழித்து மனிதப் பேரவலங்களை மேற்கொண்டது. தமிழன் குருதி கொண்டு உருவம்கொண்ட பனாட்டைத் தமிழர் தாயகத்தில் ஒன்றுகூடி ருசி பார்த்தும் கொண்டனர். இவை அனைத்தும் மிகையூட்டமற்ற யதார்த்தங்கள். மனித நேயமுள்ள ஒவ்வொரு மனிதனும் வேதனை உணர்வால் வெந்து சுருங்கி கண்ணீரோடு மண்டியிடுவான். மனச்சாட்சியை மார்தட்டி கெக்கட்டமிட்டு சிரித்திருக்கமாட்டான். இந்தப் பாவச் சுமைக்கான பிராயசித்தம் என்ன என்பதை அனுதினமும் சிந்தித்திருப்பான். ஆனால், இங்கு உள்ளவர்களின் தோற்றங்களைக் காலம் கனதியாக உள்வாங்கியிருக்கிறது. அவற்றை தமிழ் மக்கள் மத்தியில் அனுபவமாக வெளிக்காட்டியிருக்கிறது. தற்காலத்தின் அரச நகர்வுகளும் அதனையே வெளிக்காட்டி நிற்கின்றன.

குறிப்பாக 2015 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நல்லாட்சி என்ற சொல்லாட்சியின் ஒளிர்தலைக் காலத்தின் தேவையாக எல்லோரும் ஏற்றிருந்தனர். தமிழர்களும் ஒற்றுமைப்பட்டு அதனை வரவேற்றிருந்தனர். ஆனாலும், நல்லவிதமான பதவியில் அலங்காரம் செய்தவர்கள் படிப்படியாக தன்னின நலன் சார்ந்த சிருங்ஹாரங்களை ஏற்றுக்கொண்டு அதன் வழி பயணிக்கத் தொடங்கிவிட்டனர். ஐ.நா மனித உரிமைகள் சபையின் 31 அமர்வில் தங்களது அனுசரணையோடு தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். பன்னாட்டு நீதிபதிகளின் பிரசன்னத்துடன் கூடிய விசாரணை, அதன்வழி தப்பிழைத்தவர்களுக்கு உரிய தண்டனை. அத்துடன் நல்லிணக்கம், இன சமத்துவம், இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பதான காய்களைச் சர்வதேச அரங்கில் உருட்டியும் விட்டனர். எவரும் முகம் சுளிக்கவில்லை.

ஆனால் தற்போது அரசு ஐ.நா மனித உரிமை மன்றின் 32 ஆவது அமர்வில் மீண்டும் அறிக்கைகளில் கண்துடைப்பைச் செய்துள்ளது. இப்போது கலகலத்து, சலசலத்து பிரகண்டம் செய்யத் தொடங்கிவிட்டது. அரச தரப்பினர். போர்க் குற்ற விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்வாங்கப் பட வேண்டும் என பரிந்துரை செய்யப்படவில்லை என்கின்றனர். நாங்கள் பதவியில் இருக்கும்வரை உள்நாட்டு நிர்வாகத்திலோ நீதித்துறையின் செயற்பாடுகளிலோ பன்னாட்டு, வெளிநாட்டு நீதிபதிகளின் பிரசன்னம் சாத்தியமில்லை என்று சத்தியம் செய்கின்றனர். உண்மையில் சர்வதேசமும் இலங்கை அரசும் இணைந்துகொண்டு தங்கள் இராஜதந்திர காய்நகர்த்தல்களைத் தமிழ்மக்கள் தொடர்பான விடயங்கள் மீது உருட்டி விடப் பார்க்கின்றனர்.




பெரிய குற்றங்களை, மனித உரிமை மீறல்களைச் செய்துவிட்டு நீதியின் பின்னுள்ள இருட்டினுள் பாவச்சுமைகளை மறைத்து விட்டு, அதனுள் ஒளிந்து கொண்டு தப்பிவிடத் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர்.

ஆக, அரசின் இந்தப் பிற்போக்குத்தனம் நிர்மூலமாக வேண்டும். பொது மன்றங்களில் கூட்டிணைந்து தமிழர்களைக் குசலம் விசாரிப்பதும் பின்னர் பிரிந்து நின்று நீ நான் என்று கைகலப்பில் ஈடுபடுவதும் ஆக்கபூர்வமான விடயங்கள் அல்ல. அவற்றை முற்றாகக் களைய வேண்டும்.

தமிழர்களின் பொறுமையோடும் அழிவின்வழி வந்த அமைதி என்கின்ற வறுமையோடும் சிறுபிள்ளைத்தனமாக விளையாடியிருக்கக்கூடாது. மீண்டும் மீண்டும் அவர்களின் கரங்களில் விலங்கிட முனையக்கூடாது. நீதியில் சோதனைகள் வேண்டாமே! புரிதல்தான்வேண்டும்.! தமிழனிடம் சோதனைகளை வென்ற. வெல்லும் தியாகம் உண்டு! அவர்களின் வேட்கையைப் புரிந்துகொள்ள வேண்டும்..! காலங்கள் எப்போதும் காத்திருப்பதில்லை.! ஒரே விதமாக இருப்பதில்லை. மாற்றம்கொள்ளும்.! இதனையும் உணர்ந்துகொள்ள வேண்டும் இவர்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க் குற்ற விசாரணையில் பன்னாட்டு நீதிபதிகள் தேவை

## உறுதியுடன் உள்ளார் பான் கீ-மூன்



கொழும்பு, ஜூலை 14
போர்க்குற்ற விசாரணையில் பன்னாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்படவேண்டும் என்ற ஐ.நா. தீர்மானத்தில் - பன் னாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையில் இலங்கை அரசு உறுதியாக இருக்க வேண்டும்.
இவ்வாறு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் வலியுறுத்தினார்.
போர்க் குற்ற விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகள் ஒருபோதும் உள்வாங்கப்படமாட்டார்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார். இந்த விவகாரம் சம்பந்தமாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே பான் கீ மூனின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
விசாரணைகள் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பில் இலங்கை அரசு பன்னாட்டுச் சமூகத்துடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்பாடுகளில் உறுதியாக இருக்க வேண்டும்.
பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசு பன்னாட்டுச் சமூகத்துடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாடுகளில் சில சிக்கல்கள் எழுந்துள்ளன. இலங்கை அரசு அந்த உடன்பாடுகளை முழுமையாகப் பின்பற்றும் என்ற நம்பிக்கை இன்னமும் இருக்கின்றது.
பொறுப்புக் கூறும் விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்தும் உறுதியாக இருக்கின்றது. இலங்கை அரசுக்குரிய கடப்பாடுகளை முழுமையாக நிறைவேற்ற வைப்பதற்கான நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபை கைவிடாது.- என்றார். (ற-5)

# சுயாதீனமான நிறுவனமாக உயர் நீதிமன்று மாற்றப்படும்

## பிரதி அமைச்சர் எரான் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 14
இலங்கையின் புதிய நிர்வாகத்தின் கீழ் உயர் நீதிமன்றம் சுயாதீனமான நிறுவனமாக உருவாக்கப்படும்.
இவ்வாறு கைத்தொழில் அபிவிருத்தி பிரதி அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:-
"இதன்மூலம் எவரொருவரையும் விசாரணை செய்யக் கூடிய யுகம் உருவாக்கப்படும்
உயர்நீதிமன்றத் தீர்ப்புக்களுக்கு மதிப்பளிக்கும் ஒரு சகாப்தத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அடியெடுத்து வைத்துள்ளது. சுயாதீன நீதித்துறை, மக்களுக்குக் கிடைத்த சிறந்த வெற்றியாக அமையும். சுதந்திரத்தின் அடிப்படைத் தேவையாகக் கருதப்படும் சுயாதீன நீதித்துறையை ஏற்படுத்துவதாக உறுதி அளித்தே புதிய நிர்வாகம் அதிகாரத்துக்கு வந்தது. தேவையான வருமானத்தை எட்டுவதற்கு அவசியமான செயற்றிறன்மிக்க சட்டரீதியான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கின்றது" - என்றார். (ற-4)

# இலங்கைக் கடலில் இந்திய மீனவர் மீன்பிடிப்பது ஒருபோதும் நடக்காது

## அமைச்சர் மகிந்த அமரவீர திட்டவட்டம்



கொழும்பு, ஜூலை 14
இந்திய மீனவர்கள் இலங்கைக் கடலில் 75 நாள்கள் அல்ல 75 மணித்தியாலங்கள் கூட மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படாது. வடக்கு மீனவர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.
இவ்வாறு தெரிவித்துள்ளார் மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர.
இந்திய மீனவர்கள் இலங்கைக் கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கக் கூடாது என்று வலியுறுத்தி வடக்கு மாகாண மீனவர்கள் போராட்டம் நடத்தினர். அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்துள்ளதாவது-
"இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களுக்கு ஒரு வருடத்தில் 75 நாள்களுக்கு மீன்பிடிப்பதற்கு அரசு அனுமதித்துள்ளது என்று வெளியான செய்திகளில் உண்மையில்லை.
அரசு இது தொடர்பில் எந்தவிதமான தீர்மானத்தையும் எடுக்கவில்லை. பலர் பலவிதமான கருத்துக்களையும் யோசனைகளையும் முன்வைக்கின்றனர். இறுதி முடிவை அரசுதான் எடுக்கும்.
அத்துமீறும் மீனவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தொடரும். அதில் எந்தவிதமான தளர்வுப் போக்கும் கடைப்பிடிக்கமாட்டாது.
கைது செய்யப்படும் இந்திய மீனவர்களை விடுவிப்போம். கைப்பற்றப்பட்ட படகுகள், வலைகள் மற்றும் உபகரணங்களை மீளக் கையளிக்கமாட்டோம் என்ற தீர்மானத்தில் நாம் திடமாக இருக்கின்றோம்.
வடபகுதி மீனவர்கள் எவ்விதமான அச்சமும் கொள்ளத் தேவையில்லை. எந்தவொரு முடிவெடுத்தாலும் மீனவச் சங்கங்களுடன் பேச்சு நடத்தியே தீர்மானம் எடுப்போம்.- என்றார். (ற-5)

# பஸ் கட்டண அதிகரிப்பு; சங்கங்களிடையே முரண்பாடு

கொழும்பு, ஜூலை 14
ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் பஸ் கட்டணத்தை 6 சதவீதமாக உயர்த்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
இதனையடுத்து பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பில் பஸ் சங்கங்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.
பஸ் கட்டண அதிகரிப்புக்கு அமைச்சரவையால் வழங்கப்பட்ட அனுமதியின் அடிப்படையில் குறைந்த கட்டணம் 9 ரூபாவாகும்.
"இந்த பஸ் கட்டண அதிகரிப்பு போதுமானதல்ல. குறுந்தூர பஸ் சேவைகளுக்கு பஸ் கட்டண அதிகரிப்பு எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. பஸ் கட்டணத்தை ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் 3.2 வீதத்தால் அதிகரிக்கவே அரசு உத்தேசித்திருந்தது. எமது சங்கத்தின் போராட்டத்தினாலேயே 6 வீத உயர்வு வழங்கப்பட்டது" என்று அகில இலங்கைத் தனியார் பஸ் நிறுவன சம்மேளனத்தின் தலைவர் அன்ஜன பிரியான்ஜித் தெரிவித்துள்ளார்.
"6 சதவீத பஸ் கட்டண அதிகரிப்பு போதுமானது. இதனை விடவும் அதிகளவு கட்டணத்தை உயர்த்தினால் பஸ்களில் பயணிப்பதனை மக்கள் குறைத்துக் கொள்ளலாம்" என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார். (ற-5)

# இந்திய மீனவர் படகுகளை வரையறுப்பது குறித்து ஆராய்வு

கொழும்பு, ஜூலை 14
250 இந்திய மீனவப் படகுகளை வரையறுக்கப்பட்ட நாள்களில் இலங்கைக் கடற்பரப்புக்குள் அனுமதிப்பது தொடர்பில் இலங்கை அரசு ஆராய்ந்து வருகின்றது. இவ்வாறு இந்திய ஊடகமான நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.
இந்திய மீனவர்களால் இலங்கைக் கடற்பரப்புக்குள் ஏற்படுத்தப்படும் அழிவுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே அரசு இந்த முடிவுக்கு வந்துள்ளது என்று அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.
தற்போதைய நிலமையில் தினமும் 3 ஆயிரம் இந்திய மீனவப் படகுகள் இலங்கைக் கடற் பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசித்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.
250 இந்திய மீனவப் படகுகளுக்கு அனுமதியளிப்பது இலங்கைக்கு நன்மையாகவே அமையும் என்று இலங்கை அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டினார் என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

# பன்னாட்டு நீதிபதிகள் விவகாரத்தில் ஜனாதிபதியின் முடிவே இறுதியானது

## அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 14
போர்க்குற்ற விசாரணையில் பன்னாட்டு நீதிபதிகளை இணைத்துக் கொள்வதில்லை என்ற ஜனாதிபதிபதியின் கருத்தே அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு. இந்த விவகாரத்தில் ஏனையோர் தெரிவிக்கும் கருத்துக்கள் தனிப்பட்ட கருத்துக்கள். அவை அரசின் நிலைப்பாடு அல்ல.
இவ்வாறு அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.
கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்துள்ளதாவது-
"இறுதிப் போரில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுவதில் எந்த உண்மையும் இல்லை. அதற்கான ஆதாரமும் இல்லை.
இராணுவத்தினர் பொதுமக்களை இலக்கு வைத்து பயங்கரவாதிகளைத் தோற்கடிக்கும் கொள்கைகளைப் பின்பற்றவில்லை. பொது மக்களைக் காப்பாற்றியே பிரச்சினைக்குத் தீர்வு கண்டுள்ளனர். தனிப்பட்ட சிலர் குற்றமிழைத்திருந்தால் அதற்கான ஆதாரங்களைத் திரட்டி அரசு நடவடிக்கை எடுக்கும். நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தி மீண்டும் பயங்கரவாதச் செயற்பாடுகள் இடம்பெறாமல் அரசு செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றது. அதற்குக் குந்தகம் விளைவிக்க ஒருபோதும் இடமளிக்கப்படாது.
போர்க்குற்ற விசாரணையில் வெளி நாட்டு நீதி விசாரணைக் குழுவினருக்கு இடமளித்து நாட்டின் அரசமைப்புக்கு முரணான வகையில் செயற்பட முடியாது.
போர்க்குற்ற விசாரணையில் வெளி நாட்டு நீதி விசாரணைக் குழுவினருக்கு அனுமதியில்லை என்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் தெரிவித்துள்ளனர். அதுவே அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு. இவர்களைத் தவிர்த்து ஏனையோர் வெளியிடும் கருத்துக்கள், அவர்களது தனிப்பட்ட கருத்துக்களாகவே அமையும் - என்றார்.
போர்க்குற்ற விசாரணைகளில் பன்னாட்டு நீதிபதிகள் உள்வாங்கப்படமாட்டார்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்து, அவருடைய தனிப்பட்ட கருத்து என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார். (ற-5)

# முஸம்மிலின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 14
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மிலின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.
தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளரான முஸம்மில் கடந்த ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி செயலக வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
கொழும்பு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் வழக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது 27 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விடும் நிலை தான் மிஞ்சுமா...?

ஜனநாயக ஆட்சியில், அரச கட்டிலில் ஏறிவிட்டோம் என்பதால்--

அமைச்சர் பதவியை வகிக்கிறோம் -- என்பதால், எதுகுறித்தும், எந்தக் கருத்தையும் வெளிப்படுத்தலாம் என்று எண்ணுவது பெரும் தப்பிலும் தப்பாகும்.

இலங்கையில் நடந்தேறிய போர்க்குற்றங்கள் குறித்து, விசாரிப்பதற்கு பன்னாட்டு நீதிபதிகள் உள்வாங்கப்படுவர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் பிரேரணையில் தெரிவிக்கப்படவில்லை.

அவசியமான சந்தர்ப்பங்களில் மட்டுமே அவர்களது பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளலாம் என்றே தெரிவிக்கப்பட்டுள்ளதாக, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தகவல் (கருத்து) வெளியிட்டிருந்தார்.

ஆனால், எங்கள் நாட்டு அமைச்சரின் கருத்தை, மறுத்துள்ளார், பன்னாட்டுச் சட்டங்களில் நிபுணத்துவமும், பெயரும் பெற்ற மனித உரிமைகள் ஆர்வலரான சட்டத்தரணி நிரான் அங்கிற்றல்.

இதில் இன்னொரு 'வேடிக்கை' என்று கருத வைக்கும் நிலை என்னவெனில், ஜனாதிபதி மைத்திரிபாலவும், வெளிவிவகார அமைச்சர் கூறியவாறு-- போர்க்குற்ற விசாரணைகளில், பன்னாட்டு நீதிபதிகளை உள்வாங்குவதாக, ஐ.நா.மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தில் குறிப்பிடப்படவில்லை என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே-- பின்புலத்திலேயே, மனித உரிமைகள் ஆர்வலர் நிரான் அங்கிற்றல் இந்த விடயம் குறித்துக் கருத்து வெளியிட்டுள்ளார்.

அடிக்கடி இப்பத்தியில் சுட்டிக் காட்டப்பட்டமை போன்று, ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் அடிக்கடி கருத்து வெளியிட்டமை போன்று, இலங்கையில் நடைபெற்ற போரால் பாதிப்புற்றவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டிய தவிர்க்க முடியாத தனது கடமையைப் புறந்தள்ளி, நல்லாட்சி அரசு நட்டாமுட்டிப் போக்கில் செயற்பட முனைவது எந்தவகையிலும் ஏற்புடைத்தல்ல.

போர்க்குற்ற விசாரணைகளில் அனைத்துலக நீதிபதிகள் உள்வாங்கப்படுவர் என்று, ஐ.நா. தீர்மானத்தில் பரிந்துரைக்கப்படவில்லை. வேண்டுமாயின் அவசியமான சந்தர்ப்பங்களில் அவர்களது பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளலாம்என்று (மட்டுமே) தெரிவிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, தற்போது தலைகரணமாக கருத்து வெளியிடுவதும் இங்கு ஊன்றித் தொட்டுக்காட்டத் தக்கதாகும்.

பி.பி.ஸியின் சிங்கள சேவைக்கு அளித்த செவ்வியில், அமைச்சர் அதனை அழுத்திக் கூறியிருந்தார் என்பது அழித்து எழுதப்படக் கூடியது அல்லவே.

ஒட்டுமொத்தத்தில், பன்னாட்டு நீதிபதிகளுக்குப் பச்சைக்கொடி காட்டிய அமைச்சர் மங்களவும், அதிலிருந்து வெற்றிகரமாகப் பின்வாங்கி இருந்தார்; இருக்கிறார்.

பன்னாட்டு நீதிபதிகளின் சேவையை வேண்டாம் என்று, அரசு தூக்கி எறியும் நிலையில், பாதிப்புற்ற தமிழ் மக்களுக்கு நீதியும் நியாயமும் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது, எட்டாப் பழத்துக்கு கொட்டாவி விடும் நிலைக்கே கொண்டு செல்லும் என்பதில் தப்பேது...?

மு.ஈழத்தமிழ்மணி



ஈழத்தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அகிம்சைப் போராட்டங்களை முன்னெடுத்து, தமிழரசுக் கட்சியை வளர்த்த தமிழினத் தலைவர், இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது தமிழர் என்ற பெருமைகள் அமரர் அ.அமிர்தலிங்கத்தையே சாரும். தமிழரசுக் கட்சியைக் கட்டியெழுப்புவதில் அக்காலத்தில் தந்தை செல்வாவின் தளபதிகளாக இருந்துசெயற்பட்டவர்கள் பலர். ஆனால், எதிர்காலத்தில்தமிழினத்தை வழிநடத்த அமிர்தலிங்கத்தைத்தேர்வுசெய்துள்ளேன் எனத் தந்தை செல்வா தனது மறைவுக்கு முன்னர் கூறிச் சென்றதற்கமைய, தமிழினத்தையும், கட்சியையும் வழி நடத்திச் செல்லுகின்ற பொறுப்பை ஏற்றுத் தன்னையே முழுமையாக அர்ப்பணித்து உழைத்த தலைவர் அமிர்தலிங்கம். இந்த ஆண்டின் ஜூலை 13ஆம் திகதி (நேற்று) அவரது 27 ஆவது நினைவு தினமாகும். 1948 ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டு வரை அமரர் அ.அமிர்தலிங்கம் தமிழினத்துக்குச் செய்த சேவைகள் சாதாரண மானவையல்ல. 22 வயது இளைஞனாகச் சட்டக்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே தமிழினத்தின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கப்புறப்பட்ட தீரமிக்கதொரு இளம் தலைவராக அவர் பரிணமித்தார்.

### அரசியல் பிரவேசத்துக்கு முன்னரான பின்னணி

இளம் வயதிலேயே, தமிழினத்துக்கான போராட்டப் பாதையை இலக்கு வைத்த அமிர்தலிங்கம்,

> அமிர்தலிங்கத்தின் விருப்பத்தின் பேரில் உருவாக்கப்பட்ட தமிழ் இளைஞர் பேரவையில் பல நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்கள் தொகுதிகள்தோறும் இணைந்திருந்தனர்.

தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக்கட்சியில் இணைந்து செயற்படலானார். 1927ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26ஆம் திகதி வட்டுக்கோட்டை பண்ணாகத்தில் பிறந்தவர். இலங்கைப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு பி.ஏ. பட்டம் பெற்றார். 1951ஆம் ஆண்டு சட்டப்படிப்பிலும் தேர்ச்சியடைந்து வழக்கறிஞரானார். பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சங்கத்தை உருவாக்கி அதன் தலைவராகவுமிருந்து செயற்பட்டவர். 1949ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியில் இணைந்து கொண்ட அமிர்தலிங்கம், 1950 ஆம் ஆண்டு உருவான தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியில் முக்கிய பொறுப்பேற்றார். இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கானோர் வாலிப முன்னணியில் இணைந்தனர்.

தமிழரசுக் கட்சியை வளர்த்தெடுப்பதற்காக வடக்கு-கிழக்கு மாகாணமெங்கும் தீவிர பரப்புரைகளை முன்னெடுத்தார்.

1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் வேட்பாளராக நிறுத்தப்பட்டு, வெற்றிபெற்று, நாடாளுமன்றம் சென்றார். அன்றிலிருந்து 1970ஆம் ஆண்டு வரை, வட்டுக்கோட்டைத் தொகுதியைப் பிரதிநிதித்துவம் செய்திருந்தார். 1970ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி வேட்பாளரான தியாகராசாவினால் தோற்கடிக்கப்பட்டார்.

தேர்தலில் தோற்றபோதிலும், தமிழினத்துக்கான போராட்ட உணர்வு அவரின் மனதிலே தீவிரமடைந்திருந்தது. 1977 ஆம் ஆண்டு ஜூலை 21ஆம் திகதி நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் காங்கேசன்துறை தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் வேட்பாளராக நிறுத்தப்பட்டு, அமோக வெற்றியீட்டினார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபராக நியமிக்கப்பட்ட பின்னர், இவரது ஆளுமையும், அறிவு முதிர்ச்சியும் இவரைத் தமிழினத்தின் தலைவராக உயர்த்தியது. தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்றத்தில் இரண்டாவது பெரிய கட்சி என்ற ஸ்தானத்தைப் பெற்றிருந்ததால், எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் கட்சிக்குக் கிட்டியதுடன், எதிர்க்கட்சித் தலைவராகவும் அமிர்தலிங்கமே கட்சியால் தெரிவுசெய்யப்பட்டார்.

போராட்ட குணம் கொண்ட தலைவர் அமிர்தலிங்கம் தலைமையில் சிங்கள 'சிறி' எதிர்ப்பு போராட்டங்கள் தமிழரசுக் கட்சியினால் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. வர்த்தக நிறுவனங்களில் பெயர்ப் பலகைகளிலும், எல்லைக் கற்களிலும் பொறிக்கப்பட்டிருந்த சிங்கள சிறி எழுத்துக்கள் யாவும் தார் பூசி அழிக்கப்பட்டன. அமிர்தலிங்கம் ஆரம்பித்த போராட்டம் மக்கள் போராட்டமாக மாறியது. அமிர்தலிங்கத்தின் முன்மாதிரியைப் பின்பற்றி ஆங்கில எழுத்துக்குப் பதிலாக தமிழ் எழுத்துடன் தொடங்கும் இலக்கத்தகடுகளுடன் மோட்டார் வாகனங்கள் யாழ்.மாநகர வீதிகளில் பவனிவந்தன. அதனை தமிழ் மக்கள் புரட்சிப் போராட்டமாகவே கண்டனர்.

### பிரபல்யம் பெற்றுக்கொடுத்த சிங்கள சிறி எதிர்ப்பு நடவடிக்கை

சிங்களசிறிஎதிர்ப்புப்போராட்டத்தை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களது அகிம்சை வழிப் போராட்டத்துக்குத் தலைமையேற்றுச் செயற்பட்ட தலைவர்

# அ. அமிர்தலிங்கம்

வடக்கு–கிழக்கு தமிழர் தாயகம் முழுவதும் விஸ்தரித்து போராட்டத்தை முன்னின்று நடத்திய பெருமை அமிர்தலிங்கத்துக் குண்டு.

இந்தப் போராட்டம் காரணமாக நாடாளு மன்ற உறுப்பினர்களும், தொண்டர்களும் படையினரால் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டனர். தலைவர் அமிர்தலிங்கம் தலைமையில் செனட்டர் ஜி.நல்லையா, ரி. சிறிதரன், ஆகியோர், யாழ்.பஸ் நிலையத்தில் வைத்துப் படையின ரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர்.

அப்போதிருந்த நீதிபதியான பி.சி.எஸ் டேவிட் அமிர்தலிங்கத்துக்கு 25 ரூபா தண் டம் விதித்திருந்தார். அதனைச் செலுத்த மறுத்தமையினால் அமிர்தலிங்கம் இரண்டு வாரங்கள் சிறையில் அடைக்கப் பட்டார்.

1973 இல், தமிழரசுக் கட்சியின் 12ஆவது மாநாடு மல்லாகத்தில் நடைபெற்றபோது அந்தக் கட்சியின் ஆறாவது தலைவராக அமிர்தலிங்கம் தெரிவு செய்யப்பட்டார். 1970இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அமிர்தலிங்கம் தோற்ற பின்னர் தமிழ் இளைஞர் பேரவை மலர்ந்தது. அமிர்த லிங்கத்தின் விருப்பத்தின் பேரில் உருவாக் கப்பட்ட தமிழ் இளைஞர் பேரவையில் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் தொகுதிகள் தோறும் இணைந்திருந்தனர்.

1976 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டது. 'தமிழீழமே' இறுதி முடிவு என்ற தீர்மானத்தைக் கட்சி எடுத்திருந்தது. 1972 ஆம் ஆண்டு அப் போதைய பிரதமரான சிறிமாவோ பண் டாரநாயக்க அரசு கொண்டு வந்த புதிய அரசமைப்புச் சட்டத்துக்கு எதிராகப் பரப் புரை செய்த தமிழ்த் தலைவர்களான வி.என்.நவரட்ணம், க.பொ.இரட்ணம், க.துரைரட்ணம், மு.சிவசிதம்பரத்துடன் சேர்ந்து, படையினரால் அமிர்தலிங்கமும் யாழ்.நகரில் வைத்துக் கைது செய்யப் பட்டார்.

மு.சிவசிதம்பரத்தைத் தவிர ஏனைய நால்வரும் கொழும்பு கொண்டு செல்லப் பட்டனர். ட்ரயல் அற்பார் நீதிமன்றம் உரு வாக்கப்பட்டு விசாரணை நடை பெற்றது. அமரர்களான ஜி.ஜி. பொன்னம்பலம், தந்தை செல்வநாயகம், எஸ். திருச்செல் வம் தலைமையில் பெரும் சட்டமேதை கள் பலர் தமிழ்த் தலைவர்களுக்கு ஆதர வாக வாதிட்டனர்.

வழக்கின் முடிவில் நான்கு தலைவர்களும் விடு தலையாகியிருந்தனர்.

### எதிர்க்கட்சித் தலைவராகத் தம்மை இனங்காட்டியமை

1977 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் தமிழருக்குகெதிரான இனக்கலவரம் வெடித் தது. தமிழ் மக்கள் பல நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். தமிழ் மக்களின் பொருள்கள் சூறையாடப்பட்டன. எதிர்க்கட்சித் தலைவரான அமிர்தலிங் கம், இனக் கலவரத்தைக் கட்டுப்படுத்தி, தமிழ் மக்களைப் பாதுகாக்குமாறு அன் றைய முதலாவது நிறைவேற்று அதிகா ரம் கொண்ட ஜனாதிபதியான ஜே. ஆர்.ஜெயவர்த்தனவைக் கேட்டுக்கொண் டார். ஆனால் ஜே.ஆரோ 'போர் என்றால் போர்', 'சமாதானம் என்றால் சமாதானம்' என ஆணவத்தன்மையோடு பதிலளித்தி ருந்தார்.

ஜே.ஆரின் நரித்தந்திர அரசியலுக்கும், இனவாதக் கடும் போக்காளர்களின் வன்மையான கண்டனங்களுக்கும் மத் தியில் வளைந்து கொடுக்காது துணிந்து நின்று குரல் கொடுத்த தலைவர் அமிர்த லிங்கம் ஆவார்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் விலை போகாத உறுதிமிக்க தலைவனாகத் தமிழ்த் தேசி யத்தை இறுகப்பற்றி நின்றவர். எதிர்க் கட்சித் தலைமைப் பதவியை ஏற்ற காலம்தொட்டு அந்தப் பதவியிலிருக்கும் வரையில் விடுதலைப் போராட்டங்களின் நியாயங்களை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தி வந்தவர்.

> எதிர்க்கட்சித் தலைவரான அமிர்தலிங் கம், இனக்கலவரத்தைக் கட்டுப்படுத்தி தமிழ் மக்களைப் பாதுகாக்குமாறு அன்றைய முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவைக் கேட்டுக்கொண்டார். ஆனால் ஜே.ஆரோ 'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதா னம்' என ஆணவத்தன்மையோடு பதில ளித்திருந்தார்.

தந்தை செல்வா 1974 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் அமிர்தலிங்கத்தைப் பற்றிக் கூறுகையில், 'ஈழத்தமிழ் மக் களின் விடுதலைக்குப் போராடுவதற்கு அவருக்குப் போதிய காலம் இருக்கின்றது. வயதைப் பொறுத்தவரையில் அவரை ஒரு இளைஞர் என்றுதான் சொல்ல வேண்டும்'–என்றார்.

எதிர்க்கட்சித் தலைவராக உயர்ந்த அமிர்தலிங்கத்தின் புகழ், ஆற்றல், அறிவு என்பவை சர்வதேசமட்டத்தில் உயர்ந்தன. அதன்மூலம் தமிழினத் தின் பிரச்சினைகளை உலகறியச் செய்தார்.

1989 பெப்ரவரியில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு, தோல் வியடைந்திருந்தாலும், போட்டியிட்ட கட் சியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் தேசியப்பட்டியல் மூலம் நாடாளு மன்றம் சென்றார். சுமார் ஆறு மாதங் கள் வரையில் தமிழினத்துக் காக அவரது குரல் ஒலித்தது. 13.7.1989 அன்று கொழும் பில் தான் தங்கியிருந்த தமது இல்லத்தில் ஆயுதம் தாங்கிய குழுவினரால் சுட்டுக்கொல் லப்பட்டார்.

தமிழர்கள் தமது உரிமை களைப் பெற்றுக்கொள்வதற் காக, அர்ப்பணிப்போடும், தியாக உணர்வோடும் தனக்கு வந்த நெருக்கடிகளையும், சோதனை களையும் தாங்கியவாறு 40 ஆண்டுகள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தமிழி னத்துக்காக அர்ப்பணித்தவர் அமிர்தலிங்கம்.

தமிழ்த் தேசியப் போராட்டத்தைச் சர்வ தேச மயமாக்கி, இன்றும் தமிழினத்தின் உரிமைகளுக்கான போராட்டம் தீவிரம டைய அவரது அப்போதைய இராஜ தந்தி ரமும் தூரநோக்கும் ஒரு காரணமாகும். தலைவர் அமிர்தலிங்கம் மறைந்து 27 ஆண்டுகள் முழுமையான போதிலும் அவ ரது தமிழர்களது விடுதலைக் கனவானது என்றோ ஒருநாள் நனவாகும்.

## இளையவர்களே; ஒரு கணம் சிந்திப்பீர்களா?

யாழ்ப்பாணத் தமிழர்களது பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் உலகின் பலபகுதிகளில் பரவியுள்ளன. ஒரு தமிழ்த் திரைப்பட மொன்றில், உனக்குத் தமிழ் கலாசாரத்துக்கு அமைவான பெண் வேண்டு மென்றால் யாழ்ப்பாணம்தான் போகவேண்டும் என்பார் விவேக், ரஜனியிடம். எமது பேச்சுத் தமிழை தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், திருமுருக கிருபாணந்தவாரியாரும் போற்றிப் புகழ்ந்துள்ளதாக நான் வாசித்திருக்கின்றேன். விருந்தோம்பல், கலை, கலாசாரம் என எல் லாவற்றிலும் புகழுடன் வாழ்ந்த நாம் முன்னரெல்லாம் மூத்தவர் களுக்கு மதிப்பளித்தோம். அவர்கள் நோயுற்று இருந்தபோது பரா மரித்தோம். அவர்களின் இறுதிக்காலம் வரை அவர்களுக்குத் துணை யாக இருந்தோம். (எமது தாய் தந்தையினரும் தான்) இப்பொழுது நேர்மாறாக அவர்களை எடுத்தெறிந்து நடப்பதும், ஏளனம் செய் வதும், சர்வசாதாரணமாகிவிட்டது. மனைவி பேச்சைக் கேட்டுப் பெற் றோரை விரட்டியடிக்கும் உத்தமபுத்திரர்களும், 'சனியனுகள், வேளைக்குப் போய்த் துலையுதுகளில்லை. இஞ்சை இருந்து எங்கடை கழுத்தை அறுக்குதுகள்' என்று சீறிச் சினக்கும் தவப்புதல் வர்களும், விட்டது தொல்லை என முதியோர் இல்லத்தில் தமது பெற்றோர்களைத் தவிக்கவிடும் தெய்வ மகன்களும், வாழும் யாழ். மண்ணிலா நாமும் வாழ்கின்றோம் என்பதை நினைக்க மனதுக்கு நெருடலாக உள்ளது. முதுமை என்பது நாளை தமக்கும் வந்தேயா கும் என்பதை மறந்து நடக்கும் எமது பிள்ளைகள், அவர்கள் பிள் ளைகள் அவர்களை வயதான காலத்தில் எப்படி நடத்துவர் என்பதையும் உணரத் தவறிவிட்டனர். தமது உடலை உருக்கி, உருக்குலைத்து உங்களைப் பெற்று வளர்த்த பெற்றோர்கள், உங்களாலும் உங்களது மனை விமாராலும் நிர்க்கதியாக்கப்படலாமா? இறுதியாக, எமது பிள்ளைகளிடம் ஒரு வேண்டுகோள்! உங்களைச் சுமந்து அதிக தூரத்தைக் கடந்த நாம், உடற் சோர்வால் சிறிது ஓய்வாகியுள்ளோம். இறைவன் எமக்கு நிரந்தர ஓய்வு தரும்வரை, எம்மைத் துன்புறுத் தாதீர்கள். உங்களது சுடுசொற்களைத் தாங்கும் பலம் எங்களது இதயங்களுக்கு இல்லை. இளையோர்களே, முதியோர்களுக்கு மதிப்பளியுங்கள். உங்கள் பெற்றோர்களிடமும் அன்புகாட்டுங்கள்.

**ந.மரியநாயகம்,கொழும்புத்துறை.**

## உங்களுக்கு வந்தா இரத்தம் மற்றவனுக்கு வந்தா தக்காளிச் சட்னியா..?

மாநகர சபை அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை, அங்க மணக்குது, இங்க பிரட்டுது எண்டு எங்களில பலபேர் அள்ளி விளாசுவம். ஆனால் அந்த மணக்குறதுக்கும் பிரட்டுறதுக்கும் காரணகர்த்தாக்கள் நாங்கள்தான் எண்டு எப்போதாவது சிந்தித்திருக்கின்றோமா?

கடந்த சனிக்கிழமை (09.07.2016) மாலை 6.30 தொடக்கம் 7 மணிக்கு இடைப்பட்ட நேரம். அலுவலக வேலையெல்லாம் முடிச்சுட்டு வீட்ட சென்றுகொண்டிருந்தன். வழக்கம்போல கொஞ்சம் மெதுவாகத்தான் சைக்கிள் நகர்ந்து கொண்டிருந்தது. கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு முன்னாலை போகேக்க குப்பெண்டு ஒரு மணம். இண்டைக்கு குளிச்சனான்தானே, பிறகு எப்பிடி எண்டுட்டு திரும்பிப் பார்த்தன். ஒரு உரப்பையிலை நாய் ஒன்று இறந்த நிலையில் கட்டப்பட்டு வீசப்பட்டிருந்தது. எனக்குள்ள ஒரு கேள்வி? என்னெண்டு இந்த நாயின்ரை உடல் இங்க வந்தது. அந்த வீதியால போன ஒருவர்தான், இந்த நாய் வேலையைச் செய்திருக்கிறார் எண்டதில கொஞ்சம்கூடச் சந்தேகம் இல்லை. வீசியவர் வீசி விட்டுச் சென்று விட்டார். இரண்டு விடயங்களை அவர் சிந்திக்கத் தவறிவிட்டார். முதலாவது, இறந்த நாயின்ரை உடல் அகற் றப்படும் வரைக்கும் அந்த வீதியால் பயணிப்போர் படப்போகும் அசௌகரியங்களை அவர் சிந்திக்கவில்லை. இரண்டாவது அதை அப்புறப்படுத்தப் போபவரும் ஒரு மனிதன் தான் என அவர் எண்ணவில்லை.

சைக்கிள் சில்லுடன் இணைந்து என் சிந்தனைகளும் உருண்டோடின. மாநகர சபைக்கு அதை அப்புறப்படுத்த வேண்டிய கடமை உள்ளது. கட்டாயம் செய்துதான் ஆக வேண்டும். அது சட்டம். ஆனால் சட்டத்தையும் விட வலிமையான, மனிதாபிமானம் என்ற ஒன்றும் உள்ளதல்லவா? நாயின் உடலை அங்கை கொண்டு வந்து எறிந்தவர் வீட்டில் அப்படி ஒரு மீற்றர் நிலப்பரப்பு இல்லையா? இதை அப்புறப்படுத்தும் போது அதைச் செய்யும் மாநகரசபை ஊழியரின் மனநிலை எவ்வாறிருக்கும்? அந்த நாயின் உடலைத் தூக்கிச் சென்ற பின்னர், அதைத் தூக்கிச் சென்ற ஊழியர் அடுத்த நேர உணவை எத்தகைய மனநிலை யில், எதிர்கொண்டிருப்பார். அவரின் எண்ணங்கள், சிந்தனைகள் எவ்விதமாக அமையும், நாயை வீசிவிட் டுச் சென்றவர் அந்த ஊழியரிடம் எவ்வாறான வசைச் சொற்களை வேண்டிக் கட்டுவார். இவ்வளவு விட யங்களையும் நாம் செய்தால் (மாநகரசபையின் ஊழியரின் நிலையிலிருந்து) எமது உலகம் எவ்வாறாக கட் டமைக்கப்படும். அமைதி, ஆரோக்கியம் நிலைபெறுமா? இந்தப் பதிவை வாசிப்பவர்களின் பதில் நிச்சயம் இல்லை என்றே அமையும். உங்களுக்கு வந்தால் இரத்தம் மற்றவனுக்கு வந்தால் தக்காளிச் சட்னியா? இனியாவது .....!

**ராஜப்பிரகாஸ், ஆனைக்கோட்டை.**

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விபரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப் பாகுபாடு இனி வேண்டாம்

## அமெ. ஜனாதிபதி ஒபாமா கோரிக்கை

வொஷிங்ரன், ஜூலை.14



நாட்டில் நிலையான ஒற்றுமையைப் பேணவேண்டும். இனப்பாகுபாடு நம்மிடையே வேண்டாம் என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

நிறப் பாகுபாடு காரணமாக இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தினால் அமெரிக்காவின் பல இடங்களில் வன்முறைகளும் தொடர் கைதுகளும் இடம்பெற்றன. இதனை அடுத்து, போலந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தனது பயணத்தைக் குறுக்கிக் கொண்டு நாடு திரும்பியிருந்தார்.

இனப் பாகுபாடு காரணமாகச் சுட்டுக் கொல்லப்பட்ட பொலிஸாரின் ஞாபகார்த்தச் சடங்கில் அவர் பங்கு கொண்டார்.

இதன்போது அவர் தனது உரையில், 5 அமெரிக்கர்கள் உயிரிழந்தமை மிகவும் கவலையளிக்கிறது. அவர்களுக்கான மரியாதையைச் செலுத்துவோம். அவர்களது குடும்பத்தினருக்கும் எமது ஆறுதலையும், ஆதரவையும் வழங்குவோம் - என்றார்.

ஒபாமாவின் பேச்சு இனப் பாகுபாடு தொடர்பாக அமைந்திருந்தது. இரு தரப்பினரது உணர்வுகளையும் பிரதிபலிக்கும் வகையில் இருந்தது. எந்த நிறுவனங்களும் முற்றாக இனப் பாகுபாட்டு உணர்வின்றி இல்லை. அதன் அடிப்படையில் பொலிஸ் திணைக்களமும் விதிவிலக்கு அல்ல என்றும் ஒபாமா கூறினார்.

எமது சமூகத்தில் இளையவர்களுக்குப் புத்தகம் கிடைப்பதை விடத் துப்பாக்கி கிடைப்பது இலகுவாக உள்ளது. பொலிஸார் மாத்திரம் இவற்றுக்கு எதிராகச் செயற்பட்டால் போதாது. நாமும் செயற்பட வேண்டும் எனவும் ஒபாமா சுட்டிக்காட்டினார். (த-ரி4)

# காளை அடக்கும் வீரரின் சாவை கொண்டாடியோருக்கு எச்சரிக்கை

மட்ரிட், ஜூலை.14

ஸ்பெயினில் இடம்பெற்ற காளை அடக்கும் போட்டியில் முன்னணி வீரர் உயிரிழந்தமைக்கு விலங்கு ஆர்வலர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். இதனை அடுத்து வீரரின் சாவைக் கொண்டாடிய விலங்கு ஆர்வலர்களுக்கு 14 மாதங்கள் கடுங்காவல் தண்டனை வழங்கப்படும் என ஸ்பெயின் காளை அடக்கும் சங்கம் எச்சரித்துள்ளது.

காளை அடக்கும் முன்னணி வீரரான விக்ரர் பரியோ (வயது - 29)அண்மையில் அரைத் தொன் எடையுள்ள காளையால் தாக்கப்பட்டு, மருத்துவமனையில் உயிரிழந்தார்.

இதனை அடுத்து உயிரிழந்த வீரரின் குடும்பத்தினருக்குப் பலரும் ஆறுதல் தெரிவித்திருந்தனர்.

ஆனால் பல விலங்கு ஆர்வலர்கள், பரியோ சாகவேண்டியவர்தான் எனச் சமூக வலைத்தளங்களில் கருத்துக்களைப் பகிர்ந்துள்ளனர். இதனைவிட இவரது சாவைக் கொச்சைப்படுத்தும் பல பதிவுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றதை அடுத்து ஸ்பெயின் காளை அடக்கும் சங்கத்தினர் இந்த அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

சட்டவல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தி இந்த அதிரடி அறிவிப்பை அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலை, கருத்துச் சுதந்திரத்துக்கான கட்டுப்பாடு என்று அர்த்தம் இல்லை. ஆனால் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இருக்கவேண்டும் என வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்தார். (த-ரி4)



# அதிக சவால்களுடன் பிரிட்டன் பிரதமரா

## பொறுப்புக்களைக் கையளி



லண்டன், ஜூலை.14

பிரிட்டனின் புதிய பிரதமராக தெரேசா மே நேற்றுப் பதவி ஏற்றுள்ளார். அவருக்கு அதிக சவால்கள் காத்திருப்பதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவதற்கு ஆதரவு வழங்கியவர்களில் தெரெசாவும் ஒருவர். இதனை அடுத்து பிரதமராகத் தெரெசா மே தெரிவு செய்யப்பட்டார். இவர் பிரிட்டனின் 2 ஆவது பெண் பிரதமர் ஆவார். இவர் கடந்த 6 வருடங்களாகப் பிரிட்டன் உள்துறை அமைச்சராகப் பதவி வகித்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 23 ஆம் திகதி நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், ஐரோப்பியஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகவேண்டும் என மக்கள் வாக்

> ஐரோப்பிய ஒன்றியத்துடன் பிரிட்டன் எவ்வாறான தொடர்பைக் கொண்டிருக்கப் போகின்றது என ஜேர்மன் அதிபர் ஏஞ்சலா மோர்கல் கேள்வி எழுப்பியுள்ளார். முன்னதாகப் பிரிட்டன் வெளியேறியமை 28 ஐரோப்பிய நாடுகளை அதிர்ச்சியடையச் செய்ததுடன், பொருளாதாரத் தளம்பலும் ஏற்பட்டது.

பதவிக்கான போட்டியில், ஏனையோர் விலக அன்றியா லிட்சமுடன் தெரேசா போட்டியில் இருந்தார்.

நேற்றுப் புதன்கிழமை அன்றியா லிட்சம் போட்டியில் இருந்து விலக ஏக

# நேருக்கு நேர் மோதின ரயில்கள் இத்தாலியில் 25 பேர் உயிரிழப்பு

ரோம், ஜூலை.14



இத்தாலியில் நேற்று முன்தினம் பயணிகள் ரயில்கள் நேருக்கு நேர் மோதியதில் 25 பேர் உயிரிழந்தனர்.

புக்ளியா என்ற பகுதியில், அன்றியா-கொராட்டோ நகரங்களுக்கு இடைப்பட்ட ரயில்களே இவ்வாறு விபத்துக்குள்ளாகின.

சம்பவ இடத்துக்குத் துரிதமாக விரைந்த மீட்புப் படையினர் ரயில் பெட்டிகளில் சிக்கியிருந்தவர்களை மீட்டனர். இந்தச் சம்பவத்தில் 50 பேர் காயமடைந்தனர் என மீட்புப் படையினர் தெரிவித்தனர். அத்துடன் ரயில்கள் நேருக்கு நேர் மோதியதில் முதல் மூன்று பெட்டிகளும் சிதைந்துள்ளன. விபத்துக்கான காரணம் இன்னமும் கண்டறியப்படவில்லை. ஆனால் முழுமையான விசாரணைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

விபத்துக் குறித்து இத்தாலியப் பிரதமர் தெரிவிக்கையில், விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன், சம்பவம் குறித்து துல்லியமான விசாரணைகள் நடத்தப்படும்-என்றார்.

இத்தாலியில் இடம்பெற்ற மிகமோசமான விபத்து இது எனப் பலரும் தெரிவித்துள்ளனர். விபத்தில் படுகாயமடைந்தவர்கள் ஹெலி மூலம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (த-ரி4)



பதவி
பவு
பிரத
வந்த
இதன

# கொலம்பியாவுக்குள் பொருள்க

## நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதாரத் தடையால்

கரகாஸ், ஜூலை.14

வெனிசுலா நாட்டு மக்கள், அயல் நாடான கொலம்பியாவுக்குச் சென்று உணவு, மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்ய, அந்த நாட்டு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதனை அடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு கொலம்பியாவுக்குச் சென்று உணவு, மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்தனர்.

இதற்காக இரு நாடுகளுக்கும் இடையில் 12 மணித்தியாலங்கள் பாதை திறக்கப்பட்டிருந்தது.

வெனிசுலாவில் நிலவும் கடும் பொருளாதா நெருக்கடியால், உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

கடந்த வாரம் 500 வெனிசுலாப் பெண்கள் நாட்டின் எல்லையைக் கடந்து உணவு தேடச் சென்றனர். இதனை அடுத்து வெனிசுலா அரசு கொலம்பிய எல்லைகளைத் திறந்தது. முன்ன தாக வெனிசுலா ஜனாதிபதி, நிக்கொலஸ் மடுரோ கொலம்பியப் பகுதி எல்லைகளைப் பூட்டியிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருடன் நேற்று
# மரானார் மே

## பளித்தார் கமரூன்



களித்தனர்.

தனது அறிவுரையை மக்கள் ஏற்காததை அடுத்து பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் பதவி விலக முன்வந்தார். நேற்று அவர் பதவி விலகியதை அடுத்து புதிய பிரதமராகத் தெரெசா மே பதவி ஏற்றார்.

இதனை அடுத்து ஐரோப்பிய நாடுகள் தெரேசா மீது அழுத்தம் கொடுத்து வருகின்றன. ஐரோப்பிய ஒன்றியத்துடன் பிரிட்டன் எவ்வாறான தொடர்பைக் கொண்டிருக்கப் போகின்றது என ஜேர்மன் அதிபர் ஏஞ்சலா மோர்கல் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னதாகப் பிரிட்டன் வெளியேறியமை 28 ஐரோப்பிய நாடுகளை அதிர்ச்சியடையச் செய்ததுடன், பொருளாதாரத் தளம்பலும் ஏற்பட்டது.

இந்த நிலையில் பிரிட்டனின் முடிவு பற்றிப் பலரும் கருத்துக்களை முன்வைத்துள்ளனர். (த-ரி4)

## கடத்தல்காரனைத் தாக்கிவிட்டு தப்பினார் எட்டு வயதுச் சிறுமி

### கலிபோர்ணியா மாகாணத்தில் சம்பவம்

கலிபோர்னியா, ஜூலை.14

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் வீடு புகுந்து சிறுமியைக் கடத்த முற்பட்ட கடத்தல் காரன் மீது குறித்த சிறுமி தாக்குதல் நடத்தியமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, அதிகாலை 4 மணிக்கு, வீட்டைப் பிரித்து உள்ளே இறங்கிய கடத்தல்காரன் அங்கு உறங்கிக் கொண்டிருந்த 8 வயதுச் சிறுமியைக் கடத்த முற்பட்டுள்ளான் எனப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சிறுமியும் அவளது சகோதரனான சிறுவனும் படுத்திருந்த அறைக்குள் நுழைந்த கடத்தல்காரன் சிறுமியைத் தூக்கியபடி படியில் நடந்து சென்றுள்ளான். இந்தச் சமயம் கண்விழித்துக் கொண்ட சிறுமி கடத்தல்காரனின் கழுத்தில் தாக்கி, அவனிடம் இருந்து தப்பிப் பெற்றோரின் அறைக்குள் நுழைந்து நடந்தவற்றைத் தெரிவித்தார்.

இதற்கிடையில் கடத்தல்காரன் முன் கதவைத் திறந்துகொண்டு தப்பிச் சென்றுள்ளான். அவன் அங்கு எந்தப் பொருளையும் திருடவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தால் சிறுமி பயந்து இருந்தபோதும், அவள் துணிவுடன் செயற்பட்டதாகத் தாயார் தெரிவித்தார். பொலிஸரின் மோப்ப நாய்கள் தடயங்களைக் கண்டுபிடித்தபோதும், குற்றவாளியை இன்னமும் கைது செய்யவில்லை எனப் பொலிஸார் கூறினர்.



## கொமெட் அமைப்பில் இராட்சதக் கட்டடம்

பீஜிங், ஜூலை.14

சீன மத்திய அரசு வித்தியாசமான கட்டடம் ஒன்றை அமைத்து வருகின்றது. சீனாவின் ஹெனான் மாகாணத்தில், இராட்சதக் கொமெட் (கழிவறை கோப்பை) அமைப்பில் இது உருவாகியுள்ளது.


எதிர்வரும் ஆண்டில் இந்தப் பணிகள் நிறைவடைந்து அது திறந்து வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது வட சீனாவின் நீர், மின்சாரத் திணைக்களத்துக்குச் சொந்தமான கட்டடமாகும். முன்னதாகச் சீனாவில் விமான நிலையம், மக்கள் தலைமையகம் என்பன பெண், ஆண் உறுப்புகளில் வடிவமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (த-ரி4)



பதவி விலகிய பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன், 3.6 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்டுகள் பெறுமதியான இல்லத்தில், தனது குடும்பத்தினருடன் குடியேறியுள்ளார். இவர் பிரதமராக இருந்தபோது, 1 லட்சத்து 50 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்டுகளைச் சம்பளமாகப் பெற்று வந்தார். குறித்த இல்லம் லண்டனில் இருந்து 70 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. ஆனால் இதனை விட அவர்களுக்கு வேறு இல்லங்களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

## பொம்மைகளால் நிறைந்த கிராமம்



டோக்கியோ, ஜூலை.14

ஜப்பானில் வசிக்கும் பெண் ஒருவர் பொம்மைகளால் தனது கிராமத்தை நிரப்பிவருகிறார்.

அயானோ சுகிமி என்னும் 67 வயதுடைய குறித்த பெண் தெற்கு ஜப்பானில் உள்ள நகோரோ தீவில் ஆளுயரப் பொம்மைகளால் கிராமத்தின் பல பகுதிகளை நிரப்பி வருகின்றார்.

சுகிமி கடந்த 14 வருடங்களாக இறந்தவர்களை நினைவு கூரும் வகையில் அவர்களைப் போன்ற உருவத்தை ஒத்த பொம்மைகளைத் தயாரித்து வருகிறார்.

அவரது கிராமத்தில் வசிக்கும் சனத் தொகையை விட பொம்மைகளின் எண்ணிக்கை அதிகம் ஆகும்.

14 வருடங்களில் அவர் 350 இற்கும் அதிகமான பொம்மை களைத் தயாரித்துள்ளார். கிராமத் தில் இதுவரை இறந்த அனை வரையும் நினைவு கூரும் வகையில் அவர் பொம்மைகளைத் தயாரித் துள்ளதுடன், கடந்த 3 ஆண் களாக அவற்றைக் குறித்த நபர்க வசித்த இடங்களில் அமர்த்தியு ளார்.

இவரது செயலைப் பல ஊடகங்க ஆவணப்படுத்தியுள்ளன. (த-ரி4

## ருள்கள் வாங்க திரண்டனர் 35 ஆயிரம் வெனிசுலா மக்கள்

ல்

பொருளாதார ாருள்களைப் மத்தை எதிர்

ப் பெண்கள் உணவு தேடச் னிசுலா அரசு ந்தது. முன்ன காலஸ் மடுரோ ப் பூட்டியிருந்



தார்.

கொலம்பியர்கள் அத்துமீறி வெனிசுலாவுக்குள் நுழைவதைத் தடுக்க, எல்லையை மூடியதாக அவர் தெரிவித்தார்.

எல்லைகள் திறக்கப்பட்டதை அடுத்து ஒரே தினத்தில் மாத்திரம் 35 ஆயிரம் பேர் கொலம்பியாவுக்குச் சென்று உ பொருள்கள் கொள்வனவில் ஈடுபட்டனர்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி விலைவாசி மிகவும் உயர்ந்துள்ளது. இத வெனிசுலா மக்கள் கொலம்பியா வுக்குச் சென்று யாவசிய உணவுப் பொருள்களைக் கொள்வ செய்தனர்.

இந்தப் பயணத்துக்கு வெனிசுலா அரசு சிறப்பு பஸ் செய்து கொடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூலை மாத ராசி பலன்கள்



## விருச்சிகம்

### விசாகம் 4ம் பாதம், அனுசம், கேட்டை

அறிவும், ஆற்றலும் ஒருங்கே பெற்ற விருச்சிக ராசியினரே நீங்கள் பிடிவாத குணத்தைத் தளர்த்திக் கொண்டால் எதிலும் வெற்றி நிச்சயம். இந்த மாதம் ராசியில் வக்கிரக நிவர்த்தி பெற்ற ராசி நாதன் செவ்வாய் - சனி, சுக ஸ்தானத் தில் கேது, அஷ்டம ஸ்தானத்தில் சூரி யன் - புதன் - சுக்கிரன், தொழில்ஸ்தானத் தில் குரு - ராகு எனக் கிரகங்களின் சுழற்சி இருக்கிறது. ராசியாதிபதி செவ் வாய் வக்கிரக நிவர்த்தி பெற்று ராசிக்கு மாறியிருக்கிறார். புத்திக் கூர்மையுடன் எதையும் செய்வீர்கள். எதிர்காலம் தொடர்பான திட் டங்கள் மனதில் தோன்றும். எதை யும் முன்னேற் பாட்டுடன் செய்வீர் கள். விவேகம் உண டாகும்.

தொழில் ஸ்தானத்தில் தன பஞ்சமாதிபதி குருவும் ராகுவும் இருக்கிறார்கள்.

தொழில், வியாபாரம் தொடர் பான விடயங்கள் சாதகமாக நடந்து முடியத் திறமையாகச் செயற்படுவீர்கள். புதிய ஓடர்கள் கிடைக்கப் பெறுவீர்கள். எதிலும் அவசரப்படாமல் இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஏற்க னவே செய்த திறமையான பணிக ளுக்கு உரிய நற்பயனைப் பெறுவார் கள்.

குடும்பத்தில் தாய்வழி உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். கண வன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். உயர்ந்த ஆடை ஆபர ணங்கள் சேரும். நல்லது கெட்டது அறிந்து செயற்பட்டு நன்மை கிடைக் கப் பெறுவீர்கள். பணவசதி கூடும். குழந்தைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். அவர்களிடம் அன்பு அதிகரிக்கும்.

பெண்கள் எந்த ஒரு செயலைச் செய்யும் முன்பும் அதில் இருக்கும் நல்லது-கெட்டதை ஆராய்ந்து பார்த்த பின் அதில் ஈடுபடுவது நல்லது. பண வரத்து திருப்தி தரும். மாணவர்களுக்கு எதையும் அவசரமாகச் செய்யாமல் யோசித்துச் செயற்படுவது நல்லது. கல்வியை பற்றிய கவலை குறையும்.

**பரிகாரம்:** காசி விசாலாட்சியை வழி பட எதிர்ப்புகள் அகலும். காரியத் தடை நீங்கும்.

**விசாகம் 4ம் பாதம்:**
வீண் பிரச்சினைகள் தலைதூக்கும். நண்பர்கள், உறவினர்களுடன் மன வருத்தம் உண்டாகலாம். பயணங்கள் செல்ல நேரிடும். கூட்டுத் தொழில் அல் லது வியாபாரம் செய்பவர்கள் கவன மாக இருப்பது நல்லது. உத்தியோகத் தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச் சல் உண்டாகும். வேலைப்பளு கூடும்.

**அனுசம்:**
குடும்பத்தில் அடுத்தவர்களால் ஏதே னும் குழப்பம் உண்டாகலாம். கண வன், மனைவிக்கிடையே ஒருவருக் கொருவர் அனுசரித்துச் செல்வது நல் லது. பிள்ளைகளுக்காகச் செலவு செய்ய வேண்டி இருக்கும். நெருப்பு, ஆயுதங் களைக் கையாளும்போது கவனம் தேவை. வாகனங்கள் ஓட்டும்போது எச்சரிக்கையாக இருப்பதும் நல்லது.

**கேட்டை:**
உறவினர்களிடம் பேசும்போது கவன மாகப் பேசுவது நல்லது. பயணங் களால் வீண் அலைச்சல் ஏற்படலாம். பெரியோர் சொற்படி நடப்பது வெற் றிக்கு உதவும். சுக்கிரன் சஞ்சாரம் மூலம் பணவரத்து அதிகரிக்கும். கடன் பிரச்சினை தீரும்.

(தொடரும்)

சி.நற்குணலிங்கம்

# ஒரு செக்கனைக்கூட நாம் இழக்கக் கூடாது

நாம் எப்படி வேண்டுமானாலும் வாழ்ந்து கொண்டிருக்கலாம். ஆனால், நாளை நல்ல எதிர்காலம் அமைய வேண்டும். மக்கள் போற்றும் நல்ல அங்கீகாரத்துடன் வாழ வேண்டுமாயின் நேர முகாமைத் துவத்தில் கவனம் செலுத்த வேண்டும். நாம் இன்று அவசர உலகில் வாழ்ந்து கொண்டிருப்பதால் எமது செயற்பாடுகளுக்குத் திட்டமிடாதவகையில் நேரத்தை ஒதுக்குவோமாயின் ஒருநாளின் 24 மணித்தியாலங் கள் சில சமயங்களில் போதாமல் இருக்கும். இதனால் எல்லா வேலைகளையும் முழுமையாக, திருப்தியுடன் செய்ய முடியாது. எனவே அனைவருக்குமே நேர முகாமைத்துவம் என்பது ஒரு சவாலாகவே உள்ளது. நாளாந்தம் நம் நேரத்தை வீணடிக்கப் பல வடிவங்கள் உருவாகிவிட்டன. எவரைப்பற்றியாவது புதிய கிசுகிசுக் கள் வந்துவிட்டா, அதைப்பற்றிப் பேசிப்பேசி மகிழ் வார்களும், பிறரை இழித்துப் பழித்துப் பேசுவதில் அதிக நேரத்தைச் செலவு செய்பவர்களும் இருக்கிறார்கள். இவை மனதுக்கு மகிழ்வாக இருந்தாலும் அவ்வளவு நேரமும் விரயமாகி விட்டதை உணரமாட்டார்கள். சிலர்




எவ்வாறு நேரத்தைப் போக்கலாம் எனச் சிந்தித்து நண்பர்களுடன் இணைந்து மது அருந்துதல், புகைத் தல், வீதியால் செல்வோருக்கு இடைஞ்சல் கொடுத்தல், முகநூல் பாவனை, தொலைக்காட்சிப் பார்வை, தொலைபேசிப் பாவனை எனத் தேவையற்ற செயல் களில் நாளும் பொழுதும் நேரத்தை விரயமாக்கு கின்றனர். இவர்கள் இன்றைய களிப்பு நாளைய இழப்பு என்பதை மறந்து விட்டார்கள்.

நேரம் பொன்னானது என்பதை உணர வில்லை. நேரம் என்பது நிற்பதில்லை. அது ஓடிக்கொண்டிருக்கும். அதைக் கோட்டைவிடாமல் தாவிப்பிடித்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் நாம் சேரவேண்டிய இடத்துக்கு எம்மைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும். நாம் படிக்கும் போதும்சரி, தொழில் பார்க்கும் போதும்சரி, ஊரிலும்சரி நேரத்தை மதிக்கும் நண்பர் களை இணைத்துக் கொள்ளவேண்டும். அவ்வாறான நட்பு நேரமுகாமைத்துவம் பற்றி எம்மை அறியாமல் அடிக்கடி மனதுக்குள் அறிவித்துக் கொண்டிருக்கும். இதன் விளைவாக நவீன வாழ்க்கைமுறை தந்த விரும் பத்தகாத பரிசுகளுள் ஒன்றான மன உளைச்சல் எனப்படும் பதற்றம் எம்மை விட்டு அகலும். வேலைத்தளங்களில் வேலைசார் அழுத்தம் அல்லது நெருக் கடியிலிருந்து விலகிக்கொள்ளலாம். இதன்மூலம் சிறந்த வினைத்திறன் மிக்க தொழிலையும் மேற்கொள்ள முடியும். வினைத்திறன்மிக்க தொழி லாளர் வளத்தையும் நிறுவனம் பெற்றுக் கொள்வதன்மூலம் தமது இலக்கை எட்டி, உள மற்றும் பொருளாதார ரீதியில் வெற்றியடையலாம். பரீட்சையை எதிர் நோக்கும் மாணவர்கள் நேரத்தில் கவனம் செலுத்துவதன் மூலம் பரீட்சை மண்டபத்துக்கு உரிய நேரத்துக்குச் செல்லவும், வினாக்களுக்கு விடைய ளிப்பதற்கான நேரத்தை ஒதுக்குவதற் கும் நேரப் பாதீட்டில் மீளாய்வுக்காகச் சிறிது நேரத்தை ஒதுக்கிக் கொள்ளவும் உதவும். இதன்மூலம் மாணவர்கள் பரீட்சை மண்டபத்திலிருந்து நிறைந்த மனதுடன் மகிழ்ச்சியுடன் வெளியேறலாம்.

> நேரத்தை எவர் மதிக்கிறார்கள், எவர் திட்டமிட்டுச் செயற்படுகிறார்களோ அவர்கள் நிச்சயம் நேர முகாமைத்துவத்தால் நன்மையை அடைந்தே தீருவார்கள்.

நேரத்தை எவர் மதிக்கிறார்கள், எவர் திட்டமிட்டுச் செயற் படுகிறார்களோ அவர்கள் நிச்சயம் நேர முகாமைத்து வத்தால் நன்மையை அடைந்தே தீருவார்கள். சில பெற்றோர்கள் வேலைப்பளு காரணமாகவோ அல்லது தொலைக்காட்சி நாடகப் பார்வை காரணமாகவோ தினம் தோறும் தங்களது பிள்ளைகளுடன் பேசுவதற்குச் சிறிது நேரத்தைக்கூட ஒதுக்குவதில்லை. அவ்வாறில்லாது பெற்றோர்கள் பிள்ளைகளின் உறவுக்காகக் கட்டாயம் நேரம் ஒதுக்கப்பட வேண்டும். குறித்த அந்த நேரத்துள் பிள்ளைகள் வெளியில் எதிர் கொண்ட பிரச்சினைகள் பற்றிப்பேசி ஏதேனும் பிரச்சினை இருந்தால் அதற்குத் தீர்வு கூறவேண்டும். விடுமுறை நாள்களிலாவது உற வினர்களுடன் உரையாட நேரம் ஒதுக்கப்படவேண்டும். இல்லையேல் பிள்ளைகளுக்கும் உறவினர்களுக்கு மிடையிலான உறவில் இடைவெளி அதிகரித்துவிடும். உறவினர்களுடன் உறவாடுதலும் மிக முக்கியமானதா கும். நாம் படிக்கும் போதும்சரி, பயிற்சி செய்யும்போதும் சரி, எமக்குத் துணை நிற்பது நேரம் என்பதைப் புரிந்து நேரத்தை ஒதுக்கப் பழக வேண்டும். தவற விட்ட நேரம் எமக்கான வாய்ப்பை மறுத்து விடும். இன்று பலரது வாழ்க்கையின் வசந்தங்களைத் தடுத்துக் கொண்டி ருப்பது அவர்கள் தவறவிட்ட நேரங்களே ஆகும்.

நேரத்தை நேர்த்தியாகத் திட்டமிட்டுப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். குறித்த காலத்தில் எதிர்பார்த்த இலக்கை எட்டுவதற்கு வீண்விரயமாக்கும் நேரத்தை யும் சக்தியையும் சேமிக்க வேண்டும். குறுகிய நேரத் தில் அதிக வேலைகளைச் செய்வதால் ஏற்படும் நெருக் கீட்டில் இருந்து விடுபடவும், நேரதாமதங்களால் ஏற் படும் மன வேதனைகளில் இருந்து விலகிக்கொள்ள வும் நேர முகாமைத்துவம் உதவுகின்றது. நேரத்தைக் கணித்துச் செய்கின்ற எல்லாக்காரியங்களும் வெற்றி அளிக்கின்றது. இதன்மூலம் மனஉறுதி, தன்னம் பிக்கை என்பன வளர்கின்றன.

நேரமுகாமைத்துவம் எமது வாழ்வில் ஒளியைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போதைக்கு எதிரான போராட்டம்!

எஸ்.அன்புராசா

மதுபானக் கடையில் நின்று இருவர் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வழியே சென்ற பங்குத்தந்தை, அவர்கள் இருவரும் குடிப் பதைப் பார்த்துவிடுகிறார். இதனை அவதானித்த அவ்விருவரில் ஒருவன், 'டேய், நாம குடிக்கிறதை பங்குத்தந்தை கண்டுவிட்டாரடா என மிகுந்த பயத்துடனும் கவலையுடனும் சொல்ல, மற்றயவன் சர்வசாதாரணமாக, 'அதுக்கே(ன்) பயப்படுகிறாய்! நாம குடிக்கிறதைக் கடவுளும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்!' என்கிறான். அதற்கு முன்னயவன், 'கடவுள் பார்க்கிறதைப் பற்றிக் கவலையில்லையடா! நாம குடிக்கிறதை, கடவுள், நம்ம மனிசிமாரிட்ட போய்ச் சொல்லிக்கொண்டா இருக்கப்போகிறார்!' என மிகப் பரிதாபத்தோடு கூறினானாம்.

## கண்ணை மூடுவதற்கான ஒத்திகை

'சாப்பிடும்போது தரையைப் பார்த்துச் சாப்பிடுகிறோம், பூமித் தாய்க்கு நன்றி சொல்ல. தண்ணீர் அருந்தும்போது வானத்தைப் பார்த்து அருந்துகிறோம், மேகத்துக்கு நன்றி சொல்ல: சரக்கு அடிக்கும்போது இரண்டு கண்களையும் இறுக்கி மூடிக்கொண்டு குடிக்கிறோம். இதற்கு சரக்கு சொல்லுகின்றது; 'என்னாலதான் நீங்க இரண்டு கண்ணையும் ஒரேயடியா மூடப்போறீங்க!" என எவரோ ஒருவர் முகநூலில் எழுதிய வாசகம் இது. மனதில் ஏதோ ஒருவகையில் இடம்பிடித்து விட்டது.

## கள்ளுத் தவறணை தந்த அனுபவம்

தென்னிலங்கையில் இருந்து வந்த அன்பர் ஒருவர், பனங்கள்ளுக் குடிக்க ஆசைப்பட்டார். பங்குனி மாத வெயில் அனலாய் வீசியது. அந்த அன்பருடைய சாட்டில்நானும்உடல்சூட்டைத்தணித் துக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டு தவறணைக்கு அந்த அன்பரை அழைத்துக்கொண்டு சென்றேன். உடலைக் குளிர்மைப்படுத்த கள் நல்லது என்று பெரியவர்கள் சொன்னதைச் சிறுவயதில் கேட்டிருக்கிறேன்.

அதனால்தான், பொக்கிளிப்பான் போன்ற மிகுந்த வெப்பத்தினால் உண்டாகும் நோய்கள் வருகின்றபோது கள்ளைக் குடிக்கக் கொடுக்கிறார்கள். அதனை அளவோடு எடுக்கிறபோது மருந்தாக அது மாறுகிறது. ஆனால், இதனைச் சாதாரணமாக எடுப்பவர்கள் மருந்து போலவா எடுக்கிறார்கள்? மாட்டுக்குத் தவிட்டையும் புண்ணாக்கையும் தண்ணீரோடு கலந்து வைத்தால் உறிஞ்சி இழுப்பது போலல்லவா குடிக்கிறார்கள்.

## வழித்துத் துடைத்து விடுகிறார்கள்

அன்றைய நாள் கள்ளுத் தவறணையில் கண்ட காட்சி பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அங்கு கூடிநின்ற சனக்கூட்டத்தைப் பார்த்தபோது பயந்தே போனேன். அந்தச் சிறிய இடத்தில் எத்தனை பேர்? அந்த இடம் நிரம்பி வழிந்தது. மிக நெருக்கமான உறவுக்காரர்கள்கூட அவ்வளவு அன்னியோன்னியமாகப் பழகமாட்டார்கள். என்ன ஒற்றுமை? என்ன சகோதரத்துவம்? அப்போதுதான் முதல் சுற்று முடிந்திருந்ததால் அங்கு அவ்வளவு தோழமை உணர்வும், நட்பும், சகோதரத்துவமும் நிலவத் தொடங்கியிருந்தது என்பதை உணர்ந்து கொண்டேன். இந்தப் பாசமும் நேசமும் எவ்வளவு நேரத்துக்கு நீடித்திருக்கும் என்பதை அங்கு தொடர்ந்து இருந்து பார்த்திருந்தால்தான் முழுமையாக அறிந்திருக்கலாம். காரணம், இரண்டாம் சுற்று முடிந்ததும் அநேகமாக பேச்சுவார்த்தைகள் சூடுபிடிப்பதும், கைகலப்புக்கள் இடையிடையே நடந்தேறுவதும் அங்கு சாதாரணமானதே. அங்கு நின்றவர்களில் எனக்குத் தெரிந்த ஒருவர் என்னைக் கண்டதும் நான் ஏதும் கதைக்காமலேயே தன் நண்பர்களிடம் என்னைப்பற்றி எனக்குக் கேட்கும் படியாகவே தன்னுடைய உரையாடலை ஆரம்பித்தார். 'பாவம் பாதர்! இந்த வெயில் வெக்கை யிலை, அவர் தான் என்ன செய்வார். சூட்டைத் தணிக்க கள்ளு நல்லது தானே! (என்னைப் பார்த்தபடி) நீங்க வாங்க பாதர். உங்களுக்கு விளங்குது; நம்மமனிசி புள்ளைகளுக்கு விளங்குதில்லையே! உண்மையில, நீங்க குடுத்து வச்சனீங்க! உங்களுக்குத்தான் அதுகளொண்டும் (மனைவி, பிள்ளைகளைக் குறிப்பிடுகின்றார்) இல்லையே; கரச்சல் இல்லாத ஆள். இந்தா வாறீங்க, போறீங்க! எவர் உங்களக் கேக்குறது... எனத்தானே தொடங்கிய கதையை தானே நிறைவு செய்தார்.

## குடிப்பதற்கும் முன்னுதாரணம்!

அமலமரித்தியாகியான அமரர் பாவிலுப்பிள்ளை சுவாமி புதுக்குடியிருப்பு பங்குத் தந்தையாராக 1970களில் இருந்தபோது, மாத்தளனில் திருப்பலி நிறைவேற்றியபின் புதுக்குடியிருப்புக்குச் சைக்கிளில் வருகின்ற வழக்கம் உடையவர். இவ்வூர் இரண்டுக்கும் இடையில் அமைக்கப்பட்டிருந்த கள்ளுத் தவறணையினால் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டன. கண்மண் தெரியாமல் குடிப்பது, பின் சண்டை பிடிப்பது, ஆளுக்கு ஆள் அடிபடுவது எனக் கணிசமானவர்களுடைய வாழ்க்கை அந்நாள்களில் நகர்ந்தது. இதற்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் எனப் பாவிலுப்பிள்ளை சுவாமி நினைத்தார். ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை திருப்பலி முடிந்து பங்குமனைக்குத் திரும்பி வருகையில் தவறணைக்குச் சென்று பிளாவை எடுத்து தவறணைக் காரனிடம் நீட்டுகிறார். தவறணையில் நின்று கொண்டிருந்த 'பெருங்குடி மக்கள்', 'ஐயையோ! சுவாமி அல்லோ வந்திட்டார்!' என அல்லோல கல்லோலப்பட்டனர். தவறணைக் காரன் வேர்த்து வியர்த்து விறுவிறுத்து நிற்கிறான். பாவிலுப்பிள்ளை சுவாமி, 'ஊத்தடா இரண்டுபோத்தல்' என அதட்ட, அவன் பிளாவினுள் கள்ளை மளமளவென ஊற்ற, மடமடவென ஒரே இழுவையில் இழுத்து முடித்து விட்டு, 'தவறணைக்கு வாறியா, கள்ளை வாங்கிறியா, குடிக்கிறியா, வீட்[illegible] போகிறியா என்றில்லாமல் [illegible] இருந்து கதைவழியும் [illegible], சண்டையும், சச்சரவும்! [illegible] பார்! வ[illegible] தன், எடுத்தன், [illegible]ன், வீட்[illegible] குப்போறன். இ[illegible]த்தான் இரு[illegible] வேணும். என்னப் பாத்துப் பழகு' என் [illegible]டம் புகட்டிவிட்டு சென்றாராம் என அவரைப்பற்றி சொல்[illegible]படுகின்ற பல சுவாரஸ்யமான சம்பவங்களுள் இதுவும் ஒன்றாகக் கூறப்படுகின்றது. அவர் 'கள்' குடிப்பதற்குக்கூடச் சில ஆரோக்கியமான அணுகுமுறைகளைச் சொல்லிக் கொடுக்கவேண்டி இருக்கிறது. மருந்தாக நல்ல பானமாகப் பார்க்கப்பட வேண்டிய, பயன்படுத்தப்படவேண்டிய கள்ளை வெறுப்புக்குரிய ஒன்றாக இன்று நோக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

> போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்துவதற்கு வழிவகைகள் மேற்கொண்டாலும் அவை இன்னும் முற்று முழுதாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படவில்லை என்பதுபோலத்தான் தோன்றுகிறது. போதைப் பொருள்களை ஆரம்ப நிலையில் பாவிப்பவர்களை இனம் காண்பது கடினம்.

## என்றுமில்லாத அடாவடித்தனங்கள்

கல்வியில், கலைகளில், பண்பாட்டில், வீரத்தில் தலைசிறந்து விளங்கிய தமிழர் தாயகத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில், இந்த மண்ணின் வரலாற்றில் இதுவரை பதியப்படாத வாள்வெட்டுக்களும், போதைப்பொருள் பாவனைகளும், துஷ்பிரயோகங்களும் ஆயுதப் போர் நிறைவுக்கு வந்து ஏழு ஆண்டுகள் கடந்த நிலையில், கோலோச்சி நிற்கின்றன. இந்த வகையான அழிவின் சக்திகள் இன அழிப்பின் வெவ்வேறான வடிவங்களோ என எண்ணத்தோன்றுகிறது. வாள்வெட்டுக்கும் அடாவடித்தனங்களுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் ஏனைய சமூக விரோதச் செயல்களுக்கும் முக்கிய காரணமாக விளங்குவது போதைப் பொருள்களின் பாவனை என்பது சந்தேகத்துக்கு இடமின்றி பலதரப்பினர்களாலும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

## போதை ஏற்படுத்தும் போர்க்களம்!

குறிப்பாக இளைஞர்கள் - மாணவர்கள் இப்போதைப் பொருள்களின் பாவனைக்குப் படிப்படியாகத் தூண்டப்பெற்று, அடாவடித்தனங்களில் ஈடுபடும் நிலை உருவாகியிருக்கிறது. இவ்வாறான அடாவடித் தனங்களிலும் வாள்வெட்டுக்களிலும் தெருச் சண்டைகளிலும் ஈடுபடும் மாணவர்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டிவரும் என்றும்-உயர்கல்வி கற்க முடியாத நிலை உருவாகும் என்றும்-யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் இந்த ஆண்டு சித்திரை மாதம் நடைபெற்ற ஒரு வழக்கு விசாரணையில் எச்சரித்தார். இந்த விடயத்தில் பெற்றோர்களும் குற்றவாளிகளாகக் கருதப்படுவார்கள் என்றும் கூறினார்.

மேலும், யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் அடாவடித்தனங்கள், வாள்வெட்டுக்கள், போன்றவற்றை ஒடுக்குவதற்குத் தேவையெனில் பொலிஸார் அதிரடிப்படையினரின் உதவியுடன் உடன் நடவடிக்கையில் இறங்குமாறும், இவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருமாறும் கட்டளை பிறப்பிக்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டார் எனில் தற்போதைய களநிலை மிகமிக மோசமானது – ஆபத்தானது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

எனவே, இந்தப் பிரச்சினைகளுக்குக் காரணமாயிருக்கிற போதைப் பொருள்கள் மட்டில் அனைத்துத் தரப்பினரும் விழிப்பாய் இருப்பது மிகமிக இன்றியமையாதது. போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்துவதற்கு வழிவகைகள் மேற்கொண்டாலும், அவை இன்னும் முற்று முழுதாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்படவில்லை என்பதுபோலத்தான் தோன்றுகிறது. போதைப் பொருள்களை ஆரம்ப நிலையில் பாவிப்பவர்களை இனம் காண்பது கடினம். குடும்ப அங்கத்தவர்களும் விழிப்பாய் இருப்பது அவசியமாகிறது. குறிப்பாக பெற்றோர்கள் தம் இளம் பிள்ளைகள் மட்டில் இந்த விடயத்தில் கரிசனை கொள்வது காலத்தின் கட்டாயமாகிறது. ஆரம்பநிலையில் போதைப் பொருள் பாவனையாளர்களாக இருப்பவர்கள் அவற்றை விட்டுவிடத் தொடக்கத்திலேயே சிகிச்சைகள் அளிக்கப்படுவது அவசியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றில் இன்றைய தினம்

1223 - பிரான்ஸ் அரசர் இரண்டாம் பிலிப்பின் சாவை அடுத்து அவரது மகன் எட்டாம் லூயிஸ் அரசரானார்.

1853 - உலக நாடுகளின் கைத்தொழில் கண்காட்சி நியூயோர்க் நகரில் இடம்பெற்றது.

1933 - ஜேர்மனியில் நாஸிக் கட்சியைத் தவிர ஏனைய கட்சிகள் சட்டவிரோதமாக்கப்பட்டன.

1957 - எகிப்து தேசிய அசெம்பிளியில் நாவ்வியா அதேயா இடம்பிடித்ததன் மூலம் அரபு உலகின் முதலாவது பெண் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

1958 - அப்ட் அல் கரீம் ஹாசிம் தலைமையிலான படையினரால் ஈராக்கிய முடியரசு தூக்கியெறியப்பட்டதையடுத்து அவர் நாட்டின் தலைவரானார்.

1969 - எல்சல்வடோரிடம் உதைபந்தாட்டப் போட்டியில் ஹெண்டூரஸ் தோல்வியடைந்ததனையடுத்து ஹொன்டூராஸில் கலவரம் வெடித்து சல்வடோர் தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர்.

1969 - அமெரிக்க 500, 1000, 5000 மற்றும் 10000 டொலர் தாள்கள் உத்தியோகபூர்வமாக நாணயச் சுழற்சியிலிருந்து மீளப்பெறப்பட்டன.

1976 - கனடாவில் சாவுத் தண்டனை இல்லாமற் செய்யப் பட்டது.

1986 - வெலிக்கடைச் சிறையிலும் தமிழ் உரிமைப்போர் நடத்தினர் தமிழ் இளைஞர்கள்.

- கிழக்கில் மூன்று மாகாண சபைகள் யோசனைக்கு முஸ்லிம்கள் எதிர்ப்பு.

1995 - புக்காரா விமானத்தைப் புலிகள் வீழ்த்தினர்.

- 12 குண்டுகளை வீசும் சக்திகொண்ட புக்கார விமானமே சண்டிலிப்பாய் பகுதியில் சுட்டு வீழ்த்தப் பட்டது.

2002 - போர்க் குற்றங்களிலிருந்து விலக்கு: அமெரிக்கா விடுத்த மிரட்டலுக்கு ஐ.நா.பாதுகாப்புச் சபை பணிந்தது. மனித உரிமை அமைப்புக்கள் கடும் விசனம்.

- ஆப்கான் கிராமத்தில் நுழைந்து அமெரிக்கப் படையினர் அட்டூழியம். பெண்களை நிர்வாணமாக்கிப் படமெடுத்தனர்.

2005 - உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு: பொதுக் கட்டமைப்புக்கு எதிராக முஸ்லிம்கள் சார்பில் வழக்கு.

- பொதுக் கட்டமைப்பு உயர் சபைக்கு அரச தரப்புப் பிரதிநிதியாக டியூ.

- நிலமை மோசமுறாமல் தவிர்க்கும் வழி வகைகளை ஆராய்கிறது நோர்வே. அரசு - புலிகள் இரு தரப்புடனும் தொடர்பு கொண்டு நடவடிக்கை.



## வர்ணம் தீட்டுவோம் வாங்க...



## பலாப்பழம்

பலாப்பழம் பலாப்பழம்
புசிக்க எனக்கு ஆசை
பக்கத்தில் வந்து விட்டால்
குத்தும் உனது மீசை
முள்ளுப் போல உன் உருவம்
பயம் கொள்ளும் என் பருவம்
பார்க்கப் பெரிதாய் இருக்கும்
புசித்தால் தேனாய் இனிக்கும்
எங்கள் வீட்டுக்கு தூக்கியுனை
அம்மா கொண்டு வருவாள்
தொட்டுவிட்டால் குத்துவதால்
தூர நானும் நிற்பேன்
சிறு துண்டுகளாய் வெட்டி
சுளைகளாக எனக்குத் தருவாள்
எட்ட இருந்து நானும்
சுவைத்துச் சுவைத்து சாப்பிடுவேன்.





## செவிடர்கள் பட்டபாடு

ஒரு கிராமத்தில் ஒரு செட்டியும் அவனுடைய மனைவியும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரும் செவிடர்கள். அவர்களுக்குக் குழந்தை இல்லை. ஒரு நாள் புளிக்குழம்பும், மறு நாள் பருப்புக் குழம்பும் மாற்றி மாற்றிச் சமையல் செய்வாள் மனைவி.

"இன்று புளிக் குழம்பு மிகவும் ருசியாக இருக்கிறது. நாளைக்கும் இதே போல் புளிக்குழம்பே செய்" என்றான் கணவன்.

மனைவியும் செவிடு ஆகையால் கணவன் சொன்னது அவள் காதில் விழவில்லை. அவள் பருப்புக் குழம்பு செய்திருந்தாள்.

சாப்பிட உட்கார்ந்தான் செட்டி. பருப்புக் குழம்பை பார்த்ததும் தான் சொன்னதைச் செய்யவில்லையே என்ற கோபத்தில் அதை எடுத்துச் சுவரின் மீது எறிந்து விட்டுப் புறப்பட்டான்.

ஊருக்கு வெளியே இருந்த மரத்தின் கீழ் உட்கார்ந்தான். தன்னுடைய பசுவையும் கன்றையும் காணாமற் தேடிக்கொண்டிருந்த இடையன் அங்கே வந்தான். அங்கே உட்கார்ந்திருந்த செவிட்டுச் செட்டியை ஒரு சோதிடர் என்று நினைத்து " ஐயா சோதிடரே! என் பசுவையும் கன்றையும் காணாமல் தேடி அலைகிறேன். தங்களுடைய சோதிடத்தினால் எங்கே கிடைக்கும் என்று கூற வேண்டும்" என்று கேட்டான்.

இடையன் என்ன சொல்லுகிறான் என்பதை அறியாத செட்டி "மன அமைதிக்காக நான் இங்கே இருக்கிறேன்" எனக்குத் தொல்லை கொடுக்காதே" என்று கூறி அவன் முகத்துக்கு நேரே கையைக் காட்டினான். இடையனுக்கும் காது கேளாது. ஆகையால் பசுவும் கன்றும் இருக்கும் திக்கை அவன் சுட்டிக்காட்டுவதாக எண்ணி "போய்ப் பார்க்கிறேன். கிடைத்தால் உங் களுக்குக் கன்றை இலவசமாகக் கொடுத்து விடுகிறேன்" என்று கூறிவிட்டு இடையன் புறப்பட்டுச் சென்றான்.

பசுவும் கன்றும் ஓர் இடத்தில் மேய்ந்து கொண்டிருப்பதைப் பார்த்த இடையனுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. சோதிடருக்கு வாக்கு அளித்தபடி பசுவையும் கன்றையும் இடையன் ஓட்டிக் கொண்டு வந்து "நீங்கள் காட்டிய திக்கிலே கிடைத்தன. நான் சொன்னபடி கன்றைத் தருகிறேன்" என்று கூறிக் கன்றைக் காட்டினான். கன்றின் வால் மிகச் சிறியதாக இருந்தது.

அதைப் பார்த்த செட்டி "கன்றின் வாலை நான் முறிக்கவில்லை. வீண்பழி சுமத்தாதே எனக்கு ஒன்றும் தெரியாது" என்று கூறிக் கையை விரித்தான். அவன் சொன்னதையும் கையை விரித்ததையும் புரிந்து கொள்ளாத செவிட்டு இடையன் "உமக்குப் பேராசை அதிகம். பசுவையும் கேட்கிறீரே! இது நியாயமா?" என்றான்.

இடையன் சொன்னதைப் புரிந்து கொள்ளாமல் செட்டி "கன்றின் வாலை நான் முறிக்கவில்லை. வீணாக என்னைக் குறை கூறாதே! என்றான் மறுபடியும்.

இடையனோ "நான் கன்றைத்தான் தருவதாகச் சொன்னேன். பேராசைப்பட்டு பசுவைக் கேட்காதீர்" என்றான்.

தொலைவில் நின்று அவர்களுடைய வாக்குவாதத்தைக் கவனித்த சாமர்த்தியக்காரன் ஒருவன் அவர்கள் அருகில் வந்து "உங்களுக்குள் என்ன சச்சரவு?" என்று கேட்டான்.

செட்டியும் இடையனும் முன்பு சொன்னதையே சொன்னார்கள். அவர்கள் இருவரும் முழுச் செவிடர்கள் என்பதை உணர்ந்தான் சாமர்த்தியக்காரன்.

இடையனைத் தனியே அழைத்துச் சென்று 'பசுவை ஓட்டிக்கொண்டு நீ போய் விடு. சோதிடரைச் சமாதானம் செய்து கன்றை அவரிடம் கொடுத்து விடுகிறேன்" என்று கூறினான் சாமர்த்தியக்காரன்.

"ஐயா நீங்கள் நல்லவர் அவரைச் சமாதானப்படுத்திக் கன்றை அவரிடம் கொடுத்து விடுங்கள். நல்ல சமயத்தில் நீங்கள் வந்து உதவி செய்தீர்கள். மிகவும் நன்றி" என்று கூறி பசுவை ஓட்டிக்கொண்டு சென்றான் இடையன்.

அவன்போன பிறகு செட்டியிடம் "அடுத்த ஊர் கிராம அதிகாரியைக் கூட்டி வந்து கன்றின் வாலை நீ முறித்ததற்காக இடையன் உன்மீது வழக்கு தொடர்வதாகச் சொல்லிவிட்டுப் போகிறான். நீ பயப்படவேண்டாம். நான் கவனித்துக் கொள்கிறேன். உடனே நீ வீட்டுக்குப் போய் விடு" என்று உரக்கச் சொன்னான் சாமர்த்தியக் காரன்.

அவன் கூறியதை நம்பிய செட்டி " நீ நல்ல சமயத்தில் வந்து என்னைக் காப்பாற்றினாய். உனக்கு நன்றி" என்று கூறிவிட்டு வேகமாக வீட்டுக்குச் சென்றான்.

கன்றை ஓட்டிக்கொண்டு தன் வீட்டுக்குச் சென்றான் சாமர்த்தியக்காரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கம், மறுசீரமைப்பில் உறுதியாகவுள்ளது இலங்கை

## நற்சான்றிதழ் வழங்குகின்றது அமெரிக்கா

கொழும்பு, ஜூலை 14
நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்புச் செயற்பாடுகளில் இலங்கை அரசு உறுதியான நடவடிக்கை எடுத்துள்ளது.
இவ்வாறு நற்சான்றிதழ் வழங்கியுள்ளார் இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலர் ரொம் மாலி னோவ்ஸ்கி.
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜன நாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ரொம் மாலி னோவ்ஸ்கியும், மற்றொரு இராஜாங்க உதவிச் செயலரான நிசா பிஸ்வாலும் இலங்கை வந்துள்ளனர். அவர்கள் வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீரவை நேற்று முன்தினம் மாலை சந்தித்தனர். சந்திப்பின் பின்னர் ரொம் மாலினோவ்ஸ்கி இவ்



வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்புச் செயற்பாடுகளில் இலங்கை அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.
இவற்றில் காணாமற்போனோர் தொடர்பான செயலகம், இராணுவம் வசமிருந்த காணிகளின் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டமை போன் றவற்றைக் குறிப்பிடலாம்.
நல்லிணக்கச் செயல்முறைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் இலங்கைக்குப் பொருளாதார ஆதரவை அமெரிக்கா வழங்கும். இலங்கையில் என்ன நடக்கிறது என்பது உலகெங்கும் உள்ள மக்களுக்கு முக்கியமான விடயமாக உள்ளது. இலங்கை அமைதியை அடைவதில் ஆர்வம் கொண்டுள்ளது. இலங்கை அதை அடைவதற்கான முயற்சிகளுக்கு அமெரிக்கா ஆதரவாக இருக்கும்.
அமெரிக்கா மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவு போர் நிறைவடைந்ததன் பின்னர் மேம்பட்டுள்ளது. பன்னாட்டு ரீதியில் பல நாடுகள் போரை முன்னெடுத்துள்ளன. இலங்கை 30 வருட போருக்குப் பின்னரான மீளுருவாக்க நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது - என்றார். (ற-5)

## நாமலின் கைது ஓர் அரசியல் பழிவாங்கலே

*அடித்துக் கூறுகின்றார் மகிந்த எம்.பி.*

கொழும்பு, ஜூலை 14
நாமல் ராஜபக்ச கைது செய்யப்பட்டமை அரசியல் பழிவாங்கல் என்று தெளிவாகத் தெரிகின்றது. இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரும், கைது செய்யப்பட்ட நாமல் ராஜபக்சவின் தந்தையுமான மகிந்த ராஜபக்ச.
நிதி மோசடிக் குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் நாமல் ராஜபக்ச கைது செய்யப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. அவரை மகிந்த ராஜபக்ச வெலிக்கடைச் சிறையில் சென்று பார்த்தார்.
அங்கு அவர் தெரிவித்ததாவது:
தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முசமிலும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அடுத்தடுத்து கைதுகள் நடந்து கொண்டுதான் இருக்கும். இது முற்றிலும் அரசியல் பழிவாங்கல்.
அரசு நீதியை நிலைநாட்ட இவ்வாறு செய்வதாகக் கூறுகின்றது. ஒரு தரப்புக்கு மட்டும் நீதியைச் செயற்படுத்தக் கூடாது. அனைத்துத் தரப்பினருக்கும் சமமாக நீதி கிடைக்க வேண்டும்- என்றார். (ற-4)

## நிசாவும் ரொம்மும் இன்று கிழக்குக்கு செல்கின்றனர்

கொழும்பு, ஜூலை 14
இலங்கைக்கு வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர்களான நிசா பிஸ்வால், ரொம் மாலினோவ்ஸ்கி ஆகியோர் இன்று கிழக்கு மாகாணம் செல்லவுள்ளனர்.
அலரி மாளிகையில் நேற்றுக் காலை பிரதமர் ரணிலைச் சந்தித்து நிசா பிஸ்வாலும் ரொம் மாலினோவ்ஸ்கியும் பேச்சு நடத்தினர்.
அவர்கள் பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி, முப் படைத் தளபதிகளுடனும் பேச்சு நடத்தினர். நல்லிணக்கம் மற் றும் பொறுப்புக்கூறல் செயல்முறைகளில் காணப் படும் முன்னேற்றங்கள் மற்றும் சவால்கள் குறித்தும், பாதுகாப்பு மறு சீரமைப்புக் குறித்தும் பேச்சில்கவனம்செலுத்தப்பட்டது.
இன்று கிழக்கு செல்லும் அவர்கள் கிழக்கு ஆளுநரையும், முதலமைச்சரையும் சந்தித்துப் பேசவுள்ளனர். (ற-5)



அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிசா பிஸ்வாலும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் ரொம் மாலினோவ்ஸ்கியும் நேற்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். வெளிவிவகார அமைச்சில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இந்தச் சந்திப்பு நடந்தது. (ற-5)

## ராஜபக்சவினர் கைதுகள் தொடரும்

– ரவி

கொழும்பு, ஜூலை 14
எதிர்வரும் நாள்களில் இன்னும் பல ராஜபக்சாக்கள் கைது செய்யப்படுவர்.
இவ்வாறு நிதிஅமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். நிதி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
கோத்தா, பசில் மட்டுமல்ல இன்னும் பலர் கைது செய்யும் பட்டியலில் இருக்கின்றனர். இலங்கையில் வாழும் பிரசை என்ற ரீதியில் அடுத்த கைது யாரென நான் அறிந்து வைத்துள்ளேன் - என்றார். (ற-5)

# நல்லிணக்கத்தை முன் நகர்த்துவதற்கு பங்காளராக இணைந்திருக்கும் அமெ.

## அந்த நாட்டு இராஜாங்கச் செயலர் நிசா பிஸ்வால் கொழும்பில் தெரிவிப்பு


கொழும்பு, ஜூலை 14
போருக்குப் பிந்திய நல்லிணக்கச் செயல்முறைகளை இலங்கை முன்னோக்கி நகர்த்துவதற்கு, அதன் பங்காளராக இணைந்திருக்க அமெரிக்கா உறுதி பூண்டுள்ளது.
இவ்வாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிசா பிஸ்வால் தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் மாலை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன் அவர் பேச்சு நடத்தினார். அதன் பின்னர் அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
இலங்கையில் இன்னும் அதிகமான பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. இலங்கைக்கு உதவ அமெ



ரிக்கா தயாராக உள்ளது. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான உறவுகளை அமெரிக்கா வரவேற்கிறது. அமெரிக்காவும், இலங்கையும் பொதுவான இலக்குகளைக் கொண்டுள்ளன.
பங்காளர்களான எமக்கிடையில் எல்லாக் காலத்திலும் உயர்ந்த மட்டத்திலான உறவு இருந்து வருகிறது.
ஜனநாயக ஆட்சி, மனித உரிமைகளுக்கு கூடுதல் மதிப்பளித்தல், நல்லிணக்கம், நீதி, பொறுப்புக்கூறல் போன்ற தமது மக்களின் கரிசனைகளுக்குப் பதிலளிக்க இலங்கைமேற்கொள்ளும் அர்த்தமுள்ள, உறுதியான நகர்வுகளுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவு வழங்கும்.
இலங்கையில் விவசாயம் தொடக்கம், தொழிற்றுறை வரை முதலீடுகளை மேற்கொள்வதுடன், கல்வி, சுகாதாரம், மின்சாரம், இயற்கை வளங்கள், மனிதாபிமானம் தொடர்பான செயற்பாடுகளிலும் நாம் தொடர்ந்து ஈடுபடுவோம்.
எல்லா இலங்கையர்களையும் முன்னேற்றுவதற்குப் பொருளாதார அபிவிருத்தியை விரைவுபடுத்தவும், வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கவும், இலங்கை அரசுடன் அமெரிக்கா பங்காளராக இணைந்து செயற்படும் – என்றார்.
இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், இரண்டு நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பன்னாட்டு மற்றும் பிராந்திய விவகாரங்கள் மற்றும் நிகழ்வுகள், இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடு, கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்புக் குறித்து மங்களவுடனான சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.
வொசிங்டனில் செப்ரெம்பர் மாதம் நடக்கவுள்ள, சமுத்திரங்களின்பாதுகாப்புத்தொடர்பான, “எமது சமுத்திரங்கள்” என்ற தொனிப் பொருளிலான கருத்தரங்கில், இலங்கையின் பங்களிப்புத் தொடர்பாகவும், இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** சமூகத்தில் மதிப்பு உயரும். லட்சியத்தை மன உறுதியுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிநிலை திருப்தியளிக்கும். தாராள பணவரவு கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**இடபம்:** திகைப்பு அளித்த பணியை, எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழிலில், விற்பனை அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். போட்டி, பந்தயத்தில் வெற்றிபெற அனுகூலம் உண்டு.

**மிதுனம்:** பிறர் புகழ வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில், குளறுபடி வந்து, பின்னர் சரியாகும். குடும்பத் தேவைக்குக் கொஞ்சம் கடன் பெறுவீர்கள். உணவு விடயத்தில் கவனம் தேவை.

**கடகம்:** கடந்தகாலச் சிரமம் பற்றி, பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் பன்மடங்கு உயரும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும். விஷ ஜந்துக்களிடம் இருந்து விலகியிருப்பது நல்லது.

**சிங்கம்:** பேச்சில், வசீகரத் தன்மை மேலோங்கும். புதியவர்களின் நட்பால், நன்மை உண்டாகும். தொழில், வியாபாரம் செழிக்கும். லாபம் கூடும். இஷ்டதெய்வ வழிபாட்டை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில், கடின உழைப்பு தேவைப்படும். நிலுவைப் பணம் வசூலாகும். பிள்ளைகள் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**துலாம்:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் செழிக்கத் தேவையான, புதிய மாற்றத்தை செய்வீர்கள். பண வரவும், நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டு, பாராட்டுப் பெறுவர்.

**விருச்சிகம்:** உங்களின் நற்செயலைச் சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள நிலுவைப்பணியை நிறைவேற்றுவதால், சிரமம் குறையும். லாபம் சுமார். நிர்ப்பந்தத்தின் பேரில் கடன் வாங்க வேண்டாம்.

**தனுசு:** பலரும் அன்பு பாராட்டும் நிலை ஏற்படும். மனதில் புதிய உற்சாகம் பிறக்கும். தொழில், வியாபாரத்தில், சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும்.

**மகரம்:** உங்களைச் சுற்றி இருந்த, சிரமமான சூழல் மறையும். தொழில், வியாபாரத்தில், தாராள லாபம் கிடைக்கும். பெண்கள், ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர். உறவினர்களின் வருகையால், மகிழ்ச்சி உண்டாகும்.

**கும்பம்:** எதிரியிடம் இருந்து விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிப் பணிகளைக் கூடுதல் உழைப்பால் நிறைவேற்றலாம். பணவரவைவிடச் செலவு அதிகரிக்க வாய்ப்புண்டு. வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மீனம்:** விழிப்புடன் செயற்படுவது நல்லது. மனைவியின் ஆலோசனை, நன்மைக்கு வழி வகுக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, தேவையான மாற்றம் செய்வீர்கள். எதிர் பார்த்த ஆதாயம் கிடைக்கும்.



# ஆக்ஷன் நாயகனாகிறார் 'சொக்லேட் பையன்'

அலைபாயுதே படத்திலிருந்த சொக்லெட் பையன் தோற்றப்பாட்டுடன் வலம் வந்து கொண்டிருந்தார் மாதவன். ரன், தம்பி, வேட்டை எனச் சில படங்களில் ஆக்ஷன் ஹீரோவாக முயன்றார். இதற்கிடையில் பாலிவூட் சென்றதால் ஹொலிவூட் பக்கம் தலைகாட்டாமல் இருந்தார். இறுதிச்சுற்று படம் மூலம் மீண்டும் தமிழ் பக்கம் தலை காட்டினார்.

இதில் குத்துச் சண்டை வேடத்துக்காக கட்டுமஸ்தான தோற்றத்துக்கு மாறினார். குத்துச் சண்டை வீரராகப் படத்தில் கலக்குவார் என்ற ரசிகர்களின் எதிர்ப்பார்ப்பு தகர்ந்தது. மாதவன் மீதான எதிர்பார்ப்பை நாயகி ரித்திகா சிங் தன் பக்கம் திருப்பிக் கொண்டார். அவரது அதிரடியான நடிப்பு ஹொலிவூட்டில் தனி இடத்தை அவருக்கு பிடித்துத் தந்திருக்கிறது.

இந்தப் படத்துக்குத் தேசிய விருதையும் ரித்திகா தட்டிச் சென்றார். இது மாதவனுக்கு ஏமாற்றமாக இல்லாவிட்டாலும் அவரது ரசிகர்களுக்கு ஏமாற்றமாக அமைந்தது. எப்படியும் ஆக்ஷன் நாயகனாகி விடுவார் என்று அவர் மீது ரசிகர்கள் வைத்த நம்பிக்கைக்குப் பலனாக மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. சற்குணம் இயக்கும் புதிய படமொன்றில் சீன தற்காப்புக் கலை வீரராக நடிக்க உள்ளாராம். தற்பாதுகாப்புக் கலையில் நுட்பங்களைக் கற்பதற்காக அமெரிக்கா சென்றிருக்கிறார் மாதவன். இறுதிச்சுற்று படத்தில் கோட்டைவிட்ட ஆக்ஷன் தோற்றப்பாட்டை இந்தப் படத்தில் ஈடுகட்டுவார் என்று எதிர்பார்க்கலாமாம்.

காம்ரேட் பாலா @

புத்திசாலியாகக் காட்டிக் கொள்ள எளியவழி எது குறித்தும் கருத்துத் தெரிவிக்காமல் இருப்பதுவே.

11 4




மரணத்தைப் பற்றி
கவலைப்படாதே...
நீ இருக்கும் வரை அது
வரப்போவதில்லை.
அது வரும்போது நீ
இருக்கப்போவதில்லை
பிறகு எதற்கு கவலை...







# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 8 | | | 5 | | |
| | 7 | 3 | | | | | 2 | |
| | | | | 3 | 4 | 1 | | |
| | | | 4 | | 7 | | | |
| | 8 | 4 | | | | 9 | 5 | |
| | | | 2 | | 8 | | | |
| | | 8 | 9 | 4 | | | | |
| | 3 | | | | | 6 | 8 | 4 |
| | 4 | 1 | | 8 | 5 | | 9 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 2 | 4 | 5 | 6 | 8 | 7 | 1 |
| 4 | 1 | 8 | 3 | 7 | 9 | 2 | 5 | 6 |
| 7 | 5 | 6 | 2 | 1 | 8 | 4 | 3 | 9 |
| 2 | 4 | 3 | 9 | 6 | 7 | 5 | 1 | 8 |
| 1 | 6 | 7 | 8 | 3 | 5 | 9 | 2 | 4 |
| 5 | 8 | 9 | 1 | 2 | 4 | 7 | 6 | 3 |
| 3 | 9 | 1 | 7 | 4 | 2 | 6 | 8 | 5 |
| 8 | 2 | 5 | 6 | 9 | 1 | 3 | 4 | 7 |
| 6 | 7 | 4 | 5 | 8 | 3 | 1 | 9 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச்சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு

## விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 600 | 600 |
| நண்டு | 250 | 200 | 300 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 500 | 500 | 500 | 700 | 600 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 700 | 600 | 410 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | 600 | 600 |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 500 | 400 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 450 | 600 | 420 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | – | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 150 | 300 |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | 100 | 350 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | 150 | 100 |
| ஒட்டி | 300 | 250 | 150 | 400 | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 350 | 400 | 300 | 160 |
| மதனம் | 150 | 250 | 180 | – | 500 | – | 200 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 500 | – | – |
| வாழை | 100 | 150 | 200 | – | 400 | 200 | 250 |

# இது-புதுசு



அன்றாட பாவனைக்கு பிளாட் போம் குதிவைத்த றப்பர் செருப்பு அறிமுகமாகியுள்ளது. பல்வேறு வர்ணங்களில் இவை விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றின் விலை 450 ரூபா தொடக்கம் 650 ரூபா வரை ஆகும்.



# பருத்தித்துறை வடை

உளுத்தம் பருப்பு – 250 கிராம்
கோதுமை மா – 250 கிராம்
வெள்ளை அரிசிமா – 250 கிராம்
செத்தல் மிளகாய்த்தூள்– உறைப்புக்கு அளவாக
பெருஞ்சீரகம் – 2 மேசைக் கரண்டி
உப்பு –அளவாக
கறிவேப்பிலை – அளவாக
வெங்காயம் – 1




## செய்முறை

உளுந்தை இரண்டு மணி நேரம் ஊறவைக்கவும். பின்னர் தண்ணீரை வடித்தெடுத்துக் கொள்ளுங்கள்.

உளுந்துடன் கோதுமை மா, அரிசிமா, பெருஞ்சீரகம், மிளகாய்த்தூள், சிறுசிறுதுண்டுகளாகவெட்டப்பட்ட வெங்காயம், கறிவேப் பிலை, அளவாக உப்பு ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து கலந்து கொள்ள வேண்டும்.

அதன் பின் பாக்கு அளவிலான சிறு சிறு உருண்டைகளாக உருட்டி வாழை இலையில் அல்லது (பொலித்தீன் பேப்பரில்) வைத்துத் தட்டையாக அழுத்தி மெதுவாக இலையை விட்டு பிரித்தெடுத்து கொதித்த எண்ணெயில் போட்டு பொன்நிறத்தில் பொரித்தெடுத்துப் பரிமாறலாம்.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 80 | 80 | 100 | 80 | 40 | – | 80 |
| கத்தரி | 120 | 120 | 140 | 140 | 100 | 100 | – | 80 |
| கரட் | 200 | 240 | 240 | 180 | 240 | 200 | – | 120 |
| மரவள்ளி | 100 | 90 | 100 | 80 | 100 | 100 | – | 50 |
| பயிற்றை | 140 | 120 | 120 | 120 | 120 | 80 | – | – |
| பாகல் | 200 | 200 | 220 | 240 | 240 | 220 | – | 80 |
| கருணைக்கிழங்கு | 120 | 120 | 140 | – | 140 | 160 | – | 160 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 90 | 80 | 100 | – | 100 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 120 | 140 | 160 | 120 | – | 70 |
| பூசணி | 80 | 140 | 160 | 150 | 140 | 140 | – | 110 |
| தக்காளி | 200 | 200 | 220 | 200 | 180 | 250 | – | 130 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 120 | 120 | 80 | – | 160 |
| கீரை | 20 | 20 | 30 | 20 | 20 | 20 | – | 50 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 20 | – | 10 |
| பச்சை மிளகாய் | 500 | 600 | 700 | 600 | 600 | 600 | – | 100 |
| புடோல் | 80 | 80 | 80 | 80 | 60 | 60 | – | 450 |
| கோவா | 180 | 140 | 160 | 240 | 160 | 180 | – | 60 |
| வெண்டி | 100 | 80 | 100 | 120 | 100 | 80 | – | 120 |
| போஞ்சி | 200 | 160 | 180 | 180 | 160 | 180 | – | 140 |
| லீக்ஸ் | 140 | 160 | 160 | 240 | 160 | 200 | – | 120 |
| தேங்காய் | 40 | 40 | 40 | 25–30 | 30 | 30 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 100 | 100 | 100 | – | 130 |
| தேசிக்காய் | 120 | 150 | 160 | 120 | 120 | 80 | – | 100 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | 240 | 300 | 240 | 260 | 200 | – | 250 |
| இராசவள்ளி | 160 | – | – | 250 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 360 | 280 | 600 | – | 300 |

# சின்னச் சின்ன சமையல் குறிப்புகள்

- முட்டையை வேக வைக்கும் போது அது னுள் இருப்பவை வெளியில் வராமல் இருப்பதற்கு, வேக வைக்கும் தண் ணீரில் ஒரு ஸ்பூன் வினிகரை விட வும். அவ்வாறு விட்டால், முட்டையின் ஓடு வெடித்தாலும் கூட உள்ளே இருப் பவை வெளியில் வராது.
- பாலை காய்ச்சுவதற்கு முன், அந் பாத்திரத்தை நன்கு தண்ணீரால் சுத்த செய்த பின்னர் காய்ச்சினால், பா பாத்திரத்தில் அடிப் பிடிப்பதைத் தவிர் கலாம்.
- பால் புளிக்காமல் இருப்பதற்கு, ஏல காயை பால் காய்ச்சும் போதே அதலு டன் சேர்க்கவும். அவ்வாறு செய்தா நீண்ட நேரத்துக்குப் பால் புளிக்காம இருக்கும்.
- தோல் உரித்த உருளைக்கிழங்குகளை கெடாமல் வைப்பதற்கு சில துளிகள் வினிகரைத் தெளித்து குளிரூட்டியில் அதை வைக்கவும்.

# நாளை

ஆனி-31
வெள்ளிக்கிழமை
- 15.07.2016
திதி: ஏகாதசி
பி.இ.02.22 வரை
நட்சத்திரம்: விசாகம்
மு.ப. 10.22
ராகுகாலம்:
10.30-12.00 வரை
சுபநேரம்:
06.00-07.30 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்



## ஸ்கைப்பின் புதிய வசதி

வீடியோ அழைப்புக்கள் முதல் குரல்வழி அழைப்பு, கோப்புக்களைப் பரிமாறல், இன்ஸ்டன்ட் மெசேஜ் என பல வசதிகளை வழங்கும் சமூக வலைத்தளமான ஸ்கைப்பில் புதிய அம்சம் ஒன்றை உட்புகுத்த மைக்ரோசொப்ட் நிறுவனம் தீர்மானித்துள்ளது. அதாவது இதுவரை காலமும் கோப்பு ஒன்றை நண்பர்களுடன் பகிரும் போது அனுப்பப்படும் கோப்பைப் பெறுபவர் கோப்பைப் பெறுவதற்கான அனுமதியை வழங்க வேண்டும்.

அதன் பின்னரே குறித்த கோப்பு அவரின் கணினியில் தரவிறங்க ஆரம்பிக்கும். ஆனால் புதிய வசதியின்படி எதிர்ப் பகுதியில் இருப்பவர் Offline இல் இருந்தாலும் அனுப்பப்படும் கோப்பு அவருடைய கணினியைச் சென்றடையும், அனுப்பப்படும் கோப்பின் அளவு 300எம்.பி. வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த வசதிகள் அனைத்தும் விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளது. ஸ்கைப்பின் புதிய பதிப்பிலேயே கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.


## அப்பிளுக்கு எதிராக களமிறங்கும் அன்ரொய்ட்

தொடுதிரைத் துறையில் முன்னணியில் திகழும் அப்பிள் நிறுவனத்துடன் போட்டி போட, கூகுளின் அன்ரொய்ட் புதிய திட்டமொன்றை வழிவகுத்துள்ளது.

அப்பிள் நிறுவனத்துக்கு நிகராகப் போட்டி போடும் வகையில் 20 லட்சம் மென்பொருள் பொறியியலாளர்களுக்குப் பயிற்சியளிக்க கூகுள் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இந்தப் பயிற்சியை இந்த வருடமே தனியார் பல்கலைகள் மற்றும் பயிற்சி பள்ளிகளில் நேரடியாகச் சென்று கூகுள் நிறுவனம் இலவசமாகப் பயிற்சி அளிக்க உள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் எதிர்வரும் 2018 ஆம் ஆண்டில், இந்தியாவில் 40 லட்சம் அன்ரொய்ட் பயிற்சி பெற்ற மென்பொருள் பொறியியலாளர்கள் இருப்பார்கள் எனவும் அமெரிக்காவில் இந்தியர்களைக் காட்டிலும் 3இல் ஒரு பங்கு மென்பொருள் பொறியியலாளர்கள் இருப்பார்கள் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்தது.




# கழிவு முகாமைத்துவம் தொடர்பில் ஹொல்சிம் லங்கா விழிப்புணர்வு



பாடசாலைகளில் பெருமளவு கழிவுகள் சேர்கின்றன. முறையான கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகளை பற்றி அறிந்து கொள்வதன் மூலமாக, சூழலுக்கும், தமது குடும்பத்துக்கும் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பை பாடசாலை மாணவர்கள் பெற்றுக் கொள்வார்கள். லபார்ஜ் ஹொல்சிம் குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமான ஹொல்சிம் லங்கா, சூழல் பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் முன்னோடியாக திகழ்வதுடன், புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் தொடர்ச்சியான பல்வேறு நிகழ்ச்சிகளை முன்னெடுத்திருந்தது.

500க்கும் அதிகமான பாடசாலை மாணவர்களை இந்த நிகழ்ச்சித்திட்டம் இலக்காகக் கொண்டிருந்ததுடன், புனித. அன்ரிவ்ஸ் கல்லூரி, மெதநந்த வித்தியாலயம், கல்லடி சிங்கள வித்தியாலயம், பாலாவி சிங்கள வித்தியால யம் மற்றும் பாலாவி முஸ்லிம் வித்தியாலயம் போன்ற பாடசாலைகளின் மாணவர்கள் இவ்வாறு பங்கேற்றிருந்தனர். ஹொல்சிம் லங்கா செயற்றிட்டம் என்பது, கழிவு முகாமைத்துவம் தொடர்பில் அதன் நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தைக் கொண்டு இந்தச் செயற்றிட்டங்களை முன்னோக்கி கொண்டு செல்வது தொடர்பில் கவனம் செலுத்துவதுடன், மீள்சுழற்சி செயற்பாடுகள் மூலம் சூழல் நிலைபேறான செயற்பாடுகளை அடிமட்டத்தில் முன்னெடுத்து, பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தி வருகிறது.

**வணிகம்**

பாடசாலைகளுக்குக் கழிவுகளை கொட்டும் குப்பை வாளிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், கழிவுகளை கட்டுப்படுத்திக்கொள்வது தொடர்பில் விழிப்புணர்வூட்டும் அறிவுறுத்தல் பதாகைகளும் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், மாணவர்களின் மாற்றமடையும் மனநிலைகள் மற்றும் அருகில் காணப்படும் பகுதிகளில் குப்பைகளை வீசுவதைத் தவிர்க்கும் வகையில் சுவரொட்டிகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இளைஞர்கள் மத்தியில் கழிவு வேறாக்கல் மற்றும் மீள்சுழற்சிக்குட்படுத்தல் தொடர்பில் அடிப்படையான விடயங்களைத் தெரியப்படுத்துவது என்பதில் நிறுவனம் அதிகளவு நம்பிக்கை கொண்டுள்ளதுடன், நிலைபேறான சூழலை உருவாக்குவதில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சம் என்பதில் நிறுவனம் அதிகளவு நம்பிக்கை கொண்டுள்ளது. ஹொல்சிம் லங்காவின் நிலைபேறான செயற்பாடுகள், தொடர்பாடல்கள் மற்றும் வெளியக விவகாரங்களுக்கான தலைமை அதிகாரி பர்சானா கான் கருத்து தெரிவிக்கையில்,

சமூகப் பொறுப்புணர்வு வாய்ந்த நிறுவனம் என்னும் வகையில், ஹொல்சிம் லங்கா தொடர்ச்சியாக எமது சமூக அபிவிருத்தியுடன் தொடர்புடைய செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகிறது. புத்தளம் பாடசாலைகளுடன் இணைந்து நாம் அண்மையில் முன்னெடுத்திருந்த நிகழ்வின் மூலமாக, முறையான கழிவு முகாமைத்துவத்தின் ஊடாகச் சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன – என்றார். (த)

# யூனியன் அஷ்ரன்ஸ் கட்டணங்களை எம்காஷ் ஊடாகச் செலுத்துவதற்கு வசதி

மொபிடெல் நிறுவனத்தின் எம்காஷ் சேவையின் மூலம் தமது வாடிக்கையாளர்கள் இலகுவாகக் காப்புறுதி தவணைக் கட்டணங்களைச் செலுத்துவதற்காக யூனியன் அஷ்ரன்ஸ் ஜெனரல் காப்பறுதி நிறுவனம் கைகோர்த்துள்ளது. இதன் மூலம் தமது வாடிக்கையாளர்களுக்கு இலகுவான தமது அலைப்பேசியைப் பயன்படுத்தி நாட்டின் எந்த மூலையில் இருந்தும் தமது காப்புறுதித் தவணைக்கட்டணங்களை மேற்கொள்ள




முடியும். இந்த ஒப்பந்தத்தின் விளைவாக மொபிடெல் வாடிக்கையாளர்கள் மட்டுமின்றி ஏனைய வலையமைப்பைச் சேர்ந்த வாடிக்கையாளர்களும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கும் யூனியன் அஷ்ரன்ஸின் பொதுக் காப்புறுதி பிரிவுக்கான வாகனக் காப்புறுதிச் சேவைகள் மற்றும் ஏனைய காப்புறுதிச் சேவைகளுக்கான தவணைக் கட்டணங்களைச் செலுத்த முடியும். திறன்பேசி பாவனையாளர்கள் மிக இலகுவாக எம்காஷ் சேவையைச் செயற்படுத்திக் கொள்ளமுடிவதுடன், அல்லது எம்காஷ் அப்ஸ்சின் மூலம் பாதுகாப்பான முறையில் தவணைக்கட்டணங்களைச் செலுத்த முடியும். 24 மணி நேரமும் இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், பணப்பரிமாற்றத்தின் பின்னர் அதனை உறுதிப்படுத்துவதற்கான குறுந்தகவல் ஒன்றும் கிடைக்கப்பெறுவதன் மூலம் நாடு முழுவதும் பாதுகாப்பான வசதியான பணப்பரிமாற்றத்தை எஸ்.எல்.ரி மொபிடெல் தமது வாடிக்கையாளர்களுக்கு உறுதி செய்துள்ளது.


யூனியன் அஷ்ரன்ஸ் ஜெனரல் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப முகாமையாளர் க்ளெமன்ட் பிரனாந்துபுள்ளே கருத்து தெரிவிக்கையில்; "வாடிக்கையாளர்களுக்கு மிகச் சிறந்த சேவைகளை வழங்கக்கூடிய முறைகளைக் குறித்து நாம் எப்பொழுதும் அக்கறையுடன் உள்ளோம்.

பணப்பரிமாற்று முறைகளை மேலும் இலகுபடுத்தும் வகையில் பல்வேறு டிஜிற்றல் பணப்பரிமாற்று முறைகள் தற்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் எஸ்.எல்.ரி மொபிடெல் நிறுவனத்தின் சேவையானது மிக சிறந்ததும் பாதுகாப்பான சேவையாக இருப்பதுடன் மிக பாதுகாப்பானதாகவும் காணப்படுகின்றது. ஆகையினால் எமது வாடிக்கையாளர்கள் நாட்டின் எந்தப் பகுதியிலிருந்தும் எந்த நேரத்திலும் தமது காப்புறுதி தவணைக் கட்டணங்களைச் செலுத்த முடியும்" எனக் கூறினார். (த)

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை தகவல்கள்

| 13/7/2016 | www.cse.lk | | | |
|---|---|---|---|---|
| சுட்டிகள் | | இன்று | நேற்று | |
| ASPI | 1.47 | 6,402.78 | 6,401.31 | |
| S&P SL20 | 17.04 | 3,408.00 | 3,390.96 | |
| வியாபாரப்புரள்வு | | 1,275,229,696 | 562,558,144 | |
| உள்நாடு- கொள்வனவு | | 993,535,424 | 499,885,024 | |
| விற்பனை | | 1,205,434,240 | 502,120,416 | |
| வெளிநாடு- கொள்வனவு | | 281,694,336 | 62,673,092 | |
| விற்பனை | | 69,795,576 | 60,437,712 | |



| அதிகூடிய பரிமாற்றம் கம்பனி | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| பிரவுன்ஸ் ஹைட்ரோ பவர் | HPFL.N | 6.7 | 78,995,050 | 552,967,194 |
| அலூபப் | ALUF.N | 52 | 1,654,077 | 81,601,152 |
| டிஸ்டில்லரிஸ் | DIST.N | 217 | 271,230 | 58,585,520 |
| ஹேய்லீஸ் பைபர் | HEXP.N | 87.9 | 628,215 | 57,723,862 |
| டயலொக் | DIAL.N | 10.7 | 4,003,438 | 43,235,973 |
| ஷெவ்ரோன் லூப்ரிகன் | LLUB.N | 160.00 | 264,455 | 42,298,995 |
| [illegible] | TJL.N | 37 | 1,078,680 | 39,895,881 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 129.40 | 260,265 | 33,583,524 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.W | 5.7 | 4,948,498 | 29,541,290 |
| அக்ஸஸ் இஞ்சினியரிங் | AEL.N | 22.4 | 1,261,701 | 28,263,812 |

அறிவித்தல்கள் -

பங்குலாபம்

சொபிட்லொஜிக் பைனான்ஸ் (CRL) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.25

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 294 |
| பரிமாற்றத்தில் | 206 |
| விலை உழைப்பு | 13.3 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய மடத்தில் (முதலாம் பக்கத்தொடர்ச்சி)

தன்னை வரவழைத்த நபர் அங்கு வைத்துத் தன்னை வன்புணர்ந்தார் என்று வடமராட்சியைச் சேர்ந்த பெண் இந்த முறைப்பாட்டைச் செய்தார். அவரது தந்தையும் பொலிஸ் நிலையம் வந்திருந்தார். தமது ஊரில் உள்ள ஆலயத்திற்கு வந்த சமயத்தில் சந்தேகநபர் தனக்கு அறிமுகமானார் என்றும் நன்கு பழக்கப்பட்டவர் என்றும் அந்தப் பெண் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மந்திகை வைத்தியசாலை கிளினிக்கில் சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் பகல் சென்றேன். அங்கிருந்து வெளியேறும்போது சந்தேக நபர் என்னைச் சந்தித்தார். தனது வீட்டைக் காட்டுகிறார் என்றுகூறி அழைத்துச் சென்றார். சாவகச்சேரியில் உள்ள ஆலய மடம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார். அங்கு வைத்து என்னை வன்புணர்ந்தார். பிற்பகல் 2 மணியளவில் நான் வீடு திரும்பினேன். தானும் வீட்டுக்கு வந்து இது பற்றிப் பெற்றோருடன் பேசுவார் என்று அவர் தெரிவித்திருந்தார். ஆனால் நேற்றிரவு வரை அவர் வரவில்லை. அதனால் முறைப்பாடு செய்கிறேன்" என்றுள்ளது.

## சிறுப்பிட்டியில்

யாகச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் மற்றொரு பெண்ணும் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட போது அவர் மயங்கி வீழ்ந்தார். பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சிறுப்பிட்டி தெற்கு, சிறுப்பிட்டி மேற்கு, கைதடி, அச்செழு, புத்தூர், புத்தூர் கிழக்கு, காளியானை பகுதிகளைச் சேர்ந்த குடும்பப் பெண்களைக் குறிவைத்தே இவர்கள் செயற்பட்டனர் என்று பொலிஸார் கூறினர்.

"அரச வங்கியில் தான் பணியாற்றுகின்றேன் என்று அந்தப் பெண் எம்மிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். 5 லட்சம் ரூபாய் வரையில் கடன் பெற்றுத் தரலாம் என்றார். முற்பணமாக 5 ஆயிரம் ரூபா தருமாறு கேட்டார். பார்ப்பதற்கு வங்கி அதிகாரி மாதிரியான நடையுடையுடன் இருந்தார் என்பதால் நம்பி அவரிடம் பணத்தைக் கொடுத்தோம். சிறுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த பெண்ணும் அவருடன் இருந்ததால் இலகுவில் நம்பிவிட்டோம்" என்றார் ஏமாற்றப்பட்ட பெண் ஒருவர். முற்பணமாக 5 ஆயிரம் பெற்றுக்கொண்ட பின்னரும் கடன் பெற்றுக் கொடுக்காமல் காலத்தை இழுத்தடித்ததால் உசாரடைந்த பெண்கள் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டனர். விசாரணை செய்த தாம் சிறுப்பிட்டியில் வேறு சிலரையும் இதே போன்று ஏமாற்றி முற்பணம் பெறுவதற்காகக் கில்லாடிப் பெண் வந்தபோது கைது செய்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட பெண், இதே போன்ற பண மோசடிக் குற்றங்களில் முன்னரும் ஈடுபட்டார் என்றும் ஏற்கனவே இது தொடர்பில் அவர் மீது வழக்கு நடக்கிறது என்றும் நீதிமன்றப் பிணையில்தான் அவர் வெளியில் நடமாடினார் என்றும் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவித்தன. (உ-5-107-422)

## மரண அறிவித்தல்கள்

### வேலாயுதம்பிள்ளை காசிநாதன்



மண்ணில் 03 . 03 . 1960 — விண்ணில் 06 . 07 . 2016

யாழ். சாவகச்சேரி, நுணாவில் மத்தியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Stuttgart ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம்பிள்ளை காசிநாதன் 06.07.2016 புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்பிள்ளை- நாகரத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும் பொன்னம்பலம்- லீலாவதி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயசோதி அவர்களின் அன்புக் கணவரும் சேனாதிராஜா, காலஞ்சென்ற இராஜபூபதி, இரத்தினபூபதி .காலஞ்சென்ற குகமூர்த்தி, குகனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ராசம்மா காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர், நடராசா, சிவசக்தி மற்றும் கதிர்காமநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2016) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**வேலாயுதம்பிள்ளை வீதி,**
**நுணாவில் மத்தி,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### கணபதிப்பிள்ளை சின்னத்துரை

(உரிமையாளர் - சின்னத்துரை பேக்கரி, ஓமந்தை)



பிறப்பு 16 . 10 . 1922 — இறப்பு 11 . 07 . 2016

யாழ். வேலணையைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 2 ஆம் வட்டாரம், ஓமந்தை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சின்னத்துரை 11.07.2016 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு இளைய மகனும், காலஞ்சென்ற ஆறுமுகம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு, அன்னப்பிள்ளை, கார்த்திகேசு, இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பத்மாவதி, பரநிருபசிங்கம், காராளபிள்ளை மற்றும் அரியரத்தினம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற தையல்நாயகியின் அன்புக் கணவரும், இரத்தினவேணி (பேபி - வவுனியா) காலஞ்சென்ற இரத்தினேஸ்வரன் (அப்பன் - கனடா), இரத்தினானந்தம் (செல்வம் - கனடா), பரமேஸ்வரன் (ரவி - முன்னாள் தொழில் நுட்ப அலுவலர், சேவா லங்கா - வவுனியா), ஜெயந்தன் (யுவன் - கனடா), காலஞ்சென்ற சுசிலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயகுமாரன் (இளைப்பாறிய அதிபர் - வவுனியா), கிருபாந்தி (கனடா), வில்மா (கனடா), சிவதாரணி (வவுனியா), ஜீவஜனனி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும், காயத்திரி (கனடா), சுதர்சன் (பிரான்ஸ்), விபிதா (வவுனியா), சங்கீதன் (கனடா), சகானா (கனடா), நிக்ஷன் (கனடா), வனஷன் (கனடா), தனுசன் (வவுனியா), பிரம்மி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், கவிநயன் (கனடா), கவிஷன் (கனடா), சந்தோஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2016) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் ஓமந்தை இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***வீட்டு முகவரி:***
**இல.16, குட்செட் வீதி,**
**வவுனியா.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்பு:**
**பரமேஸ்வரன்**
**(ரவி - 077 079 0227 இலங்கை)**

(சி.24196) (13.18)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தேவாமிர்தம் மயில்வாகனம்



பிறப்பு 14 . 05 . 1944 — இறப்பு 11 . 07 . 2016

அரியாலையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவாமிர்தம் மயில்வாகனம் 11.07.2016 திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மயில்வாகனத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - பார்வதி தம்பதியரின் பாசமிகு மருமகளும் தவமணி, சின்னமணி , காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் சிறிதரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் கனகரட்ணம், சறோஜாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சந்திரகுமார்(யாழ் பல்கலைக்கழகம்), கோகிலகுமாரி, மோகனகுமார்(லண்டன்), ஜெயகுமாரி(லண்டன்), பிறேமகுமாரி, சசிகுமாரி(லண்டன்), விஜயகுமாரி, வசந்தகுமார் (லண்டன்), சதீஸ்குமார், செல்வகுமாரி, கேமலதா ஆகியோரின் அன்புத் தாயாரும் ரதிமாலினி, றஞ்சன், குசேந்தினி(லண்டன்), தவறாஜா(லண்டன்), குமாரகுரு (நீர்ப்பாசனத் திணைக்களம் திருநெல்வேலி), பிறேமகுமார் (லண்டன்), புல்சன்(பிரதேச சபை - நல்லூர்), றாஜி, சுகந்தா (ஆசிரியர் மு/ ஒலுமடு தமிழ் வித்தியாலயம்) . சுதாகரன் (யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரசாத்( D.D.TV அறிவிப்பாளர்), கோபிநாத் (தேசியநீர் வழங்கல் வடிகால் அமைப்பு வவுனியா), யதுர்சனா,தக்சலா, சம்ஜா, தனுசாந், பானுசாந், கிறிஸ்ரீனா (லண்டன்), பிளஸ்ரீனா(லண்டன்), கௌசி (லண்டன்), எப்சிபா (லண்டன்), பியூலா(லண்டன்), அபிசேக் . கபிஸ்ரா, சயானா, சதுர்சன், பிரித்தா (லண்டன்), பிருந்தா (லண்டன்), டிலூஜா(லண்டன்), சாருஜா, ரேனுஜா, சனுஸ், வர்ஷா, தேனுஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### அரியமுத்து முத்தையா



பிறப்பு 10 . 10 . 1947 — இறப்பு 12 . 07 . 2016

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மாவடிவீதி, ஐந்துசந்தி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அரியமுத்து முத்தையா 12.07.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியமுத்து - கண்ணாத்தா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சங்கர் முருகேசு மற்றும் வாழவந்தாள் தம்பதியரின் அன்பு மருமகனும் ஆவுடையாச்சியின் அன்புக் கணவரும் ஜானகி, வெள்ளைச்சாமி, அமிர்தலிங்கம், சாரதாம்பாள், சாரதாதேவி, சரஸ்வதி(ஜேர்மன்), குமாரசாமி(குவைத்), இராமநாதன்(இந்தியா), இலட்சுமணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகேஸ்வரி, கருணாகரன், கிருஷ்ணசாமி, இராமசாமி, இராசு, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், ரவிசங்கர் மற்றும் பத்மா, வியாகேஸ்வரி, தேவமலர் காலஞ்சென்ற விமலேஸ்வரி மற்றும் புஸ்பலதா ஆகியோரின் மைத்துனரும் கமலநாதன், மோகனதாஸ், மனோகரன், சுரேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜமுனா, சிவநிதி, திலகராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் டினேஸ், தர்சிகன், நரேஸ், காலஞ்சென்ற விதுசன் மற்றும் சுலோஜனா, ஜனுஷா, ஜகித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2016) வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மாவடி வீதி,**
**ஐந்து சந்தி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: மு. மனோகரன்**
**விதுசன் ஹாட் வெயர் அன்**
**போக்குவரத்துச் சேவை.**

(J 2893) (14.17.18)

**077 537 7892**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரங்கள்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## வவுனியா (முதலாம் பக்கத்தொடர்ச்சி)

செயலருக்கு அனுப்பப்பட்டுள்ளது.இதனை அடுத்து வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தை உடனடியாகக் கூட்டுவதற்குரிய நடவடிக்கைகளை மாவட்டச் செயலர் ஆரம்பித்துள்ளார் என்று 'உதயன்' பத்திரிகை அறிந்தது.பொருளாதார வலயம் ஓமந்தையிலேயே அமையவேண் டும் என்று வடக்கிலுள்ள பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் விருப்பம் தெரிவித்தனர் என்று வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் திங்கட்கிழமை அறிவித்தார். இந்த நிலையில், முடிவை வவுனியா ஒருங்கிணைப்புக்குழுவே தீர்மானிக்க வேண்டும் என்று கொழும்பு தெரிவித்துள்ளது.2010ஆம் ஆண்டு நடந்த வவுனியா ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொருளாதார வலயம் ஓமந்தையிலேயே அமைய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால், திட்டத்தைச் செயற்படுத்தும் கிராமியப் பொருளாதார அமைச்சு அந்த முடிவை நிராகரித்தது. நகரில் இருந்து 2 கிலோ மீற்றர்களுக்கு உட்பட்ட பகுதியிலேயே வலயம் அமைய வேண்டும் என்று வலியுறுத்தியது. இதையடுத்தே இந்த விடயத்தில் சர்ச்சைகள் ஆரம்பித்தன.

ஜுன் மாதம் 28ஆம் திகதி நடந்த கொழும்பு அமைச்சரவைக் கூட்டத் தீர்மானத்தை செயற்படுத்துமாறு தெரிவித்து, கடந்த 6ஆம் திகதி வரையப்பட்ட கடிதம் அமைச்சரவை அலுவலகத்தினால் வவுனியா மாவட்டச் செயலருக்கு அனுப்பப்பட்டது. அந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் பங்கேற்றிருந்தார். தனிச் சிங்களத்தில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. "2016 ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்ட யோசனைக்கு அமைய விசேட பொருளாதார வலயத்தை வவுனியாவில் நிறுவுவதற்கு அனுமதி வழங்குவது எனவும் மற்றும் குறித்த நிலையத்தை அந்த மாவட்டத்துக்குள் அமைக்க வேண்டிய சரியான இடம் குறித்து வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் முடிவு மேற்கொள்ளப்படல் வேண்டும் என்றும் ஜுன் 28 ஆம் திகதி நடுவண் அரசின் அமைச்சரவைக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது" என்று கடிதம் கூறுகிறது. ஜனாதிபதியின் செயலாளர், பிரதமரின் செயலாளர், வடக்கு மாகாண தலைமைச் செயலர் மற்றும் வவுனியா மாவட்டச் செயலர் ஆகியோருக்கும் கடிதம் பிரதியிடப்பட்டுள்ளது.

இதையடுத்து வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை அவசரமாகக்கூட்டுவதற்கான ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் உடனடியாகக் கூட்டம் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் குறைவு என்று சுட்டிக்காட்டப்பட்டது. ஏற்கனவே அவர் இல்லாமல் நடத்தப்பட்ட சிறப்புக் கூட்டத்திலேயே பொருளாதார வலயத்தைத் தாண்டிக்குளத்தில் அமைப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் அதனை ஏற்பதற்கு அடியோடு மறுத்துவிட்ட முதலமைச்சர், தாண்டிக்குளத்தில் தெரிவு செய்யப்பட்ட காணியை விடுவிப்பதற்கும் மறுத்து விட்டார்.

ஓமந்தை மாணிக்கர்வளவு அல்லது வேப்பங்குளம் காணிகளையே பொருளாதார வலயத்துக்காக முதலமைச்சர் பரிந்துரைத்தார். மாணிக்கர்வளவுக் காணி ஏற்கனவே தனியாருக்கு வழங்கப்பட்டது என்பதால் அதனை மீண்டும் அரசுடமையாக்க மூன்று மாதங்கள் செல்லும் என்று வடக்கு மாகாண காணி ஆணையாளர் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால், உடனடியாகப் பணிகளை ஆரம்பிக்கவில்லை என்றால் பொருளாதார வலயத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிவிடும் நிலையே இருக்கிறது. எனவே வேப்பங்குளம் காணியே இப்போதைக்கு முதன்மைத் தெரிவாக இருக்கிறது.

இருப்பினும் "பேய்கள் உலாவும் இடத்திலெல்லாம் பொருளாதார வலயம் அமைக்க முடியாது, போக்குவரத்துக்கு இலகுவான இடத்தில்தான் அதனை அமைக்க முடியும்" என்று கூறிக் கிராமியப் பொருளாதார அமைச்சர் ஹரிசன் அந்த இடத்தை ஏற்கனவே நிராகரித்தார். வவுனியா நகரிலிருந்து ஒன்று அல்லது இரண்டு கிலோ மீற்றரிலேயே பொருளாதார வலயம் அமைய வேண்டும் எனவும், இல்லாவிடின் நிதி திறைசேரிக்கு திரும்பி விடும் என்றும் வலியுறுத்தினார். (உ-5,10)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவமலர் சிறிதரன்



புளியங்கூடல் வடக்கைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவமலர் சிறிதரன் 11.07.2016 திங்கட்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் யோகநாதன் (ஓவசியர்), தேவநாயகி (மணி) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பரிமளம் தம்பதியரின் அன்பு மருமகளும், சிறிதரன் (சிறி) அவர்களின் பாசமிகு மனைவியும், யதுகுலன்(A/L - பெரியபுலம் மகா வித்தியாலயம்), குமரகுலன் (A/L கொக்குவில் இந்து கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், சிவநிதி, சிவயோகராஜன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2016) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**59, பூநாறி லேன்,
கொக்குவில் மேற்கு.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 221 6263 / 077 775 9426**

## முள்வேலியை (முதலாம் பக்கத்தொடர்ச்சி)

இராணுவத்தினர் நிராகரித்துவிட்டனர்.

முல்லைத்தீவு கடல் ஏரிப்பகுதியில் தொழில் செய்யும் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை கலந்துரையாடப்பட்டது. வட்டுவாகல் பாலத்திலிருந்து செல்லும் வீதியில் 1.5 கிலோ மீற்றர் நீளமான பகுதியைப் படையினர் ஆக்கிரமித்துள்ளதால் தினமும் 4 முதல் 5 கிலோ மீற்றர்கள் தூரம் சுற்றியே தொழிலுக்குச் செல்ல வேண்டிய துன்பத்தை தாம் எதிர்கொள்கின்றனர் என்று மீனவர்கள் அங்கு கவலை தெரிவித்தனர். அந்த வீதியைத் திறந்து விடுமாறும் கோரினர்.

குறித்த பகுதிக்குரிய 591 பிரிகேட்டின் இராணுவத் தளபதியுடன் நேரில் சென்று பார்வையிட்டேன். மீனவர்களின் கோரிக்கையைக் கூறி குறித்த பகுதியினை விடுவிக்குமாறு கேட்டேன். ஆனால் அந்த வீதியினைத் திறந்துவிட படை அதிகாரி மறுத்துவிட்டார். அதேபோல் ஏரிக்கரையில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு முள்வேலியை அகற்றுமாறு விடுத்த கோரிக்கையையும் படை அதிகாரி நிராகரித்தார். அந்த இடத்தில் ஏரியுடன் இணைந்துள்ள கரையில் நடைபாதைக்கு மட்டும் சிறிய இடம் விடப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் ரூபாவதி கேதீஸ்வரன் அங்கு தெரிவித்தார். (உ 10)

சாந்தை
**அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்**
**சித்திரத்தேர் வெள்ளோட்டம் 14.07.2016**



**புதிய சித்திரத்தேர் நிர்மாணிப்பு**
**விஸ்வப்பிரம்மஸ்ரீ**
**இராஜதுரை பிரபாகரன் (பிரான்)**
குழுவினர்
**ராஜன் சிற்பாலயம்-**
**தலங்காவற் பிள்ளையார் வீதி,**
திருநெல்வேலி

**வர்ண வேலை**
**திரு.T.தணிகாசலம்**
**(ரவி ஆட்ஸ்) திருநெல்வேலி.**

**தொடர் சொற்பொழிவு**
மஹோற்சவ காலத்தில் முற்பகல் 10.30 மணிமுதல் 11.00 மணிவரை
ஸ்ரீ சித்திவிநாயகர் மகிமை எனும் தலைப்பில்
கலாபூசணம் சைவப்புலவர் ஓய்வுநிலை ஆசிரியர்
திரு. ஆ. கனகரத்தினம் அவர்கள் (சுழிபுரம் வடக்கு)
சொற்பொழிவு நிகழ்த்துவார்.

**சாந்தை, பண்டத்தரிப்பு.** **ஆலய பரிபாலன சபை**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை **திருமதி வாசுகி சிவசோதியின்**
அன்புத்தாயார்
**திருமதி தவமணி இராமலிங்கம்**
அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (10.07.2016) அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 25 | | 16 |
| 10 |  | 06 |
| 1952 | | 2016 |

அமரர் **சுப்பிரமணியம்**
**கணேசமூர்த்தி**

*கடந்த 16.06.2016 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.07.2016) வியாழக்கிழமை காலை 08.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கடற்கரையிலும் சபிண்டீகரண வீட்டுக்கிருத்தியம் நாளை (15.07.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.*

கிறம்பிட்டி மேற்கு, நீர்வேலி
தொ.பே.இல. 077 858 3863
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா (கமலா) சபாரத்தினம்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1942 | | 2016 |
| 08 |  | 07 |
| 31 | | 12 |

பெரியபளை பளையைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா சபாரத்தினம் கடந்த (12.07.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னையா -வள்ளிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும்,சபாரத்தினத்தின் அன்பு மனைவியும், சௌந்தரராஜன்(சுவிஸ்), நிர்மலராஜன் (சுவிஸ்), முரளிதரன் (கனடா), ஞானச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மோகனாம்பிகை, கலா, சாந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற சின்னக்குட்டி (கணேஸ்) மற்றும் செல்வராணி (சந்திரா) ஆகியோரின் சகோதரியும், செந்தூரன், நிசாந் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.07.2016) வெள் ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## சாம்பல்தீவு
(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

இ.பாஸ்கரன் குருக்கள் இது தொடர்பில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டதாவது:

மதத் தலங்கள், வழிபாட்டுச் சின்னங்களை இன்னுமோர் இனத்தவர் அல்லது மதத்தவர் செறிவாக வாழும் பகுதியில், அதுவும் தனியாருக்குச் சொந்தமான காணியில் வைத்து வந்ததால் கடந்த காலங்களிலும் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. போர் தொடங்குவதற்கும் - தொடர்வதற்கும் இதுவும் ஒரு காரணமாக அமைந்தது. மதரீதியாக மக்களைத் தூண்டி, இனக் கலவரத்தை ஏற்படுத்துவதில் புத்த தர்மத்தை போதிக்கும் சில பௌத்த பிக்குகள் அன்று தொடக்கம் இன்றுவரை இருந்தே வருகின்றனர். அதற்கு இலங்கை அரசின் பொலிஸாரும் இராணுவத்தினரும் தொடர்ந்து பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.சாம்பல்தீவு சந்தியானது தமிழர்களின் பூர்வீகபூமி என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இலங்கையில் நல்லாட்சி என்று சொல்லிக்கொண்டிருக்கும் அரசையும் மீறியா இவைகள் நடக்கின்றன? இப்படிச் சென் றால், நல்லிணக்கம்,புரிந்துணர்வு என் பதை எப்படி மக்களிடையே ஏற்படுத்த முடியும்? மக்களை வழிநடத்த வேண்டியவர்களே மதகுருமார். இவர்களே, மக்களை மாயைக்குள் இழுத்துச் சென்று பாவங்களைச் செய்யத் தூண்டுகின்றனர். இவ்வாறன செயற்பாட்டைக் கண்டிப்பதுடன், உடனடியாக புத்தர் சிலை வைப்பதைத் தடுத்து நிறுத்தி அரசு நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டும் - என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்திரிக்காக (முதலாம் பக்கத்தொடர்ச்சி)

பதி மகிந்த ராஜபக்ச கூடத்திற்குத் தலைமை தாங்கினார். கூட்டம் அவரது மக்கள் தொடர்பாடல் அலுவலகத்தில் இடம்பெற்றது.

"நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி கூறும் கருத்துத்தான் அரசினுடைய கொள்கை. அதுவே நடைமுறைப்படுத்தப்படவேண்டியதுமாகும். ஜனாதிபதி தெரிவிக்கும் கருத்து அவரது தனிப்பட்ட கூற்று என்று இன்று அரசில் முக்கிய அமைச்சுப் பதவிகளை வகிக்கும் சிலர் தெரிவித்திருக்கின்றனர். ஜனாதிபதி கூறியது அவரது தனிப்பட்ட கருத்தென ஒதுக்கிவிட முடியாது. மேற்குலக நாடுகளுக்கும், அரச சார்பற்ற அமைப்புக்களுக்கும் இலங்கையில் விரும்பியதைச் செய்வதற்கு அரசு அனுமதிப் பத்திரம் வழங்கியுள்ளது. ராஜபக்ச குடும்பத்தினர் மீது தாக்குமாறு மாத்திரம் அவர்களுக்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது" என்று கூட்டத்தின் முடிவில் ஊடகங்களிடம் தெரிவித்தார் மகிந்த ராஜபக்ச.போர்க்குற்ற விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகளை ஒருபோதும் உள்ளடக்க முடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால உறுதியாகத் தெரிவித்திருக்கிறார். அது அவரது தனிப்பட்ட கருத்து என்று அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருந்தார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் கலந்து கொண்டு விட்டுத் திரும்பிய அமைச்சர் அவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயங்களை மறைமுகமாகக் குறிப்பிட்டே மகிந்த ராஜபக்ச கருத்துத் தெரிவித்தார். நேற்றைய கலந்துரையாடலில் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவும் பங்கேற்றார். (உ-5)

## யாழ்.

ஈடுபடும். இந்தச் சேவைக்கான ஆசன முற்பதிவுகளை யாழ். மையப் பேருந்து நிலையத்திலும், வெள்ளவத்தை தொடருந்து நிலையத்திலும் மேற்கொள்ளமுடியும் எனவும் யாழ். சாலை முகாமையாளர் நேற்று அறிவித்தார். (உ-5-ரி4)

### வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை
### மானிப்பாய்கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை
### ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் :- 02**
**ஆதன இலக்கம் :- 42 (புதிய பதிவு)**
**வீதி: எச்சாட்டி (ஈஞ்சடி வீதி)**
**கிராமசேவையாளர் பிரிவு :- J/129 சுதுமலை வடக்கு**

வட்டாரம் 02, எச்சாட்டி (ஈஞ்சடி வீதி).ஆதன இல 42 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை " **மலவத்தான சீமா** " என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 03 குளி 15.02 கொண்ட) இவ்வாதனம் யாழ்ப்பாணம்.சுதுமலை வடக்கு. மானிப்பாய் தற்போது ஒன்ராறியோ.கனடாவில் வதியும் ஐயாத்துரை பாலசிங்கம் பெண் சிவனருட்செல்வி இவர்களின் தத்துவக்காரி திருமதி. நவநாயகி தம்பிராசா ஆகிய இவரால் உடுவில் தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தசாமி பெண் கமலாசினி என்பவருக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தரிஸ் திரு. M. தியாகராஜா அவர்கள் முகதாவில் நிறைவேறிய 9493 ஆம் இலக்க 03.01.2007 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு. மு. இராசையா அவர்களால் வரையப்பட்ட 512 ஆம் இலக்க 2007.01.06 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது "**மலவத்தான சீமா**" நிலப்பரப்பு 03 குளி 15.02 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது வேலுப்பிள்ளை கந்தசாமி பெண் கமலாசினி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

## Community Development Organization (CDO)

The Community Development Organization (CDO) is a registered voluntary, non-profitable, nonreligious, and non-governmental organization. The Government and the international aid organizations are working on normalizing the human life in the war affected areas through the development of socio economic factors. We are inviting applications from eligible applicants of Sri Lankan citizens for the following positions.

**Project Coordinator (Gender) – Mullaitivu-o1 No**

Applicants must possess the following
1. Bachelor Degree in Sociology, Management or related areas.
2. Atleast 5 years experience in INGO/NGO sector in Gender and other related areas.
3. Fluency in local languages and working knowledge in English
4. Report writing and communication skills.
5. Computer skills in MS office operations.
6. Valid motor bike driving license.

**Field Coordinator-Manthai East and Thunukkai-02 Nos**

Applicants must possess:
- Minimum GCE A/L Education
- At least 03 years INGO/NGO working experience in the field.
- Report Writing & Communication skills
- Computer literacy
- Fluency in local languages and working knowledge in English
- Valid Motorbike licence

The above positions are expected to work in the office as well as in the field. Salary is negotiable. Please forward your CV with 02 references either by post or by e-mail before 21th July 2016, 4.00 pm to: cdomullaitivu@gmail.com or to the following address:
The Chairman
Community Development Organization (CDO)
Trinco male Road, Chemmalai, Mullaitivu

***Please Note:***
1. Only short listed candidates will be notified
2. Females are encouraged to apply

கோலாகல திறப்புவிழா
கொண்டாட்டம்
The Legend
New FASHION PARK
&
SHOPPING MALL
NO. 33, K.K.S ROAD, CHUNNAKAM.
இன்று (14.07.2016) வியாழக்கிழமை
காலை 7.32 மணிமுதல்
உங்கள்
நியூ பெஷன் பார்க்
&
ஷொப்பிங் மால்
இல. 33, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகத்தில்
உங்கள் நல்லாசியுடன்
மிக பிரமாண்டமாய்...
சுன்னாகத்தின்
மிகப்பெரிய ஷோரூம்
இப்போது உங்களுக்காக
அனைவரும் வாரீர்...
நல்வரவை நாடும்:
திரு. நிஷாந்தன் (உரிமையாளர்),
நியூ பெஷன் பார்க் ஊழியர்கள்.



Awarding
Ceremony – 2016
பாராட்டி வாழ்த்துகின்றோம்
இன்று (14.07.2016)
HNB Metro Branch , Auditoriumல் இடம்பெறும்
ESOFT METRO CAMPUS யாழ் கிளையின் 7ஆம் சான்றிதழ் வழங்கும் விழாவில் கலந்து
- Diploma in Information Technology
- Diploma in English
- Diploma in Software Engineering
- Diploma in Web Engineering
- Diploma in Business Management
- Diploma in Computerized Accounting
- Diploma in Hardware & Networking
- Diploma in AutoCAD
- Diploma in Graphic Designing
- Other Courses

ஆகிய துறைகளில் சான்றிதழ் பெற்றுக்கொள்ளும் எமது மாணவர்களுக்கு பாராட்டு தெரிவிப்பதோடு இவர்கள் மென்மேலும் பல பட்டங்களை பெற்றுக்கொள்ள எமது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவிக்கின்றோம்.
பாராட்டி வாழ்த்துவோர்
ESOFT
Shaping Lives, Creating Futures
Management of ESOFT METRO CAMPUS JAFFNA
ESOFT METRO CAMPUS - JAFFNA | No.137, K.K.S Road, Jaffna | Tel : 021 222 4142



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வில்லியம்ஸ் இணை சம்பியன்

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவில் செரீனா வில்லியம்ஸ், வீனஸ் வில்லியம்ஸ் இணை சம்பியனாகியது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் அமெரிக்காவின் வில்லியம்ஸ் சகோதரிகள், 5ஆம் நிலை இணையான பபோஸ் (ஹங்கேரி), சிஸ்வேதோவா (கஜகஸ்தான்) இணையை எதிர்த்து விளையாடினர். அபாரமாக ஆடிய வில்லியம்ஸ் சகோதரி கள் இணை முதலிரு செற்களையும் முறையே 6:3, 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம)




# சமிக்கு 2.2 கோடி இழப்பீடு வழங்கியது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை

காயத்துடன் தொடர்ந்து விளையாட அனுமதித்தமைக்காக சமிக்கு 2.2 கோடி (இந்திய ரூபாய்) இழப்பீடாக வழங்கியது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை.

இந்திய அணியின் நம்பிக்கைக்குரிய வேகப்பந்து வீச்சாளராக திகழ்ந்து வருபவர் மொகமட் சமி. ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் விளையாடிய அவர் அந்தத் தொடரில் 17 இலக்குகளை வீழ்த்தி அசத்தினார். இந்தத் தொடருக்கு முன் அவருக்கு காயம் ஏற்பட்டது. இந்த காயம் சிறிதாக இருந்தபோதே அவர் அணியில் இருந்து விலகி இருக்க முற்பட்டார். ஆனால், இந்த முடிவை இந்தியா விரும்பவில்லை. தொடர்ந்து விளையாட வைக்கப்பட்டார். இதனால் அவரது காயம் பெரிதாகியது. பின்னர் அவர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு கிட்டத்தட்ட ஒரு வருடம் ஓய்வில் இருக்க வேண்டியதாயிற்று.

இதனால் அவர் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் இடம்பெறவில்லை. அவரைக் காயத்துடன் தொடர்ந்து விளையாட வைத்ததால்தான் ஐ.பி.எல். தொடரில் இடம் பிடிக்க முடியவில்லை என்று நினைத்த இந்திய கிரிக்கெட் சபை அவருக்கு 2 கோடியே 23 லட்சத்து 12 ஆயிரத்து ஐந்நூறு ரூபா இழப்பீடாக வழங்கியது. (ம)





©EPA

# ரியோ ஒலிம்பிக் தொடரில் மரிய செரபோவா இல்லை

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரில் ரஷ்ய ரென்னிஸ் வீராங்கனையான செரபோவா கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் (ஜனவரியில்) நடைபெற்ற ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் செரபோவாவும் கலந்துகொள்ள திட்டமிட்டார். இதனால் ஊக்கமருந்துச் சோதனை நடத்தப்பட்டது. செரபோவாவிடம் இருந்து பெறப்பட்ட மாதிரிகளில் தடைசெய்யப்பட்ட மெல்டோனியம் எனும் மருந்து இருந்தமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் தடை செய்யப்பட்டார். ஆனால், இந்தத் தடையை செரபோவா ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்காக சில காரணங்கள் செரபோவாவின் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டது.

அதாவது இந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்தே மெல்டோனியம் தடைசெய்யப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டது. மெல்டோனியத்தை எடுத்துக்கொண்டவரின் உடலில் அந்த மருந்து எவ்வளவு காலம் தாக்கம் செலுத்தும் என்று இன்று வரை உறுதிப்படுத்தவில்லை. எனவே செரபோவா கடந்த டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னரே மெல்டோனியத்தை எடுத்ததாக தெரிவித்து விவாதிக்கப்பட்டது. விளையாட்டுக்கான சர்வதேச நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம், விசாரணையை செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. இதனை செரபோவாவும் ஏற்றுக் கொண்டார். இதனால் அடுத்த மாதம் 5 ஆம் திகதி தொடங்கும் ரியோ ஒலிம்பிக்கில் செரபோவா பங்கேற்க இயலாது. (ம)

# அசத்துவார் ஆமிர் அக்ரம் நம்பிக்கை

பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளரான ஆமிர் இங்கிலாந்துக்கு எதிராக சிறப்பாகச் செயற்படுவார் என்று நம் பிக்கை தெரிவித்த அக்ரம் பாகிஸ்தானின் துடுப்பாட்ட வீரர்கள்மீது சிறிது அதிருப்தியையும் தெரிவித்தார்.

இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி லோட்ஸில் ஆரம்பமாகிறது. ஆமிர் இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில்தான் ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டு தடை விதிக்கப்பட்டார். தான் தடைபெற்ற லோட்ஸ் மைதானத்தில் இருந்தே அவரது டெஸ்ட் வாழ்க்கை மீண்டும் ஆரம்பமாகிறது. எனவே இந்தத் தொடர் ஆமிருக்கு உள ரீதியாக மிகுந்த சிரமமாக அமையும் என்று பலராலும் எதிர்பார்க்கப்படும் நிலையில், ஆமிர் மீது நம்பிக்கை தெரிவித்தார் பாகிஸ்தானின் முன்னாள் வீரரான அக்ரம்.

லோட்ஸ் மைதானத்தில் இங்கிலாந்தின் ஸ்விங் பந்து வீச்சு அதிக அளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கிறேன். அவர்களின் பந்துவீச்சு வரிசையுடன் ஒப்பிடுகையில் பாகிஸ்தான் என்ன செய்யப்போகிறது என்று சிறிது அச்சமாக உள்ளது. அதேநேரம் நிம்மதியடையக்கூடிய விடயம் என்னவென்றால் எம்மிடம் ஆமிர் உள்ளார். அவர் நிச்சயம் இங்கிலாந்தின் துடுப்பாட்ட வரிசையை அச்சுறுத்துவார் என அக்ரம் மேலும் தெரிவித்தார். (ம)

# ரெய்லர் ஓய்வு



மேற்கிந்தியத் தீவுகளின் வேகப்பந்து வீச்சாளரான ஜெரோம் ரெய்லர் டெஸ்ட் ஆட்டங்களிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

கடந்த சில மாதங்களாக மேற்கிந்தியத் தீவுகளின் டெஸ்ட் அணியிலிருந்து அவர் புறக்கணிக்கப்பட்டு வந்த நிலையிலேயே தனது ஓய்வு முடிவை ரெய்லர் நேற்று வெளியிட்டார். டெஸ்டில் இருந்து ஓய்வு பெற்றாலும், ஒருநாள் மற்றும் ரி-20 ஆட்டங்களில் தொடர்ந்து விளையாட திட்டமிட்டுள்ளதாகவும் ரெய்லர் மேலும் வெளிப்படுத்தினார். (ம)

# கூட்டு முயற்சிக்குக் கிடைத்த வெற்றி; போர்த்துக்கல் பயிற்சியாளர் தெரிவிப்பு

யூரோக் கிண்ணத்தைக் கைப்பற்றியமையானது அணியின் கூட்டுமுயற்சிக்கு கடைத்த வெற்றியெனத் தெரிவித்தார் போர்த்துக்கலின் பயிற்சியாளரான பெர்னாண்டோ சான்டோஸ்.

இது ஒரு அற்புதமான வெற்றி. வீரர்களின் உணர்ச்சிகளை விவரிப்பது கடினமானதாகும். எங்கள் அணியின் தலைவர் மகத்தான முயற்சியை மேற்கொண்டார். பலமுறை விமர்சனத்துக்கு உள்ளான அவர் காயத்தால் வெளியில் இருந்தாலும், வீரர்களைத் தொடர்ந்து உற்சாகப்படுத்தினார். அணியின் அபாரமான உத்வேகத்துக்கு கிடைத்த வெற்றி இதுவாகும். எங்கள் அணியில் திறமை வாய்ந்த வீரர்கள் பலர் உள்ளனர். ஆனால், நாங்கள் எதிரணியினரைவிட அதிகம் போராட வேண்டும். எதிரணியை விட அதிகம் களத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று எப்பொழுதும் நான் வீரர்களிடம் சொல்வேன். அதனை இந்த ஆட்டத்தில் எங்கள் வீரர்கள் செய்து காட்டி வெற்றி கண்டுள்ளனர். இந்த நாள் எங்களுக்கு உரிய நாளாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 14

*ஆவரங்கால் மத்தியின் தொடர்*

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து அச்சுவேலி அணிமோதவுள்ளது.

*அரியாலையின் கால்பந்தாட்டம்*

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி இன்று மோதவுள்ளது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இரவு 7 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறும். (ம-23)

# கழுகுகளின் கால்பந்தாட்டத்தில் கில்லறி வி.கழகம் முன்னேற்றம்



கரணவாய், ஜூலை 14

நெற்கொழு கழுகுகள் வி. கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் மன்னார் கில்லறி வி.கழகம் சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேறியது.

வடமாகாண ரீதியாக நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டிநவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. ரெக்சன் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவு செய்ய, 2:0 என்ற கோல் கணக்கில் முதல்பாதியில் முன்னிலை வகித்தது கில்லறி.

இரண்டாம் பாதியின் 48 ஆவது நிமிடத்தில் பிரியந்தனும், 78 ஆவது நிமிடத்தில் கௌதமனும் கோல்களைப் பதிவுசெய்ய, கோல் கணக்கு 2:2 என்று சமனானது. ஐந்து நிமிடங்கள் மீதமிருக்கும்போது, தாசன், ரஞ்சன் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றது கில்லறி. (ம-108)

# பிரம்படி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 14

கரவெட்டி கிருஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் கொக்குவில் பிரம்படி அணி சம்பியனானது.

கிருஸ்ராரின் மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இரவு 9 மணிக்கு நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கொக்குவில் ஏ.பி. அணியை எதிர்த்து கொக்குவில் பிரம்படி அணி மோதியது. 9 வீரர்கள் பங்குபற்றும் 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இரு இன்னிங்ஸாக ஆட்டம் அமைந்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் பிரம்படி அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரி மாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக தீபன் 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கொக்குவில் ஏ.பி. அணியின் சார்பாக சஞ்சீவன் 2 இலக்குகளைக்கைப்பற்றினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் ஏ.பி. அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்கள் வரை தாக்கப்பிடித்த போதிலும், 74 ஓட்டங்களையே பெறமுடிந்தது. அதிகபட்சமாக ராகுல் 20 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கொக்குவில் பிரம்படி அணியின் சார்பில் பவி இரு இலக்குகளைக் கைப்பற்றினார். 8 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பிரம்படி அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் ஏ.பி. அணியின் சார்பில் செல்டன் 41 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சாகித், சஜீவன், ரஜி மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

115 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் ஏ.பி. அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 76 ஓட்டங்களையே பெற்றதையடுத்து, 39 ஓட்டங்களால் வெற்றிபெற்றது பிரம்படி. ஆட்ட நாயகனாக பிரம்படி அணியின் செல்டன், தொடராட்ட நாயகனாக அதே அணியின் தீபன் ஆகியோர் தெரிவாகினர். (ம-422)



# சுகாதார அமைச்சு கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 14

வடமாகாண திணைக்களங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் சுகாதார அமைச்சு கிண்ணம் வென்றது.

கோண்டாவில் இரமகிருஷ்ணா வித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் சுகாதார அமைச்சு அணியை எதிர்த்து விவசாய அமைச்சு அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய விவசாய அமைச்சு அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை



இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக உசாந் 22 ஓட்டங்களையும், நிரோசன் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சுகாதார அமைச்சு அணியின்சார்பில்ரமேஸ் 2 இலக்குகளையும் வினோ, லிங்கேஸ், டினோதன் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சுகாதார அமைச்சு அணி 8.1 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 72 இலக்கை அடைந்தது.

அதிகபட்சமாக டினோதன் 36 ஓட்டங்களையும் ரமேஸ் 15 ஓட்டங்களையும், சுதேஷ்குமார் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் விவசாய அமைச்சு அணியின் சார்பில் நிரோசன் 3 இலக்குகளையும் பார்த்தீபன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம-422)

# வசந்தசிறி, இளவாலை மத்தி. முன்னேறின

யாழ்ப்பாணம், ஜூலை 14

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் வசந்தசிறி, இளவாலை மத்திய வி.கழக அணி என்பன வெற்றி பெற்று முன்னேற்றம் கண்டன. தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகமைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்த சிறி அணியை எதிர்த்து கிளி நொச்சி ஐக்கிய அணி மோதியது. 3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் 2:1 என்ற செற் கணக்கில் வசந்தசிறி அணி வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தல் அச்சுவேலியுத் அணியை எதிர்த்து இளவாலை மத்திய அணி மோதியது. 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது இளவாலை மத்திய அணி. (ம-23)

# வேண்டும் வெற்றிகள்; செரீனாவின் கருத்து

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியனான செரீனா வில்லியம்ஸ், தான் தொடர்ந்து வெற்றிகள்மேல் வெற்றிகளைக் குவிக்க விரும்புவதாகத் தெரிவித்தார்.

தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் நடப்பு வருட விம்பிள்டனைக் கைப்பற்றியதன் மூலம் அதிக கிராண்ட்ஸ்லாம் கிண்ணங்களைக் கைப்பற்றிய ஸ்டெபிகிராப்பின் சாதனையை (22 கிண்ணங்கள்) சமன்செய்தார். இதனையடுத்தே செரீனா இவ்வாறு தெரிவித்தார்.

விம்பிள்டனைக் கைப்பற்றிமை பெருமையாக உள்ளது. கடந்த காலமாக தடுமாறிவந்த எனக்கு தேவையான நேரத்தில் கிடைத்த அவசியமான வெற்றியாக இது அமைந்தது. இந்த வெற்றியின் மூலம் இனிவரும் தொடர்களில் தொடர்ந்து வெற்றிநடை போட முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. தொடர்ந்து வெற்றிகளைப் பெறவே விரும்புகிறேன் என செரீனா மேலும் தெரிவித்தார். (ம)



# கயிறு இழுத்தல் போட்டி

94 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களிடையே நடத்தப்பட்ட கயிறு இழுத்தல் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் முதலிடத்தையும், பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மத்தி துர்க்காபுரம் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் இரண்டாம் இடத்தையும் தமதாக்கின.

ஆண்கள் பிரிவில் இரண்டாமிடத்தை யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும், பெண்கள் பிரிவில், இரண்டாம் இடத்தை ஏழாலை மேற்கு சிறிவிநாயகர் ஐக்கிய நாணய சங்கமும் தமதாக்கின. (ம-17)

# இறுதியில் மேரிஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 14

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது.

13 ஆவது நிமிடத்தில் மேரிஸின் சார்பாக பதிவானது முதல் கோல். 30 ஆவது நிமிடத்தில் யூட் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய, முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற ஏக ஆதிக்கம் செலுத்தியது சென். மேரிஸ். மாற்றங்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது இரண்டாம் பாதி. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் இறுதிக்குத் தகுதி பெற்றது சென். மேரிஸ். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரியோ ஒலிம்பிக் தொடரில் மிரட்ட வருகிறார் போல்ட்

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த மாதம் ஒலிம்பிக் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் ஜமைக்காவின் தடகள அணி யில் போல்ட் இடம் பிடித்துள்ளார்.

நடப்பு வருட ஒலிம்பிக் தொடரில் ஜமைக்காவை பிரதிநிதித்துவம் செய்யவுள்ள வீரர், வீராங்கனைகள் மத்தியில் ஜமைக்கா தடகளச் சம்மேளனம் நடத்திய தகுதிகாண் போட்டிகளில் போல்ட்டும் கலந்துகொண்டார். போட்டிக்கு முன்னதாக உடற்பயிற்சியில் ஈடுபட்டபோது அவரின் பின்னங்காலில் தசைநார் கிழிவு ஏற்பட்டது. இதனால் அவர் ஒலிம்பிக் தொடரில் கலந்துகொள்வதில் சந்தேகம் நிலவியது. ஒலிம்பிக்தொடருக்கு இன்றும் 20 நாள்களுக்கும் அதிகமாக இருக்கின்ற போதிலும் மருத்துவச் சான்றிதழைப் பெறுவதில் சிக்கல்கள் இருப்பதாலேயே இந்தச் சந்தேகம் வெளியிடப்பட்டது. ஆனால் மருத்துவச் சான்றிதழ் இல்லாமல் ஒலிம்பிக்கில் அவர் கலந்துகொள்ள அனுமதி வழங்கியது ஜமைக்கா தடகளச் சம்மேளனம். இதனையடுத்து ரியோ ஒலிம்பிக் தொடரில் போல்ட் கலந்துகொள்வது உறுதியானது. (ம)

# அன்டர்சனுக்காக உருகும் புரோட்

பாகிஸ்தானுக்கு எதிராக லோட்ஸ் மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ள முதல் டெஸ்ட் ஆட்டத்துக்கான இங்கிலாந்து அணியில், முதன்மை வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டுமென, மற்றொரு வேகப்பந்து வீச்சாளரான புரோட் தெரிவித்தார்.

இந்த ஆட்டத்துக்கான குழாம் கடந்த வாரம் அறிவிக்கப்பட்டது. காயத்திலிருந்து மீண்டுவந்துள்ள அன்டர்சனுக்கு அணியில் இடம் கொடுக்கப்படவில்லை. அன்டர்சனின் காயம் முழுமையாக குணமடையவில்லை எனத் தெரிவித்தே இங்கிலாந்து அணியின் தெரிவுக்குழு அன்டர்சனைப் புறக்கணித்தது. ஆனால் இங்கிலாந்துத் தெரிவுக்குழுவின் கருத்தை புரோட் நிராகரித்துள்ளார்.

ஒரு வாரத்துக்கு முன்னர் அன்டர்சனைச் சந்தித்தேன். அணிக்கு திரும்புவதில் அவர் உறுதியாய் இருந்தார். அவர் முதல் டெஸ்ட்டில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் முதல் டெஸ்ட் ஆட்டம் லோட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த ஆடுகளத்தில் வேகப்பந்துவீச்சு எந்தளவு சாதகமாய் அமையும் என்று அனைவரும் அறிந்ததே. பாகிஸ்தானின் பந்துவீச்சுவரிசை ஆமிரின் வருகையுடன் அபாயகரமாக உள்ளது. பாகிஸ்தானுக்கு ஈடுகொடுக்கக்கூடிய வேகப்பந்துவீச்சுக் கூட்டணி அன்டர்சன் இல்லாமல் சாத்தியமில்லை என புரோட் மேலும் தெரிவித்தார். (ம)




# இலங்கைக்கு ஏழாமிடம் டெஸ்ட் தரப்படுத்தலில்

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை டெஸ்ட் ஆட்டங்களுக்கான தனது தரவரிசைப் பட்டியலை நேற்று வெளியிட்டது. குறித்த பட்டியலில் ஆஸ்திரேலியா முதலிடத்தில் உள்ள அதேநேரம் இலங்கை 7 ஆவது இடத்திலுள்ளது.

கடந்த பல மாதங்களாக முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஆஸ்திரேலியா தனது ஆதிக்கத்தை வலுவாக நிலைப்படுத்தி 118 புள்ளிகளுடன் தனது தரப்படுத்தலைத் தக்கவைத்துள்ளது. 112 புள்ளிகளுடன் இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது. 111 புள்ளிகளுடன் பாகிஸ்தான் மூன்றாமிடத்திலும், 108 புள்ளிகளுடன் இங்கிலாந்து நான்காமிடத்திலும் 98 புள்ளிகளுடன் நியூசிலாந்து ஐந்தாவது இடத்திலும் உள்ளன. ஆறு முதல் ஒன்பது வரையான இடங்களில் முறையே தென்னாபிரிக்கா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ்ஆகிய அணிகள் உள்ளன. இலங்கை அணி 85 புள்ளிகளைப் பெற்றுள்ளது. (ம)

# 'எம்மை விட்டு விலகார் மெஸ்ஸி' பார்சிலோனா கழகம் நம்பிக்கை

பார்சிலோனா விளையாட்டுக் கழகத்தை விட்டு மெஸ்ஸி விலக மாட்டார் என அந்தக் கழகம் நம்பிக்கை தெரிவித்தது.

வரி ஏய்ப்புச் செய்தமைக்காக மெஸ்ஸிக்கும் அவரது தந்தைக்கும் 21 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்த பார்சிலோனா நீதிமன்று, மெஸ்ஸிக்கு 2.2 மில்லியன் அமெரிக்க டொலர்களும் அவரது தந்தைக்கு 1.65 மில்லியன் அமெரிக்க டொலர்களும் அபராதமாக விதித்தது. ஆனால் நல்லொழுக்கத்தின் அடிப்படையில் அவர்கள் இருவரும் தமது சிறைக்காலத்தை வெளியிலிருந்தவாறே கழிக்கலாம். எனவே சிறைக்குச் செல்ல வேண்டிய அவசியம் கிடையாது. இந்த வழக்கில் பார்சிலோனா கழகம் மெஸ்ஸிக்கு போதுமான ஆதரவை வழங்கவில்லை.



எனவே பார்சிலோனாவை விட்டு மெஸ்ஸி வெளியேறத் திட்டமிட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகின. இதைத் தற்போது பார்சிலோனா மறுத்துள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பார்சிலோனா அணியின் பேச்சாளர் ஜோசப் விவ்ஸ், கழகத்தை விட்டு மெஸ்ஸி விலக விரும்புகிறார் என நாம் அறியவில்லை. அந்த உணர்வு, எங்களுக்கு ஏற்படவே இல்லை. ஏனெனில் மெஸ்ஸி சிறுவயதிலிருந்தே பார்சிலோனாவுக்காக விளையாடி வந்துள்ளார். அவருக்கு கழகத்தின் மீது அதீத பற்றுள்ளது எனத் தெரிவித்தார். (ம)

நாங்கள் தேடுவது உங்களை...
இலங்கையின் முதல்தர நிறுவனமான எங்கள் நிறுவனத்தின்
கிளிநொச்சி யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கீழ்காணும் துறைக்கு விண்ணப்பங்கள்
கோரப்படுகின்றன.
விற்பனை முகாமையாளர்.
- கல்வித்தகைமை க.பொ.த. சா / க. பொ. த. உ தரம்.
- சந்தைப்படுத்தும் அனுபவம்
- குழு நடைமுறை படுத்தல் அனுபவம்.
- அடிப்படை சம்பளம் / விசேட கொடுப்பனவுகள்.
விற்பனையாளர்.
- பட்டா வாகனம் உடையவர்கள்.
- விற்பனை செய்யும் தகுதி உடையவர்கள்.
- சம்பளம் / கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
அலுவலக சேவைக்கு இரு பாலாரும் தேவை.
- கல்வித்தகைமை க.பொ.த சாதாரணதரம்.
- வயது 18-30
- கணினி பக்க வடிவமைப்பாளர்கள்.
- குறிப்பு :- சிங்களம் பேசத்தெரிந்தவர்கள்.
VACANCY
wijithamaduka@gmail.com
Kilinochchi(Ranga) - 078-2823000
Jaffna(Anandan) - 076-8275326/072-0852107

A/L 2016 தொழிநுட்பப்பிரிவு
மாபெரும் செயலமர்வு
Engineering Technology
காலம் : 16,17 திகதிகளில்
காலை : 8.30 - 4.30 வரை
பிரபல தொழிநுட்ப விரிவுரையாளர்களால்
Mr. ஜெயக்குமார் (Mechanical Engineering)
Mr. காந்தரூபன் (Civil Engineering)
Mr. விஜயபாலா (Electrical & Electronic Engineering)
Mr. அருள்நேசன் (Diploma in Surveyoring)
அனைத்து வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்
Note:- Science for Technology, Bio system Technology 15,17,18,19,20 திகதிகளில்
உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்
இடம்:- பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 220 9651

பணியாளர் வெற்றிடம்
யாழ் நகரில் புடைவை ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர் ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
K.S.T. TEX 127/18 யூப்பிலி பஜார், யாழ்ப்பாணம்
021 222 9470

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.